



மாலை 1. மணி 12.

# ஒரு தே

DIGITIZED

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

1. Messrs. மச்ரா முனுஸ்வாமி செட்டியார …
சென…

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ரா…
எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள்,
சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட்
தேவாரம்.

,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.


6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள்,
மிராஸ்தார், சித்தயன்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10. ,, ஜான் அந்தோனி ஆஜ… அ…
பைரன் வாலி, தேவிகுள…



படங்களுடன் வெளிவந்துலாவும் தேசிய மாஸிகை.

## பொருள் அடக்கம்.


தொடர் நிர். பக்கம்

1. அமெரிக்காவில் இந்தியர்கள்—ஆசிரியர், "பாரதி" ... 833
2. எனது குருநாதரின் கடிதம்—மனோகரன் ... 84…
3. அரசியற் கம்பன்—சுவாமி சுந்தரானந்த பாரதியார் ...
4. ஸர். ஐசக் நியூட்டன்—திரு. K. G. கிருஷ்ணன் [அவர்கள், **B. Sc., (Hons.)** ...
5. தாயின் மணிக்கொடி—திரு. K. கணேசன் அவர்கள்
6 திரு. S. தாணுபிள்ளை—திரு. இராமையாபிள்ளை அவர்கள்
7. தேவாலயச் சீர்திருத்தங்கள்—திரு. என். வேங்கட [ரமணன் அவர்கள் ... 887
8. எமது அபிப்பிராயம்—ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார் 896
9. ஸர். போஸின் அரிய அற்புத ஆராய்ச்சி—ஆசிரியர் ["பாரதி" ... 897
10. ஆராய்ச்சி மேடை ... 909
11. ஆசிரியர் குறிப்புகள் ... 911
   1. சந்தா நேயர்களுக்கு
   2. இந்தியத் தலைவர்களும் இராஜப் பிரதிநிதியும்.

படம்.

1. S. தாணுபிள்ளை.

## போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

3. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T.C.P.A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

5. ,, ராவ் சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்.

றிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |

க்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. ம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப ண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் ானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

---

# "பாரதி"

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

## மாலை 1


பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

வருஷ சந்தா:—
உள் நாடு ரூ. 2—0—0. வெளி நாடு ரூ. 2—8—0.
அல்லது 4 ஷிலிங்.

1929

JAN 1930
சென்னை-600 0

198523



படங்களுடன் வெளிவந்துலாவும்
ஓர் தேசீய மாஸிகை.

# பொருள் அடக்கம்.


| பொருள். | பெயர், | பக்கம் |
|---|---|---|
| அச்சம்— | திரு. பழனிக் குமாரனுர் ... ... ... | 113 |
| அமெரிக்க நாகரீக ஆராய்ச்சி— | திரு. V. V. ஒக், M. A., B. S. J. | 140 |
| அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் விவசாயம் | ,, | 382 |
| அமெரிக்காவில் இந்தியர்கள்— | ஆசிரியர், "பாரதி" ... | 833 |
| அணுக்களும் பதார்த்த வளர்ச்சியும்— | ஸ்ரீமாந் K. G. கிருஷ்ணன் அவர்கள் B. Sc., (Hons.) ... | 517 |
| அரசியற் கம்பன்— | சுவாமி சுத்தானந்த பாரதியார் ... | 849 |
| ஆசிரியர் குறிப்புகள் | | 69, 151, 233, 303, 398, 645, 727, 824, 911 |
| ஆராய்ச்சி மேடை ... ... ... | | 78, 575, 743, 909 |
| ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்— | ஆசிரியர் "பாரதி" ... | 452 |
| ஆரம்ப ஆசிரியர்கள்— | ஸ்ரீமாந். A. ராமஸ்வாமி அவர்கள் | 544 |
| ஆரம்பக் கல்வி— | ஸ்ரீமாந். C. M. ராமசந்திரன் செட்டியார் அவர்கள், B. A., B. L. ... ... | 687 |
| ஆகாய விமானங்கள்— | ஸ்ரீமாந். A. ராமஸ்வாமி அவர்கள் | 714 |
| ஆபிரகாம் லிங்கன்— | ஸ்ரீமாந். T. L. ரகுபதி சர்மா அவர்கள், M. A., L. T. ... ... ... | 812 |
| இராஜா ராம் மோகனராய்— | ஸ்ரீமாந். N. வேங்கட ரமணன் அவர்கள் ... ... ... ... | 56 |
| இலங்கைத் தமிழ் மாதர்கள்— | ஸ்ரீமதி. தையல்நாயகி அம்மையார் | 102 |
| இந்தியரின் வீழ்ச்சி— | ஜனப் வ. மி. ஷம்சுத்தீன் சாகிப் அவர்கள் | 115 |
| இந்தியாவின் வேலை— | ஆசிரியர், "பாரதி" ... ... | 165 |

இங்கிலாந்தில் தொழிற் கல்வி—ஸ்ரீமாந். M. கிருஷ்ண பாரதி அவர்கள், M. A., B. L. ... ... 410
இந்தியாவின் நிலை—ஆசிரியர், "பாரதி" ... ... 577
இன்சூரன்ஸ்—ஸ்ரீமாந். R. M. துரைச்சாமி பிள்ளை அவர்கள் 527
இந்தியர் வாழ்வைப்பற்றி நான் ஏன் இங்கிலீஷில் எழுதுகிறேன்: 637
ஈஸ்வர சந்திர வித்யா சாகரர்—ஸ்ரீமாந். N. வேங்கட ரமணன் அவர்கள் ... ... ... 789
எமது அபிப்பிராயம்—ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார் 896
எனது குருநாதரின் கடிதம்—மனோகரனார் ... 846
என் அன்னையின் பாதாரவிந்தங்களுக்கு (மொழி பெயர்ப்பு) 338
எனது பிரார்த்தனை—ஆசிரியர், "பாரதி" ... ... 745
ஓர் கொலைஞனது காதலின் முடிவு—ஸ்ரீமாந். K. S. மகாதேவன் அவர்கள் ... ... ... 603
கவிதையின் பெருமை—ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மையார் ,, ... ... ... ... 245
கன்னுன கன்னி—ஸ்ரீமாந் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ... ... ... 269
கற்பகம்—ஸ்ரீமாந். S. V. சுப்ரமண்யம் அவர்கள் ... 621
காதல் மணம்—ஸ்ரீமாந். சி. பொ. செல்லையா அவர்கள் ... 497
கிராமங்களின் தற்கால நிலைமை—ஸ்ரீமாந். பழனிக் குமாரனார் அவர்கள் ... ... ... 218
ஸர். ஐசக் நியூட்டன்—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள் B. Sc., (Hons.) ... ... ... 859
ஸர். போவின் அரிய அற்புத ஆராய்ச்சி—ஆசிரியர் 'பாரதி" 897
சர். ஜகதீஸ் சந்திர போஸ்—ஸ்ரீமாந். N. வேங்கட ரமணன் அவர்கள் ... ... ... ... 128
சர்வ கலாசாலைகளுக்கு—ஆசிரியர், "பாரதி" ... 325
சமூகக் கொடுமைகள்— ,, ,, ... ... 748
சீனாவின் முற்போக்கு—ஸ்ரீமாந் N. வேங்கடரமணன் அவர்கள் 562
சுப்ரமண்ய பாரதியார்—ஸ்ரீமாந் சோமசுந்தர பாரதியார் அவர்கள், M. A., B. L. ... ... 53
சுதேச கைத்தொழில்கள்—ஸ்ரீமாந். T. N. வெங்கிடேசன் அவர்கள் ... ... ... 281
சுதந்திரப் படையெழுச்சியின் தூசு—ஸ்ரீமாந், பா. ஆதிமூர்த்தி அவர்கள் ... ... ... 666



சுதந்திரப் போரின் களப்பலி—ஸ்ரீமாந். பா. ஆ. அவர்கள் 670
செய்தித் திரட்டுகள் ... ... ... 80, 160, 239
செந்தமிழ் அன்னையின் திருப்பள்ளி எழுச்சி—ஜனுப். K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் ... ... 163
சொற்றிறம்பாமை—ஸ்ரீமாந் M. S. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், B. A., B.L. ... ... 371
டாக்டர் சுதீந்திர போஸ்—ஸ்ரீமாந். N. வேங்கடரமணன் அவர்கள் 468
தமிழ் நாடு ... ... ... ... ... 4
தமிழ் தெய்வ வணக்கம் ... ... ... 5
தமிழ் வேதம்—ஸ்ரீமாந். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், B. A., B. L. ... ... ... 43
தமிழர்—ஸ்ரீமான். பண்டித அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 95
தமிழர் கலைமகழ்— ,, ... ... ... 177
தமிழா—ஸ்ரீமாந். சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 268
தமிழ் மொழி—ஸ்ரீமாந் சி. பொ. செல்லையா அவர்கள் ... 295
தமிழரும் பாரதிப் பத்திரிகையும்—ஆசிரியர், "பாரதி" ... 405
தமிழ் நாடு—ஜனுப் K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் 668
தாயின் மணிக்கொடி—திரு. K. கணேசன் அவர்கள் ... 871
தியாகத்தின் பெருமை—மயிலை ஸ்ரீமாந் ரத்னசபாபதி முதலியார் அவர்கள் ... ... ... ... 137
திருக் குறள்—ஸ்ரீமதி. P. S. அரங்கநாயகி அம்மையார் ... 343
திரு. S. தாணுபிள்ளை—திரு. இராமையாபிள்ளை அவர்கள் 875
திரு. நபியவர்களின் திவ்ய சரிதம்—ஜனுப் S. S. மகம்மது அப்துல்காதர் சாகிப் அவர்கள் (பாகவி) 523
தேசாபிமானம் ... ... ... ... ... 28
தேசிய ஒற்றுமை—மனோகரனார் ... 147, 227, 374 511
தேவாலயச் சீர்திருத்தங்கள்—திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ... ... 887
தேவியின் துயரம்—அளகை ஸ்ரீமாந் M. பொன்னுச்சாமி அவர்கள் ... ... ... 248
தேசமதா தேவாரம்—ஸ்ரீமாந். பா. ஆதிமூர்த்தி அவர்கள் 322
Thank God for my Garden—By Leland J. Berry Esq. ... 324
தேசாபிமானம்—தென் ஆப்ரிக்காவிலிருக்கும் ஸ்ரீமாந். ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... 560

தொழிலாளர்—ஸ்ரீமாந். K. கோவிந்தராஜன் அவர்கள் ... 783
தொழிற் கல்வி—ஸ்ரீமாந். A. நடேச பிள்ளை அவர்கள் ... 801
**நமது நந்தவனம்**—ஸ்ரீமாந். சூரியநாராயண
சாஸ்திரியார் அவர்கள், M. A., L. T. ... 67
நமது கடமை—ஸ்ரீமாந் மு. க. சுப்ரமண்யம் அவர்கள் ... 217
நமக்கு என் சுயராஜ்யம் வேண்டும்—ஸ்ரீமாந்.
முனகால S. பட்டாபிராமய்யர் அவர்கள் ... 430
நல்லன கொள்ளல்—ஸ்ரீமாந். வீ. மு. பொன்னையா அவர்கள் 540
நம்பூதிரி மாதர்களின் எழுச்சி—ஆசிரியர், "பாரதி" ... 678
நாகரீகமென்மது யாது? ஸ்ரீமான் K. G. கிருஷ்ணன்
B. Sc. (Hons) 251
நாடகம்—இ. சிவனர் ... ... ... 114
நூல் நிலைய இயக்கம்—ஸ்ரீமாந். S. K. வேம்பு அவர்கள் 595
நெல்—வக்கீல் ஸ்ரீமாந். நடேச பிள்ளை அவர்கள் ... 285
நைட்டிங்கேல் அம்மையார்—ஸ்ரீமாந். T. L.
ரகுபதி சர்மா அவர்கள், M. A., L. T. ... 256
**பரம்பொருள் வணக்கம்** ... ... ... ... 1
பண்டை இந்திய மாதர்கள்—ஸ்ரீமதி. பண்டிதை
அசலாம்பிகை அம்மையார் ... ... ... 49
பரதகண்டத்தின் பெருமையும் தற்காலத்
தன்மையும்—ஆசிரியர், "பாரதி" ... ... 290
பர்மாவில் வாழும் தமிழ் மக்கள்—ஸ்ரீமாந். K. G.
கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) ... 420
பர்மாப் பிரிவினை— „ ... ... ... 474
பரீந்திர குமாரகோஷ்—ஸ்ரீமாந். N. வேங்கடரமணன் அவர்கள் 588
பர்மிய மாதர்கள்—ஸ்ரீமாந். K. G. கிருஷ்ணன்
அவர்கள், B. Sc., (Hons.) ... ... ... 612
பர்மா தேசம்— „ ... ... ... ... 766
**பாரத நாடு**—ஸ்ரீமாந். திரு. வி. கல்யாணசுந்தர
முதலியார் அவர்கள் ... ... ... 2
**பாண்டி நாடு** ... ... ... ... ... 4
"**பாரதி**"யில் வெளிவரும் விஷயங்கள்—ஆசிரியர், "பாரதி" 25
பாஷாபிமானம்—பண்டிதை ஸ்ரீமதி பத்மாசனி அம்மையார் 34
"பாரதி" உதயம்—ஸ்ரீமாந். சுவாமி சுத்தானந்த
பாரதியார் அவர்கள் ... ... ... 40



"**பாரதி**"யின் **வணக்க வரவேற்பு**—ஸ்ரீமாந்.
M. S. சுந்தரம் அவர்கள் ... ... ... 82
"**பாரதி**"யின் **வாழ்த்துப்பா**—ஸ்ரீமதி P. S.
அரங்கநாயகி அம்மையார் ... ... ... 83
"பாரதி"க்கு ஆசிகள் ... ... ... 183, 331
பாரதியார் கவிநயம்—பண்டிதை ஸ்ரீமதி பத்மாசனி அம்மையார் 190
பாரதியே!—ஸ்ரீமாந். S. கிருஷ்ண பாரதி அவர்கள் ... 226
**பாரதி வாழ்த்துப்பா**—பண்டிதை ஸ்ரீமதி பாலாம்பிகை
அம்மையார் ... ... ... ... 321
**பாரதி சப்பாணி**—ஜனப் K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் 401
"**பாரதி**" **திருப்பள்ளி யெழுச்சி**—ஜனப் P. S. M. E.
முகம்மது யாக்கூப் சாகிப் அவர்கள் ... 403
**பாரதியைப் பற்றி**—ஸ்ரீமாந். பா. ஆதிமூர்த்தி அவர்கள் 473
பெண்மை—பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார் 464
புஸ்தக ஆசிரியர்களுக்கு—ஆசிரியர், "பாரதி" ... 85
புத்தகாலய இயக்கம் ... ... ... ... ... 205
புதிய ஜப்பான்—திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... 209
புரொபஸர் எஸ். ராதாகிருஷ்ணன்— „ ... ... 348
மலையாளத்து மாதர்கள்—ஆசிரியர், "பாரதி" ... 241
**மகாத்மா வாழ்க!**—திரு. சி. சுப்ரமண்ய பாரதியார் அவர்கள் 665
மகாத்மா காந்தி அவர்கள் சஷ்டி பூர்த்தி—ஆசிரியர், "பாரதி" 672
மாதர் விடுதலை—ஸ்ரீமதி. P. S. அரங்கநாயகி அம்மையார் 107
மாதர் உரிமை— „ ... ... ... 507
முகவுரை—ஆசிரியர், "பாரதி" ... ... ... 5
மூட வழக்கங்கள்—திரு. முனகால S. பட்டாபி
ராமய்யர் அவர்கள் ... ... 195, 270, 354
யதீந்திரரின் வெற்றி—திரு. தாமஸ் பாலையா ... ...270. 632
யதீந்திரரது தந்தையின் பிராயச்சித்தம் ... ... 664
வாலிபர்களுக்கு எச்சரிக்கை—திரு. இராஜா ராம் M. கொம்டா 300
வில்லியம் டெல்—திரு. M. பொன்னுச்சாமி அவர்கள் ... 597
வீர வாழ்வும் பாரத நாடும்—திரு. பா. ஆதிமூர்த்தி அவர்கள் 119
வீரர்—திரு. து. சுப்பையா பிள்ளை அவர்கள் ... 123
**வேண்டும்** ... ... ... ... ... 81
"**வாழிய பாரதி**"—திரு. பா. ஆதிமூர்த்தி அவர்கள் ... 161

ஸாவர்க்காரின் கடிதம் ... ... ... 805
ஸ்வாமி விவேகானந்தரது கடிதம் ... ... 583
ஜேம்ஸ் ஆலன்—ஆசிரியர், "பாரதி" ... ... 697
ஹரிகோவிந்து கோவில் ... ... ... ... 483

படங்கள்.

1. மகாத்மா காந்தி
2. இராஜா இராம் மோகனராய்
3. பண்டித மோதிலால் நேரு
4. ஆப்கன் அமீர் அமானுல்லா
5. ஸர். ஜகதீஸ் சந்திர போஸ்
6. சரோஜனி தேவியார்
7. சுப்ரமண்ய பாரதியார்
8. ஸ்வாமி விவேகானந்தா
9. மகாத்மா காந்தி
10. யதீந்திரநாத் தாஸ்
11. ஜேம்ஸ் ஆலன்
12. டாக்டர் அன்னி பெசண்ட்
13. டாக்டர் சுதீந்திர போஸ்
14. ஹரி கோவிந்து கோவில்
15. ஈஸ்வர சந்திர வித்யா சாகரர்
16. இந்திய நெப்போலியன் ஸாவர்க்கார்
17. பர்மிய மாது-ஆடவன்



23 JAN 1930



S. தாணுப்பிள்ளை,
திருவாங்கூர் சமஸ்தான ஜோதிடர்

# பாரதி

## ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

| மாலை | உத்தமபாளையம் | மணி |
|---|---|---|
| 1 | 1929-ஞு டிசம்பர்மீ | 12 |

# அமெரிக்காவில் இந்தியர்கள்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி"

எம்மருமைச் சகோதரர்களே! நமது பெருமை பொருந்திய கலை ஞான, ஆத்மீக அற இந்தியாவை, நினைக்கும்பொழுதெல்லாம் நமக்கு எவ்வளவு உயரிய ஊக்கமும் உணர்வும் உண்டாகிறது! எமது தேசம், நாகரீகத்தில் ஒவ்வொரு தேசத்திற்கும் எவ்வளவோ அளித்திருக்கிறது. இப்பொழுது இந்தியாவிற்கு உலகத்தில் அந்தஸ்து இல்லாமற் போய்விட்டது காரணம்? இந்தியா தனது உரிமையை

யிழந்து அடிமையாகிவிட்டது. இந் நாட்டின் பண்டைப் பெருமைகளைப் பற்றி அயல் நாட்டு அறிஞர் சொல்லுவதைக் கவனியுங்கள். "இயற்கையாற் கொடுக்கப்பெற்ற அழகு, ஆர்வம், ஐஸ்வர்யம் முதலியவைகள் அனைத்தும் அதிகமாகப் பொலிவுற்று மோட்ச லோகம் போன்ற தேசம் உலகமுற்றிலும் எது? என்று என்னைக் கேட்டால், இந்தியா வென்றே சொல்வேன். ஜீவிய தத்துவங்களைப் பற்றிய பிரச்சினைகளுக்கு வழிகள் கண்டுபிடித்து மனதை உயர்வாக எத் தேசம் விருத்தி செய்திருக்கிறது? என்று என்னை வினவினால், இந்தியாவையே காட்டுவேன். கிரேக்கர்களுடையவும் ரோமர்களுடையவும் கருத்துக்களை விருத்தி செய்துவரும் நமக்கு நம் ஜீவியத்தைச் சரியாயும் ஒழுங்காயும் சம்பூரணமாயும் பண்படுத்தும்படியான இலக்கியங்கள் எத்தேசத்திலிருக்கின்றன வென்று என்னை விசாரித்தால், நான் மறுபடியும் இந்தியாவென்றே குறிப்பிடுவேன்" என்று பெரும் பண்டித சிகாமணி மாக்ஸ் முல்லர் கூறுகின்றார். "ஆசியாக் கண்டத்தின் மற்றப் பாகங்கள் மட்டுமேல்ல ஆனால் உலக முற்றுமே இந்தியா விடமிருந்து அறிவை அடைந்திருக்கிறது" என்று அறிஞர் ஹீரன் எழுதுகிறார். "இந்திய நாகரீகம் உலகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் பரவி யிருக்கிறது. அமெரிக்காவிற்குச் செல்லுங்கள். ஐரோப்பாவிலிருப்பதுபோலவே அமெரிக்காவிலும் இந்திய நாகரீகத்தைக் காண்பீர்கள்" என்று டெல்பாஸ் (Delbos) கூறுகிறார். இவ்வாறு விஷயங்கள் இருப்பதால் உலகமே இந்தியாவிற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

பெருங் கோட்டை கொத்தளங்களும் நகரங்களும் இடிந்து அழிந்து போயிருக்கும் சின்னங்களும், குளங்களும், கால்வாய்களும் வரண்டு தூர்ந்து மண் மூடிப் போயிருக்கும் அடையாளங்களும் அமெரிக்காவில் இன்னும் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் அமெரிக்கா உயர்ந்த நாகரீகம் வாய்ந்த தேசத்தாரால் குடியேறப் பட்டிருக்க வேண்டுமென அச் சின்னங்கள் வலியுறுத்துகின்றன. இந்த உயர்ந்த நாகரீகம் அமெரிக்காவிற்கு எங்கிருந்து எப்படி வந்தன வென்று அறிவாளிகள் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். "இந்திய நாகரீக அடையாளங்கள் இன்னும் அமெரிக்கா



விற் காணப்படுகின்றனவென ஜெர்மன் தேசத்துப் பெரிய சாஸ்திரீகரும் யாத்திரீகருமான ஹம்போல்ட் பிரபு விவரிக்கிறார்" என்று கோல்மன் எழுதுகிறார். சர்ப்ப வணக்கம், புராதனக் கொள்கைகள் முதலியவைகளைப் புராதன இந்தியர்களைப் போன்றே தென் அமெரிக்கர்கள் அனுஷ்டித்தார்கள் என்பதற்கு அநேக அத்தாட்சிகள் அங்கிருப்பதாகப் புராதன ஆராய்ச்சிக் காரர்கள் சொல்லுகிறார்கள். மெக்ஸிகர்கள் வணங்கிய யானை முகமுடைய கணேச உருவத்தைக் கண்டதாக ஹம்போல்ட் பிரபு கூறுகின்றார். இராமரையும் சீதையையும் தென் அமெரிக்காவில் பெருவியன்கள் (Peruvians) வணங்குகிறார்கள். தசரா பண்டிகையைப் போன்றதொரு உற்சவம் அங்கு ஆண்டுதோறும் நடைபெறுவதாக சர் வில்லியம் ஜோன்ஸ் கூறுகிறார். அர்ஜுனன் பாதாள ராஜன் மகள் உலூபி என்பவளை மணம் செய்து கொண்டதாகப் பாரதம் அறிவிக்கின்றது. ஆகையால் அமெரிக்காவைச் சமீப காலத்தில் கொலம்பஸ் தான் கண்டு பிடித்தான் என்று சொல்வதில் பெருமையில்லை. ஜப்பான், சீனம், ஆப்பிரிக்கா முதலிய அநேக தேசங்களில் இந்தியர் ஆதி காலத்தில் நுழையாமலில்லை. பாபிலோன் தேசத்து அரசன் செலுக்கியஸ் மகளைச் சந்திரகுப்த ராஜன் விவாஹம் செய்ததாகச் சரித்திர வாயிலாக அறிகிறோம். ரோம் தேசத்தாருடன் தமிழர்கள் வியாபாரம் நடத்தியிருக்கிறார்கள். ரோம் தேசத்துப் பெண்கள் பாண்டிய அரச சபையில் இருந்தார்களெனக் காவியங்கள் கூறுகின்றன.

அப்பொழுது இவ்வாறெல்லாம் புராதனப் பெருமையுற்ற இந்தியா இப்பொழுது தன் செல்வமெல்லாம் சிதைந்து கலைகளெல்லாம் கைவிடப்பட்டுச் சீரும் சிறப்பும் இழந்து தரித்திரத்தில் மூழ்கி அடிமையாய் நசுக்கப்பட்டுக் கிடந்து தவிப்பதைப் பற்றி அதிகமாய் எழுதுவதோ பேசுவதோ எமக்கு மிக மிகக் கசப்பாயிருக்கிறது. நேற்று வரை பரத கண்டத்தை மதித்த தேசங்கள் இன்று இந்தியாவை அடிமைத் தேசமென்று நினைத்துக் கேவலமாக நடத்துவதைக் கண்ட எந்த இந்தியனும் வருந்தாமலிருக்க முடியாது.

## நிற வெறுப்பு

உலகில் வெள்ளைக்காரர்கள் செல்வாக்கடைந்தது முதல் உலக சமாதானம் குன்றி வருகிறதென்று சர்வ தேச சங்கதிகளை நன்கு உணர்ந்த எவருக்கும் நன்றாய்த் தெரியும். வெள்ளைக்காரர் நிறச் செருக்காலும், பணக் கொழுப்பாலும், செல்வாக்காலும், ஜாதி அகங்காரத்தாலும், ராணுவத் திமிராலும் வேறு நிறத்து மனிதர்களுக்குச் செய்த-செய்துகொண்டிருக்கிற கொடுமைகள் பலவாகும். ஐரோப்பாவில் வாழும் வெள்ளைக்காரர்கள் உலக முழுவதையும் தங்கள் ஆதீனத்தின் அடியிற் கொண்டுவரப் பேராசையுடன் தீவிரமான வேலைகள் செய்துகொண்டிருக்கிறார்கள். கருப்பு, பழுப்பு, சிவப்பு, கபிலை ஆகிய நிறத்தினர்கள் வாழும் ஆசியா ஆப்பிரிக்காக் கண்டங்களைப் பல துண்டுகளாக வெட்டித், தம் தம் ஆட்சிக்கு உட்படுத்தி விட்டார்கள். அன்றியும் மேற் குறித்த கண்டங்கள் இரண்டிலும் அவர்களது ஆட்சிக்கு அகப்படாது சுயேட்சையுடன் இருக்கும் நாடுகளுக்கு எவ்வளவு இடைஞ்சல் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து கொண்டு வருகிறார்கள்.

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்காக் கண்டங்களில் வாழ்ந்து வந்த நீகிரோவர்களையும் வெள்ளையர்கள் அதம் பண்ணி விட்டு, மீதி யிருந்த சுதேசிகளையும் தமக்கு அடிமைகளாக்கி அட்டகாசம் செய்கின்றார்கள். வட அமெரிக்கா தென் அமெரிக்காக் கண்டங்களும் வெள்ளையாகி விட்டன. இப்பொழுது ஆப்பிரிக்காவையும் அதேபோல் ஆக்க முயலுகின்றார்கள். அங்கு நமது இந்திய சகோதரர்களுக்கு இழைத்து வரும் இன்னல்களைச் சொல்லிமுடியாது. இனி அடுத்த கண்டம் ஆசியா. இதில் ஜப்பானும் சைனாவும் ஆப்கனிஸ்தானமும் ஒரு வகையில் நேபாளமும் பூத்தானமும் தவிர்த்து மற்ற நாடெல்லாம் இவர்கள் ஆதீனமே. இன்னும், ஆஸ்திரேலியாவில் இவர்கள் புதிதாக நுழைந்து அதைத் தங்களுக்கென ஆக்கிக்கொண்டார்கள். ஐரோப்பாவை மட்டும் சொந்தமாகக் கொண்ட வெள்ளைக்காரர்கள் உலகில் ஐந்து கண்டங்களையும் தங்கள் ஆதீனத்திற் கொண்டுவர எல்லாவித சூழ்ச்சிகளையும் செய்து கொண்டு வருகிறார்கள்.



தங்களுடன் மற்ற நிறத்தவர்கள் சமத்துவமும் சுதந்திரமும் அடையத் தகுதியற்றவர்களென்ற அகங்காரம் கொண்டு தாங்கள் வசிக்குமிடங்களி லெல்லாம் மற்றவர்களைத் தாழ்த்தியே வருகிறார்கள். சில நாட்டில் வேறு நிறத்தவர்கள் குடியேற முடியாதபடி வெள்ளைக்காரர்கள் சட்டங்களை ஏற்படுத்தித் தடை செய்து துரத்துகிறார்கள். நிறத் துவேஷம் வளர்ந்து கொண்டு வருகிறது. இம் மாதிரியே நிற பேதம் விருத்தியாகிக் கொண்டு போனால் உலகில் நிறப் போர் நிகழுமென்று நாம் எச்சரிக்கிறோம்.

## அமெரிக்கா

அமெரிக்கா ஜனநாயக ஆட்சி நடை பெறும் நாடு. ஜார்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், ஜெனரல் கார்பீல்ட் முதலிய சுதந்திர வீரர்கள் ஜனநாயக ஆட்சியைப் பலமாய் ஸ்தாபித்த அமெரிக்க நாடு இப்பொழுது எப்படி யிருக்கிறது? ஒரு சுதந்திர நாடு இனியொரு தேசத்தை அடிமையாய்ப் பார்க்காது; ஆனால் அதை உடனே விடுவிக்க வேலை செய்யும். உண்மைச் சுதந்திரத்திற்குத் தேச வித்தியாசம் உண்டோ? மத வித்தியாசம் உண்டோ? ஜாதி வித்தியாசம் உண்டோ? பாஷை வித்தியாசம் உண்டோ?

அமெரிக்கர்கள் நீகிரோவர்களுக்குச் செய்து வரும் அநீதங்களுக்கோர் அளவே கிடையாது. வேறு நிறத்தவர்களை வேரறுக்க கு கிளக்ஸ் கிளான் (Ku Klux Klan=K. K K.) என்ற ஒரு இரகசியக் கிளர்ச்சிச் சதிகாரச் சபை ஒன்று கிளம்பி யிருக்கிறது. இந்த இயக்கத்தால் கொலைகளும் கொள்ளைகளும் பல பாதகங்களும் அமெரிக்காவில் இன்று கணக்கின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைப் பற்றி ஒரு கட்டுரை "பாரதி"யில் விரைவில் எழுதப்படும். நமது இந்திய சகோதரர்கள் அமெரிக்காவில் குடி புக முடியாதவாறு இப்பொழுது சட்டங்களை ஏற்படுத்தி இந்தியர்களை அமெரிக்கர்கள் அவமதித்து விரட்டுகிறார்கள். எங்கும் இப்பொழுது வெள்ளைக்காரர் ஆதிக்கமே அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மண்ணாசை கொண்டு மற்ற நிற மனிதர்களை இவ்வாறு அடக்குவது மிலேச்சத் தனமாகும். இதுதான் 20-ம் நூற்றாண்

டின் அமெரிக்க நாகரீகமோ? அமெரிக்கச் சட்டமோ? அமெரிக்க நியாயமோ? அமெரிக்க தேச தர்மமோ? அல்லது ஜனநாயக ஆட்சியின் பலனாக உதயமாகும் சுதந்திர உணர்ச்சியோ? அமெரிக்காவில் இந்தியர் நிலை எவ்வாறிருக்கிறதென்று அறிந்து கொள்வது நம்மில் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

## இந்தியருக்கு அமெரிக்கப் பிரஜா உரிமை

சில ஆயிரக் கணக்கான இந்தியர் அமெரிக்காவிற்குப் பற்பல விஷயங்களை முன்னிட்டுச் சென்று அங்குச் சிறு சிறு தொழில்களைச் செய்து கொண்டிருப்பினும், அவர்களில் சுமார் 700 பெயர்களே அமெரிக்கருக்குள்ள சுதந்திரத்தைப் பெற்றவர்கள். அநேக தேசங்களில் கொஞ்ச காலம் அதாவது 5 வருடம் வசித்தாலேயே பிரஜா உரிமை கிடைத்து விடுகிறது. ஆதியில் இந்தியர்களுக்கு அமெரிக்காவில் தேச உரிமை கிடையாது. 1790-ம் வருஷல் செய்த குடியேற்றச் சட்டத்தால் இந்தியருக்கு இடம் கிடைத்தது. பஸிபிக் கரையோரத்தைச் சேர்ந்த தென் மாகாணங்களில் இன்னும் நிறத் துவேஷம் அதிகமாகவே யிருக்கிறது. 1870-ம் வருஷ சட்டப்படி ஐக்கிய மாகாணங்களில் பிறந்தவர்களுக்கும் இருப்பவர்களுக்கும் பிரஜா உரிமை ஏற்பட்டது. காக்கேஸிய ஜாதியார் என்ற முறையில் இந்தியருக்குப் பிரஜாதிபத்யம் வழங்கப்பட்டது. அக்காலத்திலிருந்து இந்தியரில் சிலர் பூமிகளை வாங்கினார்கள், சிலர் விவசாயத்தில் பிரவேசித்தார்கள். அநேக இந்திய மாணவர்கள் அமெரிக்கா சென்று சர்வ கலாசாலைகளில் வாசித்துத் தேர்ச்சி பெற ஆரம்பித்தார்கள். சிலர் அமெரிக்க மாதர்களை மனமுவந்து மணந்து அங்கு வசிக்கலானார்கள். ஸ்ரீமத் ஸ்வாமி விவேகானந்தா அவர்கள், சிகாகோ சர்வமத மகா சபையில் சபா ரஞ்சிதமாகப் பேசி இந்தியாவின் பெருமைகளை விளக்கிக் காட்டிய காலத்திற்குப் பிறகே சில ஹிந்து சந்நியாசிகளும் அங்குச் செல்லலானார்கள். இந்தியர்களும் பல துறைகளில் பலர் சென்றார்கள். பொதுவாக இந்தியர்கள் அமெரிக்காவை மிகவும் நேசித்தார்கள். கையிற் காசின்றி அமெரிக்கா சென்று பாடுபட்டுப் பணத்தைத் தேடிக்கொண்டே சில மாணவர்கள் படிக்கத் தைரியத்துடன் சென்றார்கள்.



## அமெரிக்காவில் இந்தியருக்கு அநீதி

பணமற்ற இந்தியர்கள் அமெரிக்காவிற்கு வந்தால் நாட்டின் செல்வம் குறைந்துவிடுமென்றும், தொழில் செய்து பிழைக்க வந்தால், தங்கள் நாட்டுத் தொழிலாளர்க்குக் கிடைக்கும் பணம் அயல் நாட்டு மனிதருக்குக் கிடைத்துவிடுகிறதே யென்றும் குறுகிய நோக்கங் கொண்டு பொருளற்று அங்கு செல்லும் இந்தியர்களுக்கு அமெரிக்காவிற்குட்செல்ல சில வருஷங்களாக அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். பணமின்றிச் செல்லும் மாணவர்கள் அமெரிக்காவிற் சம்பாதித்துக்கொண்டே படிப்பதால் அமெரிக்காவிற்கு நஷ்டமாய்விடுகிறதாம். மாணவர்கள் அமெரிக்கா செல்லுவதற்கும் இப்பொழுது எத்தனையோ தடைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

ஸ்ரீமான் திண்ட் என்ற இந்தியரது விஷயமாய் 1923-ம் வருஷல் அமெரிக்கப் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. 1924-ம் வருஷல் ஸ்ரீகான் என்பவருடைய பிரஜாதிபத்தியமும் மறுக்கப்பட்டது. இத்துடன் 45 இந்தியர்களின் அமெரிக்க உரிமைகள் தள்ளப்பட்டன அமெரிக்கரது புதிய மனப் போக்காலும் சட்டத்தாலும் அங்கு இந்தியர்கள் தங்களுக்கென ஒன்றை விலைக்கு வாங்கவோ விற்கவோ குத்தகைக்கு விடவோ வாங்கவோ முடியாது; இளங் குழந்தைகளுக்குக்கூட இந்தியர் போஷகதாரராக இருக்கப் பாத்யம் கிடையாது. ஒரு அமெரிக்கப் பெண்ணை ஒரு இந்தியன் விவாகம் செய்ய அனுமதிச் சீட்டு அளிக்கப்படுவதில்லை. நிலையற்ற (Stateless) மனிதர்களான இந்தியர்களை விவாகம் செய்துகொண்ட அமெரிக்கப் பெண்கள், தங்களது பிரஜா உரிமைகளையும் இழக்க நேரிடுகிறது. தியாகத்துடன் ஒரு இந்தியரை மணந்து நிலையற்றுக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஸ்ரீமதி மேரி தாஸ் என்ற அமெரிக்க மாது அமெரிக்கச் சர்க்காருடன் இது விஷயமாய் எவ்வளவோ நடபடிக்கை செய்தும் பயனில்லை. நிலையற்ற இந்தியர்களை மணந்து அமெரிக்கப் பிரஜா உரிமையை இழந்தும் இந்தியப் பிரஜா உரிமை கிடைக்காமலும் திண்டாடும்.

அமெரிக்கப் பெண்கள் நிலை பரிதாபம் பரிதாபம். அமெரிக்கப் பிரஜா உரிமையுடைய இந்தியர்களை மணந்த அமெரிக்கப் பெண்களுக்குத் தங்களுடைய கணவர்களுக்குப் பிரஜா உரிமை நீக்கப்பட்டவுடன் அவர்களுடைய பிரஜா உரிமையும் போய்விடுகிறது. ஒரு ஆங்கிலேயனையோ, ஒரு ஜெர்மனியனையோ, ஒரு பிரன்ச்சுக்காரனையோ ஒரு அமெரிக்க மாது மணக்கலாம். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது; ஆனால் ஒரு இந்தியனை மணக்கச் சம்மதம் கொடுக்கப்படுவதில்லை. காதல் மணம் காதல் மணம் என்று கத்தும் அமெரிக்க மணமுறை இதுதானோ? இந்தக் கஷ்டத்திற்கு என் செய்வது?

ஒரு இந்தியன் அமெரிக்கப் பிரஜா உரிமை பெற்றுவிட்டவுடன் அவனுடைய பிரஜா உரிமையும் பிரிட்டிஷ் பிரஜா உரிமையும் போய்விடுகின்றன. இவ்வாறு இந்தியப் பிரஜாதிபத்தியத்தையும் பிரிட்டிஷ் பிரஜாதிபத்தியத்தையும் இழந்து கடைசியில் நம்பியிருந்த அமெரிக்கப் பிரஜா உரிமையையும் ஒருவன் இழந்துவிட்டால் அவன் கதி என்ன? அவன் மனைவியின் கதி என்ன? என்று நினைத்துப் பாருங்கள். தாய் நாட்டையும் தலைமை நாட்டையும் அபிமான நாட்டையும் இழந்து தவிக்கும் நிலையற்ற ஒருவனுக்கு எந்த நாடும் சொந்தமில்லாமற் போகிறது. அமெரிக்காவில் தங்கிக்கொண்டே இனியொரு நாட்டில் பிரஜா உரிமை அடைவது முடியாத காரியம். மறுபடியும் இந்தியா சென்று வாழலாமென்றாலோ, குறைந்த பட்சம் 5 வருடங்கள் இந்தியாவில் வசித்தால் மட்டுமே இந்தியா மந்திரியினிடமிருந்து இந்தியப் பிரஜா உரிமைச் சீட்டுக் கிடைக்கும். வேறு நாட்டுக்குச் சென்றாலும் இதே மாதிரியாகத்தான் குறைந்தது 5 வருடங்கள் தங்கிய பிறகே பிரஜா உரிமை கிடைக்கின்றது. சர்வ தேச சம்பந்தமாக இது விஷயமாய் அமெரிக்கச் சர்க்கார் நல்ல சட்டம் உண்டாக்கியிருக்கிறார்கள்! வெகு சிக்கல்!! அதிகக் கேவலம்!!!

## அமெரிக்கரின் நடத்தை

உலகம் போற்றும் கவிச் சக்கரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர் அவர்களை, அவரது பிரயாணச் சீட்டைக் காட்டவேண்டுமென அகௌரவமாக நடத்தியதால், "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்ற முதுமொழிக் கிணங்க அமெரிக்காவிற்குள் செல்லாது அவர் திரும்பிவிட்டார். லாஸ் ஏன்ஜலீஸ் (Los Angeles) என்ற நகரத்தில் ஒரு பெரிய கட்டிடம் கட்டி அநேக அறிஞர்களையும் பெண்மணிகளையும் சீடராக்கித் தன்னடக்க உபதேசம் செய்துகொண்டிருக்கும் இந்தியச் சந்நியாசி ஸ்வாமி யோகானந்தரை மிஸ் மேயோவின் புஸ்தக விஷமப் பிரச்சாரத்தால் சந்தேகம் கொண்டு தாக்க எத்தனித்த அமெரிக்கர்களை என்னென்போம்?



## இந்தியருக்குப் பாரபட்சம்

ஐரோப்பியனோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள எந்த வெள்ளையனோ அமெரிக்காவில் இன்று பிரஜாதிபத்தியம் அடைந்து விடலாம். ஆனால் ஒரு இந்தியன் அவ்விதம் அடைய முடியாது. காரணம்? நிறம் பேதமும் நமது நாட்டுக்குச் சுதந்திரமும் இல்லாததுமே. ஜன நாயகத்தை உலகிற்கு உபதேசம் செய்யப் புறப்பட்டிருக்கும் அமெரிக்கர், இவ்வாறு ஒரு கண்ணில் வெண்ணெயும் இனி ஒரு கண்ணில் சுண்ணாம்பும் தடவுவது நியாயமா? என்று நாம் கேட்கிறோம். இது விஷயமாய் திரு. பென்னர் பிராக்வே, பார்லிமெண்டில் கேள்வி கேட்டபொழுது 30* இந்தியர்களுக்கு அமெரிக்க உரிமைகள் நீக்கப்பட்டதென்றும் பிரஜா உரிமை பெற்றிருக்கும் மீதி இந்தியர்களின் உரிமைகளை ரத்துச் செய்யும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டாலொழிய அமெரிக்க அரசாங்கம் இனிமேல் ஒன்றும் செய்யப்போவதில்லையென்றும் இந்தியா மந்திரி அறிவித்தாராம். அதற்காக நாம் அமெரிக்கர் விஷயங்களில் அடங்கியிருக்கவேண்டும் போலிருக்கிறது. "சும்மா இருக்கட்டுமா சொரூபத்தைக் காட்டட்டுமா?" என்ற கதை மாதிரியாய் இது இருக்கிறது.

* உண்மையிலேயே 45 பேர்கள்.

இந்தியாவின்மேற் பற்றுக்கொண்ட ஆங்கிலேயரும் அமெரிக்கரும், விசால நோக்கம் படைத்த டாக்டர் சண்டர்லாண்டு போன்ற அறிஞர்களும் கிறிஸ்தவ பாதிரிகளும் அமெரிக்கர்களுடைய இச்சட்டத்தைக் கண்டித்து இந்தியாவிற்கு நியாயம் வழங்கவேண்டுமெனப் போராடியும் பயனேற்படவில்லை.

## இந்தியாவிற் கிளர்ச்சி

இந்தியாவில் இது விஷயமாகப் பத்திரிகைகளின் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் கிளர்ச்சி செய்ததின் பயனாக இந்திய சர்க்கார் அமெரிக்கக் கவர்ண்மெண்டாருக்கு எழுதியதின்பேரில் இனிமேல் இந்தியர்களுடைய உரிமைகளை நீக்குவதில்லை என்று அமெரிக்கச் சர்க்கார் சொல்லியிருக்கிறார்களாம். உரிமைகள் பறிக்கப்பட்ட இந்தியரின் நிலைதான் என்னவென்பதை ஒருவரும் கவனிக்கக் காணோம். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ருசியாவிற்குச் சொந்தமான ளாடிவாஸ்டாக் என்ற கிழக்கு சைபேரியாத் துறைமுகத்தில் ஒரு ஆங்கிலேயனை ருசியர்கள் அநியாயமாய்க் கொலை செய்ததற்காக ருசிய சர்க்காரை ஷை கொலைக்குக் காரணத்தைக் கேட்டு ஷை உயிர் நஷ்ட ஈடும் கொடுக்குமாறு பிரிட்டிஷ் சர்க்கார் கேட்ட சங்கதியை நாமறிவோம். வெள்ளைக்காரர்கள் மட்டும் தேவதைகளா? இந்தியர் என்ன அவ்வளவு கேவலமா?

## பிரிட்டிஷ் சர்க்காருக்கு

பிரிட்டன் உலக வல்லரசுகளில் ஒன்றாயிருக்கிறது. இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேர்ந்திருக்கிறது. பிரிட்டிஷாருக்கு என்ன என்ன உரிமைகள் கிடைக்கின்றனவோ அவைகளையெல்லாம் இந்தியருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டுவது பிரிட்டிஷ் சர்க்காரின் கடமையாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தியத்தைச் சேர்ந்த இந்தியர்களை, அமெரிக்காவிற் கேவலமாய் நடத்துவது பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தோன்றவில்லையா? அமெரிக்காவில் வாழும் இந்தியர்களின் கஷ்டங்களைத் துடைக்க முன்வரும்படியாகப் பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம்.



இந்த அவசரமான அவசியமான விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் சரியானபடி வேலை செய்யாததற்குக் காரணமென்ன? அமெரிக்காவிலிருக்கும் ஐரிஷ்காரர்கள், அயர்லாண்டுச் சுயராஜ்யப் போராட்டத்தில் உதவியாயிருந்தது போலவே அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களும் இந்தியச் சுயராஜ்யப் போராட்ட விஷயத்தில் நடந்துகொள்வார்களோவெனப் பிரிட்டன் சந்தேகிக்கிறது போலிருக்கிறதோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் பிரச்சாரகர்களின் உண்மைகள், அங்கிருக்கும் சில இந்தியர் மூலம் வெளியாகிக்கொண்டிருப்பதானது, பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பிடித்தமில்லாத விஷயமாகையால் இந்தியர்கள் அமெரிக்காவிலிருந்து விருத்தியாவதை விரும்பாமலிருக்கலாமென்று எண்ணவேண்டியிருக்கிறது. எனினும் நமக்குப் பிரிட்டன் சமீபத்தில் சந்தோஷத்துடன் சுயராஜ்யம் கொடுக்கப்போகிறது. அப்பொழுது நாம் பிரிட்டிஷாரை வாழ்த்தப்போகிறோம்.

## இந்தியாவில் அமெரிக்கர்

வயிற்றின் கொடுமையால் பிழைப்பிற்காக அமெரிக்காவை நம்பி அமெரிக்காவிற்குச் சென்ற நமது இந்தியர்களைச் சமத்துவம் கொடுக்காது இந்த 20-வது நூற்றாண்டில் அகௌரவமாய் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது, இந்தியாவில் வந்திருக்கும்-வரும் அமெரிக்கர்களுக்கு இந் நாட்டிற் பிறந்து வளர்ந்த இந் நாட்டு மக்களைக் காட்டிலும் அதிக மரியாதை கொடுக்கிறோம். இந்த மாதிரித் தயாள குணத்தால்தான் நாம் இங்கு ஓடிவந்த பார்விகளையும் ஒண்டவந்த யூதர்களையும் நம்மீது படையெடுத்து வந்த முகம்மதியர்களையும் நம்முள் அடக்கிக்கொண்டிருக்கிறோம். இனியும், வியாபாரம் செய்ய இங்குற்ற ஆங்கிலேயர்களுக்கு நாம் ஆதரவு அளித்ததே ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் இன்று நிலைத்து நின்று நிலவுவதற்குக் காரணமென்று சொல்லத் தேவையில்லை. இந்தியாவிலிருந்து இந்தியர், வயிற்றின் கொடுமையாலும் சில மாணவர்கள் வித்யா ஆசையாலும் அமெரிக்காவிற்குச் செல்கின்றார்கள். ஆனால், பாதிரிகளைத் தவிர்த்து இங்கு வரும் அமெ

ரிக்கர் பெரும் வரும்படியை நம்பி வந்து பொருள் திரட்டிக் கொண்டு அமெரிக்காவிற்குப் போகிறவர்களே. இங்கு அனேக அமெரிக்க வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கு எவ்வளவோ மரியாதை. அமெரிக்க டாக்டர்கள் இருக்கிறார்கள் அவர்களிடம் எவ்வளவே கண்ணியம்! அமெரிக்க ஆசிரியர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கும் அப்படியே.

## அமெரிக்க வியாபாரம்

அமெரிக்கச் சாமான்கள் இங்கு அதிகமாக இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் அமெரிக்க வியாபாரம் பெருகிக்கொண்டிருக்கிறது. இதனால் அமெரிக்கா அதிக இலாபம் அடைந்துகொண் டிருக்கிறது. அயல் நாட்டுச் சாமான்களுக்கு இந்தியா இப்பொழுது சந்தையாகி விட்டது. இந்தியாவால் அமெரிக்காவிற்கு நன்மையுண்டே யொழிய அமெரிக்காவால் இந்தியாவுக்கு ஒரு பைசாவேனும் நன்மை கிடையாது. சுருங்கச் சொன்னால் பல வழிகளில் இந்தியாவின் செல்வம் அமெரிக்காவிற்குச் சென்றுகொண் டிருக்கிறது. இங்கிருந்து அங்கே போயிருக்கும் சொற்ப இந்தியர்களோ அங்கே சம்பாதித்ததை அங்கேயே செலவிடுகிறார்கள்.

## இந்தியர்களுக்கு

அன்பு மிக்க சகோதரர்களே! அமெரிக்கர்களை நாம் நடத்துவதைப் போன்று நம்மை அவர்கள் நடத்தவில்லை. போதாக் குறைக்கு இந்தியாவுக்கு விரோதமான சட்டங்களை இயற்றி இந்திய தேசத்திற்கே அவமானத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து சென்றிருக்கும் சில பஞ்சாபியர்களும் சொற்பத் தென்னிந்தியர்களும் அமெரிக்காவில் வேலை செய்து பிழைப்பதால் அமெரிக்காவிற்கு ஒருக்காலும் நஷ்டம் வந்துவிட மாட்டாது. நிறத் துவேஷம் கொண்டு இந்தச் சிறிய விஷயத்தில் அதிகக் கருத்தைச் செலுத்தி, இந்தியாவைக் கேவலப்படுத்துவது எவ்வளவு அவமரியாதை? அனாதி கால முதற்கொண்டு நாகரீகத்தில்



முதன்மை பெற்று விளங்கி உலகத்திற்கே அறிவுச் சுடர் அளித்த நம்மை, நேற்று நாகரீகமுற்ற நாட்டார், கேவலமாக நடத்துவதைக் கண்டு நாம் எப்படிச் சகித்துக்கொண் டிருக்கிறோம்? என்று எமக்குத் தெரியவில்லை. நம்மை அமெரிக்கர்கள் தாழ்த்தக் காரணமென்ன? நாம் அடிமைகளா யிருக்கிறோம். நமக்குச் சுயாட்சி யிருந்தால் நம்மை இப்படிச் செய்வார்களா? ஒருக்காலும் இப்படிச் செய்யார்கள். அவர்கள் கல்லாலடித்தால் நாம் குறைந்தது புல்லாலாவது அடிப்போம் என்று அவர்களுக்குத் தெரியுமாதலால் நம்மை மரியாதையுடன் நடத்துவார்கள். நமக்குச் சுயாட்சி வந்த பின் நமது சங்கதியைக் கவனிப்போம் என்று இருக்கக் கூடாது. இப்பொழுது முடிந்த வரையில் முற்றிலும் செய்யவேண்டும். இந்தியர்களை அமெரிக்கர்கள் கவனிக்கவில்லை. நம்மை அவர்களைக் கவனிக்கும்படி நாம் செய்யவேண்டும். ஆகையால் நமக்கு அவமரியாதையை உண்டாக்கும் அவர்கள் அக்கிரமச் சட்டத்தை அவர்கள் மாற்றவேண்டும்; அல்லது நாம் அவர்களுடைய சாமான்களை இந்தியாவிற் பகிஷ்கரிக்க வேண்டும். தேசாபிமானிகளே, எல்லாக் கட்சித் தலைவர்களே, யுவர்களே, இதில் அபிப்பிராய பேதம் வேண்டாம். இதிற் சேர்ந்து வேலைசெய்யுங்கள். இதைப் பற்றி ஒருவித கிளர்ச்சியையும் நமது நாட்டிற் காணோம் என்று மிக மிக வருந்துகிறோம்.

## முடிவு

அமெரிக்கர்கள்தான் மனிதர்களா? கடவுள் உலகத்தை அவர்களுக்குத்தான் படைத்தாரா? அமெரிக்கர் உள்ளத்தை இளக்கி மற்றவர்களோடு இரக்கத்துடன் நடக்க அவர்களைக் கடவுள் திருப்புவாராக! அவர் எண்ணினால் அனைத்தும் அப்படியே ஆகும்!

வந்தேமாதரம்.

# எனது குருநாதரின் கடிதம்.

(மனோகரனார்)

**எனதருந்தவச் செல்வர்களாகிய பாரதர்களே! பாரதிகளே!!**

ஞான பூமியாம் 'பாரத' நாட்டில் நீங்கள் அவதரித்ததற்காகப் பெருமை பாராட்டுங்கள். ஆயிரக் கணக்கான வருடங்களாக அவனியில் விளங்கிவரும் புராதன நகரங்களாகிய அஸ்தினாபுரி (டெல்லி), வாரணாசி (காசி), மதுரை போன்ற மா நகரங்களும், கங்கை, யமுனை, சிந்து, காவிரி போன்ற ஜீவ நதிகளும், ஹிமாசலம், விந்திய மலை, அஸ்தகிரி போன்ற மாபெரும் மலைகளும், சோமனாதபுரம், ஜகன்னாதம், ஸ்ரீரங்கம், காஞ்சி போன்ற மகோன்னத சிகரங்கள் வாய்ந்த கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களும், டெல்லி, ஆக்ரா, செஞ்சி, அஜந்தா, கிரிபுரம் எல்லோரா போன்ற விடங்களிலுள்ள வானளாவிய கோட்டை கொத்தளங்களும், பெருமை வாய்ந்த சிற்ப நிர்மாணங்களும் பாரத தேவியின் பண்டைப் பெருமையினை விளக்கிக் காட்டிக்கொண்டிருப்பதைக் கவனியுங்கள். வில்லிற் சிறந்த வீரனாகிய பார்த்திபனும், வாய்மையிற் சிறந்த வல்லவனாகிய அரிச்சந்திரனும், கொடையிற் சிறந்த குரு வள்ளலாகிய கர்னனும், மல்லிற் சிறந்த மாண்புடையவனாகிய வீமனும், அறத்திற் சிறந்த தருமனும், இராஜ தந்திரத்தில் மிகுந்த கிருட்டினனும் உங்கள் முன்னோர்களல்லவா? சகரன், மாந்தாதா, புருகுச்சன், புரூரவன் போன்ற முடி மன்னர்கள் உங்கள் மூல புருஷர்களல்லவா? ததீசியின் தியாகமும், அரவானின் துணிவும், அபிமன்னனின் வீரமும், சிபியின் கருணையும்—உங்களுடையவை யல்லவா? அசோகர், சந்திரகுப்தர் போன்ற மன்னர் மன்னரின் அரசிய லமைப்புகளின் உரிமை யாருடையது? சாணக்கியரின் இராஜ நீதிகளுக்கு உரியவர் யாவர்? சிவாஜியின் தேசாபிமானம் யாருடைய உரிமை? இவை யாவும் உங்கள் பெருமையினை விளக்குவன வன்றோ? உங்கள் தேச சரித்திரத்தை ஒரு முறை படித்துப் பாருங்கள். இராணி சம்யுக்தை, சித்தூர் மகாராணி பத்மினி பாய், இராணி துர்க்காவதி, ஜான்ஸி ராணி லக்ஷ்மீ பாய் முதலிய வீர மாதரின் உருவங்கள்



உங்கள் முன் தோன்றவில்லையா? இராணா பிரதாப சிம்மன், பிரிதிவி ராஜன், பீம சிம்மன், மான சிம்மன் போன்ற இராஜ புத்திர வீர மக்களின் இரத்தம் உங்கள் உடம்புகளில் ஓடவில்லையா? உங்கள் ஆத்ம கௌரவத்தை (Self respect) யறியாது ஏன் உறங்குகிறீர்கள்? உலக சரித்திரத்தில் புதிய சகாப்தம் பிறந்துவிட்டது. சுதந்தரக் கதிரவன் தன் இளங் கிரணங்களைப் பரப்பிக்கொண்டு அதோ உதயமாகிவிட்டான். உங்களுடைய அயல் நாடுகளனைத்தும் சுதந்தரக் கொடியினைக் கையேந்தி, வெற்றி முழக்கத்துடன் பவனி வரத் தலைப்பட்டு விட்டன. சுதந்தர தேவியின் புறப்பாட்டினை விளக்கும் பேரிகையின் ஒலி எங்கும் அடிபடுகிறது. நம் நாட்டு முடி சூடா மன்னராம் திலகர் பெருமான் வானத்தினின்று காலைச்சங்கு ஊதுகிறார். தாதாபாய், கோகலே, பானர்ஜி, தாஸ், லஜபதி முதலியோர் அதோ விண்ணினின்று 'பாரதி'யை நோக்கித் திருப்பள்ளி எழுச்சி பாடுகின்றனர். இத்துணைக் கோலாகலங்களினிடையில் இன்னுமா தூங்குகிறீர்கள்! பாரதப் புதல்வர்களே! எழுந்திருங்கள். பாரதப் புதல்விகளே! உங்கள் மக்களைத் தட்டி எழுப்புங்கள். இந்தியச் செல்வர்களே! நிமிர்ந்து நில்லுங்கள்.

'ஜனனீ ஜன்ம பூமிஸ்ச சுவர்க்காதபி கரீயசி' (பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே) என்ற ஆன்றோர் வசனத்தை மறந்துவிட்டீர்களா? உங்களை ஈன்றெடுத்த அன்னை-அரியாசனத்தில் அமர்ந்து அரசு புரிந்த அன்னை-பட்டுப் பீதாம்பரங்களை யுடுத்தி அழகிய திருக்கோலங் கொண்டு விளங்கிய அன்னை-பாரத தேவி இன்று தன் எழில் நலம் யாவுங் குன்றி, உடுக்கவும் சொந்த ஆடையின்றி, அடிமை வாழ்க்கை யெய்தி, வறுமைக் கிலக்காகி, அயல் நாட்டு (தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற) மக்கள் அலக்ஷியம் செய்து எள்ளி நகையாடும் நிலையில் வருந்தி வாடி நிற்கும் காக்ஷி உங்கள் கண்களுக்குப் புலனாகவில்லையா? என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களிடையிலுள்ள சாதி வித்தியாச, மத வித்தியாசங்களெனும் முட்களை யகற்றி, சுதந்தரப் பாதையைச் செப்பஞ் செய்யுங்கள். வைதீகப் பிடிவாதங்களை விட்டொழியுங்கள். வீடு தீப்பற்றிக்கொண்டு எரிகையில் 'இக் குடத்தை நான் தொடலாமா, அக் குடத்தை நீர்

தீண்டலாமா' என்று யோசித்துக் கொண்டிருக்க நேரமுண்டா? எல்லோரும் விரைந்து தத்தமக்குக் கிடைத்த பாத்திரங்களைக் கொண்டு ஜலத்தைக் கொணர்ந்து தீயை அவிக்க வேண்டாமா? வைதீகப் பித்தமே உங்கள் நாட்டை அடிமை யாக்கியதென்பதை மறவாதீர்கள். விவேகானந்தர் கண்ட ஞான இந்தியா, இராம கிருஷ்ண பரம ஹம்ஸர் கண்ட (சமய) சமரச இந்தியா, இராம தீர்த்தர் கண்ட வேதாந்த இந்தியா, தயானந்தர் கண்ட வைதீக இந்தியா, இராம மோகனர் கண்ட சீர்திருத்த இந்தியா, வித்யா சாகரர் கண்ட (பெண்கள்) விடுதலை இந்தியா, திலகர் பெருமான் கண்ட சுதந்தர இந்தியா, காந்தி யடிகள் காணும் சாந்த இந்தியா, கவி தாகூர் காணும் கலை இந்தியா, அரவிந்தர் காணும் ஆத்ம இந்தியா, அகில தேசாபிமானிகள் காணும் ஐக்கிய இந்தியா உங்கள் அகக் கண்களுக்குத் தோன்றவில்லையா? வேற்றுமை என்ற மேகத் தாற் சூழப்பெற்று, அறியாமை என்ற இருட்டில் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப் படுகின்றீர்கள். சமத்துவம், சகோதரத் துவம், என்னும் அஸ்திரங்களைக் கொண்டு வேற்றுமை மேகத்தைச் சிதற வடித்தீர்களாயின், அறியாமை இருட்டு நீங்கிப்போகச் சுதந்தரக் கதிரவனின் கிரணங்கள் உங்களிடத்துப் பிரகாசிக்கும். எனவே சாதிக் கர்வத்தை விட்டொழியுங்கள். சமய வேற்றுமை களை மறந்துவிடுங்கள். ஜப்பான், சைனு முதலிய கீழைத் தேசங் களின் எழுச்சியைக் கவனியுங்கள். பாரத தேவியின் வெண் கொற் றக் குடையின்கீழ் மறையோர், மற்றோர், பறையோர், இந்தியர், மகம்மதியர், கிறிஸ்தவர் என்ற வேற்றுமைகளை மறந்து யாவரும் சரி நிகர் சமானமாக நில்லுங்கள். ஆண்களோடு பெண்களுக்கும் சம உரிமை யளியுங்கள். அனைவருங் கூடித் தேசீய கீதத்தைக் கானம் பண்ணிக்கொண்டு சுதந்தர தேவியின் திருவோலக்கத்தைக் காணப் புறப்படுங்கள். அதோ காந்தியடிகளார் சுதந்தரக் கொடி யைத் தாங்கி வழி காட்டிக்கொண்டு நடக்கின்றார். அவர் வழி பற்றி விரைந்து நடவுங்கள். உலக சுதந்தர பவனியில் நீங்களும் சேர்ந்துகொள்ளுவீர்கள். உத்திஷ்டத! ஜாக்ரத!! பிராப்ய வரான் நிபோதத!!! (எழுமின்! விழிமின்!! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்!!!) என்று உபநிடதம் உத்கோஷிப்பதைக் கவனி யுங்கள். வந்தேமாதரம். ஓம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# அரசியற் கம்பன்.

சுவாமி சுத்தானந்த பாரதியார்.

## கம்பக்கவி

கண்ணளாவிய காட்சி யனைத்தையும் கம்பன் கவியளாவியுள்ளது. கருத்தளாவிய இன்ப மனைத்தையும் அவன் கவின் அளாவியுள்ளது. காதளாவிய கேள்வி யனைத்தையும் அவன் பொருளளாவி, யருள்பூத்து, நுகர்ந்தோர்க்கு உம்பர்நாட்டுக் கற்பகச் சோலையாய் விளங்கு கிறது. கம்பக்கவி, கவிக்கு நாவிருந்து. காதலுக்கு நறுமணக் களிப்பு. கடவுளன்பனுக்குக் கருத்தொளிர் காட்சி. எக்காலத் திற்கும் ஒக்க, எத்துறையை எப்போதெடுத்து நோக்கினும் புத் துணர்வும், புதுப் பொருளும், புது நுகர்வும் பெற்றிலகும் கட வுட் கவிதை, கம்பக் கவிதையைத் தமிழணங்கின் திருமுடியோ? திருநுதற் பொட்டோ? மங்கலநாணோ? என்கொலோ வுரைப் பேன்!

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
கவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவிரி......"

போன்றதே கம்பக் கவியென்று கம்பன் மொழிகளாலேயே அவன் கவியணியைக் கூறுவோம். கும்பகருணன் வதைப் படலத் தில், வீடணனைக் கும்பகருணன் அழைக்கையில், "கவிஞரின் அறிவுமிக்காய்," என்று கவியறிவைச் சிறப்பித்துள்ளது கம்ப

னுக்கே பொருந்தும். கவியென்ற பெயருக்குக் காரிகை கற்றுத் தளை யெழுத்தெண்ணிச் சொல்லடுக்குவோன் என்னும் பொருளில்லை. கவியென்றால் முற்று முணர்ந்தவனுக்கே பெயர். வேத முனிவருக்குக் கவிகளென்று பெருமைப் பெயர் விளங்குகின்றது. ஆதலின் ஒரு கவி முக்காலு முணர்ந்தவனே யாவன். அவன் சொல்லே, நிறைமொழி, மந்திரம், மறை, வேதம். அதுவே மாந்தருக்கு வழிகாட்டி.

இரணியன் வதைப் படலத்தை யெடுத்தால் கம்பன் உபநிடதக் கவியாகவே விளங்குகிறான்.

“சாணினு முளனோர்தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணினு முளன் மாமேருக் குன்றினு முளன்...........”

என்னும்போது

“ஈஸாவாஸ்ய மிதம்ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாஞ் ஜகத்”
“அணோரணீயாந் மஹதோ மஹீயாந்”

என்ற உபநிடத வாக்கியங்கள் நமது நெஞ்சில், கம்பனைத் தமிழ் உபநிடதக் கவியாக—முனிவனாக—இருடியாக வரவேற்கின்றன. வேதக் கம்பனை விரித்து வேறொரு கட்டுரை அடுத்தமுறை எழுதுதும்.

கவி, கலை, சிற்பம், சமயம், உள்ளெழுச்சி ஆகிய இவற்றிற்கு விருந்தூட்டும் கம்பக்கவி, தற்கால உலகின் பெரும்பேச்சும், பெருமுயற்சியும், பெருங்காலக் கழிவுமான அரசியலுக்கு என்ன ஆறுதல் தருகிறான் என்பதே நாம் இப்போது இங்கு எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி.

## கம்பனின் நாடு

உலகில் விஞ்ஞான வாழ்வைத் தோற்றுவான் வேண்டிப் பல சத்யயுகப் பெரியோர் தங்கள் யோக விழிகளால், யோக சக்தியால் அதைப் பார்த்துப் படைத்து முயன்று வருகின்றனர். அத்



தகை யுலகைக் கம்பன் முன்னமே கட்டி யமைத்து, அதில் அணி பெற, அழகு சொட்டக், காதல் கொழிக்கக், கல்வி மிளிரச், செல்வம் குலுங்க வாழுகிறான். தண்டலை மயில்கள் ஆடத், தாமரை விளக்கந் தாங்கக், கொண்டல்கள் முழங்கக், குவளைகள் நோக்கத், தெள்திரை திரைகாட்டத், தேனுகும் மதுரயாழென வண்டுகள் பாட அத் தெய்வநாட்டின் மருதமகள் வீற்றிருக்கும் இன்பத்தை யாவரே கணிக்க வல்லார்! தினைப்புனஞ் சிலம்புங் கிளிகளும், பூக்களிற் சிலம்பும் வண்டுகளும், நீர்த்துறைகளிற் சிலம்பும் புட்களும், மனைகளிற் சிலம்பும் வள்ளியோர் மங்கல வள்ளைப் பாடல்களும், அச் செழுந் திருநாடன் வளத்தையும் மகிழ்வையும் விளக்குகின்றன.

“குலஞ்சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்”

“கூற்றமில்லையோர் குற்றமில்லையால்
சீற்றமில்லைதஞ் சிந்தையிற் செய்கையால்
ஆற்ற னல்லற மல்ல தில்லாமையால்
ஏற்ற மல்ல திழிதக வில்லையே!”

“பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி; மாதரார்
அற்பி னின்றன வறங்கள்; அன்னவர்
கற்பி னின்றன கால மாரியே”

என்னும் கவித்துணர்களால் மாந்தர் வாழ்வின் ஒழுக்கமும், பெண்மையின் பெருந்தகைக் கற்பும், மனைவாழ்வின் மங்கலமும் அந் நாட்டில் மகிழ்ந்து மிளிர்வதை நுகர்கிறோம்.

## கம்பனின் நகரம்

“துடியிடைப் பணைமுலைத் தோகை யன்னவர்
அடியிணைச் சிலம்புபூண் டாற்று மாளிகை”

பலகொண்ட கம்பனின் நகரம், போகமும் யோகமும் பொருந்தி இன்பமும் வீடும் மிளிர்ந்து திகழ்கின்றது. அதிற் பெண்

ணின் பெருமை பகலொளி கொள்கிறது. பெண்ணின் சதங்கை அரசியாணையெனச் சிலம்புகிறது. "கந்தனையனையவர்" கலைதெரி கழகமும் வீரவிளையாட் டிடங்களும் தோன்றுகின்றன. ஒரு கையில் வீரமும், மறு கையில் வித்தையும் கொண்ட இளைஞர்கள் ஏறுபோற் பீடுநடை நடக்கின்றனர். ஊடவும், உயிரின் இன்னிசை பாடவும், ஆடவும், மலர் சூடவும் பொழுது போக்குனர் சிலர். கரியொடு, வரிசிலை, புரவி முதலியன கொண்டு தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காகப் பொருதொழில் பயிலுனர் பலர்.

"கல்லாது நிற்பார் பிறிதின்மையிற் கல்விமுற்ற
வல்லாருமில்லை யவைவல்ல ரல்லாருமில்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே,
இல்லாரு மில்லை யுடையாரு மில்லை மாதோ!"

என்றபடி எத்தொழிற் றுறையில் எவர் நிற்பினும் கல்வி மட்டும் அனைவருக்கும் பொதுவாக நிறைந்திருந்தது. கல்விப் பகலை காந்துவதால் எல்வி என்பது இன்னதென்றே அந் நகரார் அறியார்.

"அறிவு தொழில் உரிமை ஆக்கம் வளமும்
விறல் நாட்டின் வெற்றி விளக்கு"
"முயல்வோர், அறவோரும், முன்னுநற் செல்வர்
பயிலிடமே நாடாகும் பார்"

என்றதற் கிசையக் கம்பனின் நாடும், நகரமும் எல்லாச் செல்வமும் இசைந்திலங்குகின்றன. தனது தெய்வ நாட்டையும் நகரையும் சமுதாயத்தையும் கம்பன் வேறெந்தக் கவியும் முயலாத புதிய போக்கில் இறுதியில் இலக்குகிறான்:

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து, எண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண்பணை போக்கி, அருந்தவத்தின்
சாகந்தழைத்து, அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து,
போகக் கனிபழுத்தது போலுமன்றே!"



ஆ! இப் போகக்கனியை வீடுதோறும் மனைதோறும் மாந்திய நமது பாரதநாடு, கம்பன் கண்ணிற் கடவுட் சித்திரமாகக் காந்திய நமது கற்பக நாடு, கல்வி முளைத்துக், கேள்வி துளிர்த்துத், தவம் கிளைத்து, அன்பு அரும்பித், தருமம் மலர்ந்து, அருள் காய்த்துப், போகக் கனிபழுத்த பாரத சமுதாயம் இப்போது எப்படியுள்ளது என்பதை எண்ணுமின்! இரங்குமின்!!

கஞ்சிக்கு முதவாக் கல்வி கடுவென முளைத்தே; சாதி
வஞ்சக வேறுபாட்டாற் கிளைத்திருள், வறுமை நோயே
நஞ்சுகத் தழைத்து, நாற்ற நாத்திக மலரரும்பி
வெஞ்சுரச் சாவையீதல் வீதலுமெந்தநாளோ!

இஃது இவ்வாறாகத் தற்போது நம் பாரதநாடு, அயலார்க் கடிமைப்பட்டிருக்கும் அழிவினின்றும் அறுத்தெழுந்து, விடுதலை பெற்றுச் சுத்த சுதந்திரச் சமத்துவவிண்ணில் மீண்டும் தலைதூக்குமென்பது உறுதி. அந்நாள் எழுந்தால் உடனே குட்டிக்கலகங்களுக்கும் இருட்பிணக்குகளுக்கும், வாழ்வில்லை. பிறகே கம்பனின் தெய்வவுலகு மாந்தருக் கெய்தும்.

## அரசன்

தனது தெய்வ வுலகிற்கு உயிராகக் கம்பன் அறத்தை அமைத்து அரசனை நல்லற மூர்த்தியாக்கி யுள்ளான். தாயும், தவமும், சேயும், மருந்தும், அறிவும், அருளும், அறமும், அமைவும், அடல்வீரமும், ஈகையும், நீதியும், வெற்றியும், ஆற்றலும் ஒருங்கே சேர்ந்த ஒரு திருவுருவாகக் கம்பனின் மன்னன் திகழுகின்றான். உயிரெலாம் உறைவதோர் உடம்புமா யுள்ளான். 'வறிஞன் ஓம்புமோர் செய்யென, வையத்தைப் பண்படுத்தி உண்மைக் கருத்துடன் பாதுகாக்கிறான்.

## முடியரசிற் குடியரசு

ராமநாடகம் அயோத்தியா காண்டத்திலேயே இது இயல்பிற் றொடங்குகின்றது. தொடக்கக் காட்சியில் அரசியற் கம்பனை

நமக்குப் புலனாகிறான். மந்திரப் படலத்திற் பதிந்துள்ள அரசியல் நுட்பங்கள், தற்காலத்துள்ள எந்த அரசியலருக்கும் புதுவிருந் தாகும். முடியரசு, குடியரசு, அரசில்லா அரசு, பொதுவுடைமை முதலிய ஏதேதோ பேசியும் முயன்றும் தற்காலம் இன்னும் சச்சர விட்டுக்கொண்டே யுள்ளது. ஆனால் நமது ராமராஜ்யம், முடியர சாயினும், குடியரசினும் கொற்றமாக, மக்கள் மகிழக், கற்பும் பொற்பும் வெற்றியும் வீரமும் கல்வியுங் கேள்வியும் திருவும் செல்வமும் திகழ விளங்கியது. ஏனெனில் அரசன், குடிகளுக் குக் காவலனாய்ச், சேவகனாயிருந்தான். அரசற்குரிய தன்மை பொருந்தித் திருமாலுக்கு நிகராயிருந்தான்.

"கன்னியர்க் கமைவரு கற்பின் மாநிலம்
தன்னையித் தகைதரத் தருமங் கைதர,
மன்னுயிர்க் குறுவதே———"

செய்தான். மன்னுயிர் காத்தலே அவன் தவ வேள்வியாகக் கொண்டான். மன்னுயிர் காத்துத் தன் இளவரசிடம் அரசை யீந்து பின்பு தன்னுயிர் காக்கும் தவத்திற்கெழுதலை மன்னன் கடமையாகக் கொண்டான். இளமையிற் கற்று, வாலிபத்தில் இன்பம் நுகர்ந்து, வீரம் பிறங்கி, வெற்றிச் செங்கோல் நடத்தி, முதுமையில் தவம் முயன்று, யோகியாகவே மன்னன் இறத்த லினால், வாழ்வை அறத்தின் பாற்படும் போகத்திலும், வீட்டின் பாற்படும் யோகத்திலும் பயனபடுத்துகின்றனன். சிவாஜியைப் போன்று தனது பிறவிக்கடனாக, மகக்கடனாக அரசாண்டு, அகப் பற்றற்று நின்றான். வெளிப் பகைவருக்கும் உட் பகைவருக்கும் இடங்கொடா திருந்தான்.

"ஒட்டிய பகைஞர்வந் துறுத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தொட்டவ ரல்லரேற் செல்வ மீண்டென
விட்டவ ரல்லரேல் யாவர் வீடுளார்"

என்று தசரதன் அறந்தலைநிரப்ப மூப்படைந்த பின்னர், துறவறமெய்தற்குத் துடிதுடித்தல், மந்திரப் படலத்தில் மிகவும்



அழகிய 18 கலிவிருத்தங்களாற் றிகழ்கின்றது. தான் துறப்ப தன் ஏதுக்களைத் தனது மந்திர சபைக்கு வெகு தெளிவாக எடுத் துக் காட்டியது, ஒரு மன்னன் வீட்டு நெறி நிற்றற்குங்கூடத் தனது குடிகளின் பிரதிநிதிகளான மந்திரிகளை இச்சை கேட்கிறான் என்பது புலனாகிறது.

"ஆதலால், இராமனுக் கரசை நல்கியிப்
பேதமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாதுநுங் கருத்து?———"

என மந்திரிக் கிழவரின் கருத்தை வினவுதல் காண்க. இதனால் அர சனிடம் அவர்களுக்குள்ள அன்பை அளவிடப்படுமோ! மந்திரிக் கிழவர் சிந்தை புரண்டனர். ஆயினும் இராமன் அரசனாவதால் பொங்கிய உவகையானார். இவர்கள் நிலையைக் கம்பன்

"இரண்டு கன்றினுக்கு இரங்குமோர் ஆ"

என்று உவமை காட்டியிருப்பது வேறெந்த இராம சரிதையிலும் இல்லாப் புதுமைப் பொலிவு. அமைச்சர் மிகவும் கருதி ஆய்ந்து

"மன்னு மன்னுயிர்க் கிராமனின்
மன்னவரில்லை"—என்றார்.

குல குருவான வசிட்டரும்,

"பாவரே இராமனைப் பெற்றார்;"
"நிலமகள் மற்றுனைப் பிரிந்து
கண்இழந்திலள் எனச்செயும் நீதந்த கழலோன்,"
"அறத்தின் மூர்த்தி வந் தவதரித்தான்,"
கற்றவர், கற்றிலாதவரும்,
"உண்ணு நீரினும், உயிரினும்
அவனையே யுகப்பார்."
"அரச உனக்குறு பொருள் உயர்ந்த மாதவம்;"
"தருமமும் இது தக்கதே நினைத்தனை தகவோய்;"

என்று தனது புனித வாக்கினால் இராமனைப் புகழ்ந்து தசரதனின் தவ விருப்பைத் தாங்கி நின்றார்.

தசரதன் முனிவனைத் தொழுது, தன் மகன் புகழைக் கேட்டு, அவனைப் பெற்ற அன்றினும், சனகன்வில் இற்ற அன்றினும், பரசுராமன் செருக்கை அவன் செற்ற அன்றினும் உவகை யெய்தினன். பிறகு மந்திரிக்கிழவன் சுமந்திரன்,

> "நின்மணிப் புதல்வனை முறையால்
> அரசனுக்கிப் பின் அப்புறத்தடுத்தது புரிவாய்"

என்றலும், இராமனின் சம்மதத்தை வினவ, அத் திருமகள் கொழுநன் அரசவையிற் புலனாகிறான். இராமனை அழைத்து வரும்போது "ஒரு காரியம் உண்டு" எனச் சொல்லுகின்றானே யொழிய, முடி சூட்டும் முடிபினை யுரைக்காதது குறிக்கத் தக்கது. மன்றின்முன் இராமன் தனது பொறுப்பறிந்து, சரியென்ற பின்னரே முற்ற முடிபிற்கு வரவேண்டுமென்பது அந்த அழைப்பின் கருத்து. இராமன், இளவரசனின் வீர வணக்கத்துடன் மாதவனாகிய வசிட்டனையும், வாள் உழவனான தந்தையையும் வணங்கி நிற்றலும் தந்தை-அரசன், காதல் பொங்கிக், கண்பனியுகுத்துச் சிந்தை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தலும், ஒரு சிறந்த அன்புக் காட்சியாக மிளிர்கின்றது. இப்படி மைந்தனைத் தழுவிய கருத்தைக் கம்பன், இருவர் மனத்திலும் ஊடுருவித் தனது கருத்தைக் கட்புலனாக்கி,

> "நிலங்கள் தாங்குறு நிலையினை
> நிலையிட நினைந்தான்
> விலங்கலன்ன திண் தோளையும்
> மெய்த்திரு விருக்கும்
> அலங்கல் மார்பையும்
> தனது தோள் மார்புகொண்டு அளந்தான்"

அப்படி யளந்ததன் முடிபைத் தசரதன் வாயிலாகவே

> "பூண்டபோர் மழுவுடையவன் (பரசுராமன்)
> நெடும்புகழ் குறுக, நீண்ட தோளைய"

என்று கூறுகிறான்.



பின்னும் நீடிரென்று முடி சூட்டற் செய்தியைக் கூறாமல் 'வேண்டி யெய்திட விரைவதொன்றுளது' எனத் தொடங்கித் தனது மூப்பையும், தவஞ்செய் கடனையும், உரிமை மைந்தரைப் பெறுதல், இருமையும் பெறற் கென்பதையும், தனது வழி வழி மரபின் மன்னர் வழக்கையுங் கொள்ளுவாயாக என்று இராமனின் அருமை, பெருமை, தகைமை முதலியவற்றை யுரைக்கிறான். முடிவில்,

இப் பெரும் பாரமாகிய அரசை, வினையினால் என்வயின் வைத்தனன் என்று எண்ணேல்.

> "புனையு மாமுடி புனைந்து இந்த
> நல்லறம் புரக்க
> நினையல் வேண்டும்; யான்
> நின்வயிற் பெறுவது ஈது"

என்று மகனுக்குத் தந்தை அரசாட்சி செய்வதன் அறக் கடனை எடுத்துக் கூறுகிறான். இது இராமதாஸ் சிவாஜிக்குக் கூறிய மொழிகளுடன் உறவாடி நிற்கிறது.

> பாரதச் சுடரே! மன்னுயிருய்ய
> யாரினி யுன்னின் அரும்பெருந் துணையே!
> இலகுக பாரதம், இன்னியல் வீர!
> நலமுற வுன்னால் நம்மற மெல்லாம்!
> வெற்றி வாளால், வீரப் படையால்,
> நற்றவ நாட்டு நற்பணி புரிவாய்!
> அறிவுந் தொழிலும், ஆக்கமும், வளமும்,
> திறமும் நலமும் செழிக்க நாடாள்வாய்
> எற்றே புரப்பாய் இனிது நின்கடனை
> ஆற்று யதற்கே யாற்றல் மிகுந்தோய்!

என்று சிவாஜி, தான் துறவை விரும்பியபோது அரசை விரும்ப உரைத்த இராமதாச போதத்தைக் கம்பன் "ஆட்சியான

நல்லறம் புரக்க நீ நினைதல் வேண்டும்'' என்றதில் சுருக்கி விளக்கினான். தசரதன் தனதிச்சையைத் தன் மைந்தனிடம் ஒரு வரமாகக் கேட்கிறான். இராமனும் கொற்றவனேவிய செய்வதே கடனெனப் பணிபூண்டான்.

மற்றுமுள்ள மன்னரும் இராமன் முடிசூடலுக்கு உவகை கூறினார். இத்துணை ஒருமித்த ஆதரவிருப்பினும் பின்னும் பொது மக்கள் மனவுறுதி யறிவான் வேண்டி,

> "மகவையின் அன்பினால் மயங்கி யான் இது
> புகல, நீர்புகன்ற, இப் பொம்மல் வாசகம்
> உகவையின் மொழிந்ததோ? உள்ளம் நோக்கியோ?
> தகவென நோக்கியோ? தன்மை என்?''

என்றான்.

இதில் மன்னுயிர் மனத்தை மன்னன் எப்படி நுட்பமாய் அறிந்தொழுகினன் என்னும் தன்மை புலப்படுகிறது. "ஏன் மகன் அன்பால் மயங்கி மொழிந்ததை நீர் ஒருமனத்தோடொப்பியது உகப்பிற்காகவா? உள்ளவிருப்பா? இராமன் தகைநோக்கியா'' என்று மந்திரிசபையின் முடிபை மீண்டும் சுண்டிப் பார்க்கிறான். அதற்கு அவையோர் "ஊருணி நிறையவும், பார்கெழுபழுமரம் பழுக்கவும், கார்மழை பொழியவும், நதிபுனல் பெருகவும் தடுப்பவர் யார்?'' எனச் சொல்லி ஒரு இளவரசனுக்குரிய ஈகை, நிறை, தன்னலமின்மை, பொது நலம் போற்றல் முதலிய தன்மைகள் இராமனிடம் அமைந்திருப்பதினாலேயே அவனை மன்னனாக ஒப்பியதன் உண்மையை யுரைக்கின்றனர். பிறகு இராமன் முடிசூட்டு விழாவிற்குப் பல நகரணிகள் நடக்கின்றன.

> 'குடியாற் குடி நன்மை கொற்றரசு போற்றலும்'
> பார்தழுவும் நல்வழியிற் பண்பின் அரசாளலும்,
> குடிகளின் சேவகரே கோக்களெனக் கொள்ளலும்,
> குடிகள் மனந்தனதாய்க் கொள்ளலும், உடைய

ஒரு முடியரசின் திருவையுந் திறனையும் கம்பன் இம் மந்திரப் படலத்தில் விளக்கினன்.

---



# சர். ஐசக் நியூட்டன்.

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

உலகத்தின் புத்திரரத்தினங்களாய், "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று'' என்பதைப் பூர்த்தி செய்துகொண்டு விளங்கா நின்ற சாஸ்திர நிபுணர்களில் சர் ஐசக் நியூட்டன் என்பவரும் ஒருவராவர். இவரது கூரிய புத்திக்கும் ஆழ்ந்த யோசனைக்கும் அக் காலத்தில் யாரையும் இவருக்கிணை சொல்ல முடியாமலிருந்தது. அறியாமையிலும் மூடக் கொள்கைகளிலும் அதிகமாய் ஆழ்ந்து கிடந்த ஜனங்கள் பலரினூடே மிக எளிய குடும்பத்திற் பிறந்து தாய் தகப்பனார் பேருதவி யின்றிப் பெருங் கியாதி பெற்றோங்கிய சர் ஐசக் நியூட்டனின் சரிதையை ஒவ்வொருவரும் தெரிந்திருப்பது அத்யாவசியமேயாம்.

## பிறப்பு

நியூட்டன் இங்கிலாந்தில் 'லின்கான் ஷைபர்' ஜில்லாவில் 'ஊல்ஸ் தார்ப்' என்ற கிராமத்தில் 1642-ம் வருடம் டிசம்பர்மீ 25உ (சரியாக காலிலியோ என்ற வான சாஸ்திரி இறந்த ஒரு வருஷத்திற்குப் பின்) பிறந்தார். இவர் தந்தையார் ஐசக் நியூட்டன் என்பவர் தன் 36-வது வயதில், இவர் தாயார் ஹாரியட் ஐஸ்கோ என்ற மாதைத் திருமணம் முடித்த சில மாதங்களுக்குள் விண்ணுலகை யடைந்தார். ஆதலால் நியூட்டன், தன் தந்தையார்

இறந்த பின்னரே பிறந்தார். இவர் பிறந்த காலத்தில் இவருடைய உருவம் மிகச் சிறியதாய், பார்த்தோர் இவர் வெகு நாளைக்கு நிலைத்திரார் என்றஞ்சும்படியாக அவதரித்திருந்தார். இறைவனருளால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து முதலாவது சிறிய ஸ்கூல்களில் வாசித்துப் பிறகு 12-வது வயது வரையில் 'கிரான்தம்' என்ற இடத்திலுள்ள ஸ்கூலில் வாசித்து வந்தார். இவருடைய மூன்றாவது வயதிலேயே இவர் தாயார், பர்னபாஸ் ஸ்மித் என்பவரை மறுமணம் முடித்துக்கொண்டு நியூட்டனைத் தன் தாயார் வசம் ஒப்புவித்துச் சென்றுவிட்டார்.

## படிப்பும் இளமைச் செய்கைகளும்

நியூட்டன், சிறு வயதிற் கல்வியிற் கவனஞ் செலுத்தாமலிருந்து ஸ்கூலில் கடைசிப் பையனாகவே யிருந்தார். ஆனால் ஓர் தினம் இவருக்கு முதன்மையா யிருந்த ஓர் பையன், இவரை வயிற்றில் ஒரே ஒரு உதை உதைத்தான். அதன் பின்னரே நியூட்டன் ரோசங்கொண்டு படிப்பில் மிகக் கவனஞ் செலுத்தி எல்லாப் பையன்களுக்கும் முதன்மையாக இருந்து வந்தார். மற்றப் பையன்கள் விளையாட்டுகளில் விருப்புற் றிருக்கும்போது இவர் மாத்திரம், தான் கண்டவைகளைப் போல உருவங்களையும், இயந்திரங்களையுமே செய்வதா யிருந்தார். இப்படியாக, இவர் தன் இள வயதில் காற்றினாற் சுழலும் இயந்திரத்தையும் (Wind-mill) தண்ணீர் வீழ்ச்சியால் ஓடும் கடிகாரத்தையும் (Water-clock), மனிதனால் ஓட்டக்கூடிய சிறு வண்டியையும் யாவரும் வியக்கத் தக்கதாய்ச் செய்திருந்தார். நியூட்டன் சாதாரணமான விளையாட்டுகளை விளையாடாவிட்டாலும் சாஸ்திரங்களை யொட்டி யுள்ள ஆட்டங்களைத் தன் சிநேகிதர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். பள்ளிக்கூடத்தில் காற்றாடியைப் பறக்கவைப்பார். காற்றாடி நன்றாய்ப் பறப்பதற்கு அதன் அளவு, நூல் கட்டுமிடம் முதலியவற்றைக் காண வெகு கஷ்டம் எடுத்துக்கொண்டார். காகிதத்தில் விளக்குகள் செய்து அவைகளை இருட்டான சமயங்களில் ஸ்கூலுக்குப் போக வழிகாட்டியாய் வைத்துக் கொள்ளுவார். சில சமயம்



காற்றாடியின் வால் பக்கத்தில் இவ் விளக்குகளைக் கட்டிப் பறக்க விட்டு ஆகாயத்தில் நட்சத்திரங்கள் போல ஜனங்களுக்குத் தோற்றுவிப்பார்.

## உயர்தரப் படிப்பும் உத்தியோகமும்

நியூட்டனுக்கு வயது 15 ஆனவுடன் இவர் ஸ்கூலுக்குப் போகாமல் நிறுத்தப்பட்டு விளைந்த தானியங்களை விற்று வரும்படி அனுப்பப்பட்டார். ஆனால் இவரோ வேலைக்காரர்களை அனுப்பிவிட்டு வழிகளில் செடிகளினருகே அமர்ந்து தான் கொண்டு சென்ற புஸ்தகங்களை மிகக் கவனமாய்ப் படித்து வருவது வழக்கம். இதை ஓர் நாள் இவருடைய தாய் மாமன் கண்டு சந்தோஷமடைந்து இவர், மேலும் கேம்பிரிஜ் சர்வ கலாசாலையிலுள்ள டிரினிட்டி கல்லூரி (Trinity College)யில் சேர்ந்து பயிலும்படி சிபார்சுகள் செய்தார். அப்படியே நியூட்டன் தன் 18-வது வயதில் (1660-ம் வருஷம் ஜூன் மீ 5உ) டிரினிட்டி கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். இவ்விடத்திலேயே இவருக்கு உண்மையான ஞானம் பிறந்தது. இங்கே இவருடைய கல்விப் பயிற்சியில், உதவி ஆசிரியராக இருந்தவர்களைக் காட்டிலும் அதிகக் கெட்டிக்காரராயிருந்த, டாக்டர் பாரோ (Dr. Barrow) என்பவரின் கணித உபந்நியாசங்களுக்கு அதிக உதவி புரிந்திருக்கிறார். நியூட்டன் 1664-ம் வருஷம் 'ஸ்காலர்' என்ற பெயர் பெற்று 1665-ம் வருஷம் பி. ஏ. பட்டம் பெற்றார். 1667-ம் வருஷம் 'ஜூனியர் பெல்லோ' (Junior fellow)வாக நியமனம் பெற்று 1668-ம் வருஷம் யம். ஏ பரீக்ஷை தேறி 'சீனியர் பெல்லோ' (Senior fellow)வாக நியமனமும் பெற்றார். 1669-ம் வருஷம் கணிதத்தில் தலைமை ஆசிரியராக (Professor of Mathematics) கேம்பிரிஜ் சர்வ கலாசாலையில் நியமனம் பெற்ற பிறகே சாஸ்திரங்களில் அரிய பெரிய ஆராய்ச்சிகள் பல செய்து உலகத்திற் குதவினார்.

## ஆராய்ச்சிகள்

நியூட்டனுடைய உன்னத சாஸ்திர ஆராய்ச்சிகள் முழுவதையுங் கூறுவதற் கிடமில்லை. ஆதலால் முக்கியமான சிலவற்றையே யீங்குக் குறிப்பிடுவோம். சூரியன் கிரகணங்களைச் சிறிதளவாக, ஐந்து பக்கங்களையும், ஆறு கோணங்களையு முடைய ஒரு கண்ணாடி (Glass Prism)யினுட் செலுத்தினால் மறு பக்கம் வெளிவரும் வெளிச்சம் அநேக நிறங்களை யுடையதாக நியூட்டன் காலத்திற்கு முன்னரே தெரிந்திருந்தாலும், நியூட்டன்தான் அதன் பூரணச் செயல்களைச் செவ்வனே ஆராய்ச்சி செய்தவர். இவர் மேற்கூறிய வாறு சூரிய வெளிச்சக் கதிரைக் கண்ணாடியினுட் செலுத்திய போது மறுபுறம் வரும் கதிர், தான் உட் பிரவேசித்த வழியின் நேராகவே வராமல் அம் மார்க்கத்தை விட்டு ஒரு பக்கம் ஒதுக்கப் பட்டு, வான வில்லில் நாம் காணும் சிவப்பு, ஆரஞ்சி, மஞ்சள், பச்சை முதலிய எழுவித நிறங்களை (Red, Orange, Yellow, Green, Blue, Indigo and Violet) வரிசைக் கிரமமாய்க் காட்டிற்று. இந் நிறங்களில் சிவப்பு நிறம், தன் ஆதி நேர் பாதையிலிருந்து சிறிதாகவும், வயோலெட் என்ற நிறம் அதிகமாகவும் ஒதுக்கப்பட்டன. நியூட்டன் இவ் வுண்மையையும், வெளிச்சம் அநேக நிறங்களை யுடையது ஆனால் கண்களுக்கு ஏதோ ஒரே வெள்ளை நிறம்போல் தோற்றப்படுகிற தென்னும் உண்மையையும் வெளிப்படுத்தினர்.

பிறகு 'லென்ஸ்' (Lens) என்ற வட்டமான கண்ணாடிகளைக் கொண்டு பிரதிபிம்பிக்கும் தூர திருஷ்டிக் கண்ணாடி (Reflecting Telescope) யொன்று ஆறு அங்குலம் நீளமுடையதாய்ச் செய்து அதன் மூலமாய் ஜுபிட்டர் என்ற கிரகத்தையும் அதன் உபக்கிரகங்களையும், வீனஸ் என்ற கிரகத்தின் தோற்றத்தையும் தெளிவாய்ப் பார்த்தார். 1671-ம் வருஷம் ஜனவரி மீ 11உ ராயல் சொஸைட்டி (Royal Society)க்கு இப்புதிய தூரதிஷ்டிக் கண்ணாடியை வரைந்தெழுதி அனுப்பப்பட்டது. நியூட்டனுக்கு நல்ல பெயருங் கீர்த்தியு மேற்பட்டு அதே தினத்தில் ராயல் சொஸைட்டியின் அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.



சூரியன் முதலிய வெளிச்சங் கொடுக்கக் கூடியவைகளிலிருந்து சிறிய அணுக்கள் (Minute Corpuscles) புறப்பட்டு நமது கண்களிலோ அல்லது தேகத்திலோ தாக்கி நமக்கு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் காணக்கூடிய உணர்ச்சிகளைத் தருவதாக நியூட்டன் நம்பினர். ஆனால் ஹூஜன்ஸ் (Huygens), டாக்டர் ஹூக் என்பவர்கள், சப்தத்தைப் போல உஷ்ணமான வஸ்துக்கள் தங்கள் அணுக்களின் அசைவுகளால் உண்டாகும் அலைகள் உலகத்தில் நிறைந்து காணக்கூடாத ஈதர் என்ற வஸ்துவில் புறப்பட்டு நமக்கு வெளிச்சத்தைத்தருவதாகப் போராடினர். இதற்குத் திருஷ்டாந்தமாக இரண்டு சிறிய வெளிச்சக் கதிர்களை ஒன்றுக்கொன்று சமீபமாகப் புறப்படச் செய்துபார்த்தால் வெளிச்சமும் இருட்டும், வெளிச்சமும் இருட்டுமாக மாறி மாறித் தெரிவதைக் காணலாம் (Interference of Light.) இத்தோற்ற வெளிச்சம், அலைகள்போல வந்தால் தான் உண்டாகு மென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நியூட்டன் அணுக்களால் உண்டாகும் வெளிச்சத்தைக் கொண்டு பிரதிபிம்பம் முதலியவற்றை (Reflection and Refraction)ச் செவ்வனே காரணங்களோடு எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் நியூட்டன் நோக்கப்படி பார்க்குமிடத்து வெளிச்சம், காற்றடங்கிய பாகத்திலிருந்து தண்ணீர் அல்லது கண்ணாடி முதலியவைகளினுட் சென்றால் அப் பாகங்களில் (தண்ணீர், கண்ணாடி) வெளிச்சம் வெகு வேகமாய்ச் செல்ல ஏற்படுகிறது. இது முற்றிலும் தவறு. வெளிச்சம் காற்றுப் பாகத்திலேயே வேகமாய்ச் செல்லுகிறது. இதுபோல இன்னும் பல காரணங்கள் வெளிச்சம் அலைகளை யுடையன வென்பதற் கனுகூலமாக உண்டு. ஆனால் நியூட்டனின் வல்லமையாலும், அவர் மீதிருந்த நம்பிக்கையாலும் ஜனங்கள் வெளிச்சத்திற்கு அவர் கூறிய காரணத்தை 1800-ம் வருடம் வரை நம்பி வந்தனர். ஒரு தட்டையான கண்ணாடியின் மீது 'லென்ஸ்' (Lens) என்ற கண்ணாடியை வைத்து வெளிச்சத்தை உட் செலுத்த மோதிரங்கள் போல மத்திய பாகத்திலிருந்து வெளிச்சமும் இருட்டுமாக (Newton's Rings) அநேகம் தோற்றுவதை நியூட்டன் கண்டார்.

பிரெஸ்னெல் (Fresnel) என்பவர், வெளிச்ச அலைகள் சப்த அலைகளைப் போல நீளமா யில்லாததினல் சப்தத்தைப்போல வெளிச்சம் மூலை முடுக்குகளைக் கடந்து நமது கண்ணுக்குத் தெரிவதில்லை என்று செவ்வனே காரணங்களோடும், கணிதங்களோடும் எடுத்துக் காட்டியுள்ளார்.

நியூட்டன் வான சாஸ்திரத்திலும் அரும் பெரும் செயல்களைக் கண்டு பிடித்திருக்கிறார். இவருக்கு முன் வான சாஸ்திரத்தின் முற் போக்குக்கு வழிகாட்டியா யிருந்தவர்கள் கோபர் நிக்கஸ் (Copernicus), டைச்சோ பிரே (Tycho Brahe), செப்லர் (Kepler), காலிலியோ (Galileo) என்பவர்கள். செப்லருடைய வான சாஸ்திரத்தின் மூன்று உண்மைகள் நியூட்டனுக்கு அதிக உதவி செய்தன. பூமிக்கு எப்படி வஸ்துக்களை இழுக்கும் சக்தி உளதோ அப்படியே வானத்திலுள்ள சூரிய சந்திரன் முதலியவைகளுக்கும் ஒன்றுக்கொன்று இழுக்கும் சக்தி (Universal Gravitation) இருக்கவேண்டு மென்றும், கிரகங்கள் வட்டமாகச் சுற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் தன் 25-வது வயதிலேயே நியூட்டன் மனதிலுதித்தன. இதைக்கொண்டு வானத்திலுள்ள கிரகங்களின் சுற்றுக் கணக்குகள் (Celestial Motion) பல எடுக்கப் பட்டன. நியூட்டன் கண்டு பிடித்த உண்மைகளெல்லாம் 'பிரின்சிப்பியா' (Philosophiae Naturalis Principia Mathematica) என்ற பெயருடன் மூன்று பெரும் புஸ்தகங்களில் வெளிப்படுத்தி ராயல் சொசைட்டிக்கு 1686-ம் வருஷம் எப்ரல்மீ 28உ அனுப்பப் பட்டன. முதல் இரண்டு புஸ்தகங்கள், வஸ்துக்களின் அசைவுகளை (Motion of bodies)ப் பற்றியும் மூன்றாவது புஸ்தகம் உலக அமைப்பை (System of the World)ப் பற்றியும் சகலரும் ஒப்புக் கொள்ளும்படியாகவும் ஆச்சரியப்படக் கூடியதாகவும் எழுதி யிருக்கிறார். முக்கியமானதோர் உண்மையாவது: உலகத்திலுள்ள வஸ்துக்களின் சிறு சிறு பாகங்கள் ஒன்றுக்கொன்று; அவைகளின் தூரங்களை இருதரம் பெருக்கி வரும் தொகை ஒன்றின்கீழ் வரும் பின்னமான (Fraction) பலாத்கார விதமாக இழுக்கப்படுகின்றன



(That every particle of matter in the universe is attracted by or gravitates to every other particle of matter with a force inversely proportional to the squares of their distances) இவ்வுண்மைகளால் பூமி, சூரியன் முதலியவைகளின் நிறைகளை (Calculation of the quantity of matter)ச் சரியாக அளவிட முடிந்தது. சமுத்திரங்களின் பெருக்கு வடிவு (Tides of the ocean)களும் சந்திர சூரியன்களின் (தண்ணீரை) இழுக்கும் சக்திகளால் உண்டாவதெனவுங் காட்டியுள்ளார்.

நியூட்டன், கணிதங்களிலும் அநேக ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். 'பைனமியல் தியோரம்' (Binomial theorem) என்ற கணிதத்தைக் கண்டுபிடிக்க ஆதாரமா யிருந்தார். வஸ்துக்களின் இழுக்கும் சக்திக்கு மத்திய பாகங்களை (Centers of Gravity)க் கணிதங்களால் கண்டு பிடிக்கும் ஆற்றலை யுடையவரா யிருந்தார். 1707-ம் வருஷம் விஷ்டன் என்பவர், நியூட்டன் கேம்பிரிஜ் சர்வ கலாசாலையில் செய்த கணித உபந்யாசங்களை (Algebraical Lectures)ப் புஸ்தக ரூபமாய் வெளிப்படுத்தினர். 1711-ம் வருஷம் நியூட்டனுடைய 'Methodus Differentialis' என்ற அரிய கணித புஸ்தகமும் 1779-ம் வருஷம் 'Geometria Analytica' என்ற புஸ்தகமும் வெளி வந்தன. 1696-ம் வருஷம் ஜான்மீ பெர்னூலியும் லீப்னிட்ஜ் என்பவரும் (Bernouilli and Leibnitz) ஐரோப்பாவில் உள்ள கியாதி பெற்ற கணித சாஸ்திரிகளைத் தங்கள் இரண்டு புதிய கணிதங்களுக்கு விடை யளிக்கும்படி விளம்பரஞ் செய்தவுடன், நியூட்டன் தனக்குக் கணிதங்கள் கிடைத்த இரண்டாம் நாள் விடையை அளிக்கும் திறமை வாய்ந்தவரென்றால் இவருடைய கணித ஆராய்ச்சியின் பெருமையை அதிகம் எழுத வேண்டுமோ? இவருடைய ஆராய்ச்சிகளின் உண்மைகளைத் தவறென்று அநேகர் போராடியும் அஞ்சா நெஞ்சத்தோடு தன் ஆராய்ச்சிகளின் உண்மையைப் பல கோட்பாடுகளுடன் எடுத்துக் காட்டித் தன் பகைவர்களின் வாயை மூடி வந்தார். பல வருஷங்

# இலங்கையிற் கதர் அபிவிருத்தி.

திருவாளர். வ. இ. மயில்வாகனம் அவர்கள்.

இந்தியாவிலும், ஏனைய இதர தேசங்களிலும் அதி குதூகலத்தோடு போற்றப்படும் மகாத்மா காந்தியடிகள், இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்ததும், நாம் எல்லோரும் அப் பெரியாரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதும் நாம் பூர்வத்திற் பண்ணிய புண்ணியத்தின் பயனே ஆகும். இதற்கு முன் எத்தனையோ தேசாபிமானிகளும் அறிஞர்களும் இலங்கைக்கு விஜயம் செய்து, பிரசங்க மேடைகளிற் சொற்பொழிவின் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும், நூன்முகமாகவும் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் காந்தி அடிகளின் உபந்நியாசப் பேருரைகளும் அவரின் உன்னத அபார சக்தியும் அவரின் தூய்மையும் வாய்மையும் யாண்டும் பரவியது போல் அவைகள் பரவவில்லை. அவர் பற்பல இடங்களில், "தான் இந்திய ஏழை மக்களுக்காகவும் தரித்திர நாராயணன் பொருட்டும் பணம் சேகரிக்க வந்ததென்றும், நீவிர் எல்லீரும் உதவிய இப் பண உதவியோடு அமையாது உண்ண உணவின்றி உடுக்க உடையின்றிச் சீவிக்கும் அவ் வேழைச் சகோதரர்கள் கைராட்டின மூலமாய் நூல் நூற்று நெசவு செய்யும் கதர் ஆடையையே ஒவ்வொரு இலங்கைவாசிகளும் அணிய வேண்டும்" என்றும் வற்புறுத்திச் சொன்னார்.

சுதந்திரமில்லாத நாடு, வறுமைக்கும், பிணிக்கும், தீயொழுக்கத்துக்கும், நாஸ்திகத்துக்கும் இரையாகிக் கொண்டே போகும் என்பது தேசத் தொண்டர்களின் அபிப்பிராயம். தனிப் பெரும் பேரறிவாளராகிய காந்தியடிகளின் எண்ணமும் இதுவே. கதரின் மகிமை எல்லாவற்றையும் எடுத்துக்கூற இவ் வியாசம் இடங்கொடாது. எனவே இதனைச் சுருங்கச் சொல்லில், கொடிய நோய், பசி, சோம்பல், வறுமை முதலியவைகளைத் தீர்க்கும் மருந்தே யென்னலாம். இம் மருந்தின் பிறப்பகம் கைராட்டினம் என்று கண்டு பிடித்தவர் மகாத்மாவே!



இலங்கைவாசிகள் மகாத்மாவின் பிரசங்காமிர்தத்தைப் பருகியதின் பின்பே கதர் அபிவிருத்தியில் ஊக்கமெடுக்கத் தொடங்கினார்கள். நம் மூதாதையர் பிறந்த இடம் இந்தியா என்றும், தாய் நாட்டுக்கு நாம் செய்யவேண்டிய தேசியக் கடனை ஆற்றவேண்டும் என்றும் ஆர்வத்துடன் சிந்தித்தார்கள். காந்தி அடிகளின் சுற்றுப் பிரயாணத்தில் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் இந்திய ஏழைச் சகோதரரின் பொருட்டுப் பணமுதவினார்கள். ஆனால் அவ்வவ்விடங்களில் மகாத்மாவின் வேண்டுகோள் யாதெனில்? "பணமுதவினால் மட்டும் போதாது; இந்திய ஏழைகள் இப் பணத்தைக் கொண்டு தங்கள் ஜீவியத்தை நடத்த நீங்கள் ஒவ்வொருவரும் அவர்களால் நெசவு செய்யப்படும் கதரையே அணிந்தால், உங்களுக்கும் அவர்களுக்கும் பரஸ்பர ஐக்கியம் ஏற்படும்" என்பதேயாம்.

இலங்கையிற் கதர் அபிமானம், பிரதானமாய்க் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும்தான் பரவியது. இவ்விடத்திலுள்ள கதர் அபிமானிகளின் பிரயத்தினத்தால் "அகில இலங்கைச் சர்க்கா சங்கம்" என்று ஒன்று கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் அக்கிராசனர், திருவாளர் J. யயவாடினு என்பவராவர். இப்பெரியார் காந்தியடிகளின் ஆச்சிரமத்தில் சில ஆண்டுகளுக்கு முன் நூல் நூற்பதிலும் நெசவு நெய்வதிலும் தேர்ச்சிபெற்று வந்தவர். அவரின் ஜீவியமும் குணமும் நடைகளும் எவராலும் மெச்சத்தக்கன. "எளிய வாழ்வும் உயரிய நோக்கமும்" என்பதற் கிணங்க அவர், தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் முழுமையும் காந்தியடிகளின்

இயக்கத்திற்கே அர்ப்பணஞ் செய்து விட்டார். ஷை சங்கத்தில் இப்பொழுது சுமார் 125 அங்கத்தவர்கள் ஜாதி மத கட்சி பேத மற்று ராட்டையில் நூல் நூற்று வருகிறார்கள். இச் சங்கத்தின் விதிகளெல்லாம், அகில இந்திய சர்க்கா சங்கத்தைத் தழுவியே நிற்கின்றன. எந்நாளும் கதர் தரிப்பதே இச்சங்கத்தின் முக்கியமான கட்டுப்பாடு. இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் சிலர், இலங்கையின் மற்றப் பாகங்களிலுமிருந்து ஒத்துழைத்து வருகிறார்கள். சுதந்திர உணர்வை உண்டாக்கிய மகாத்மாவைத் தினமும் தியானிப்பதற்கு ராட்டினமே ஓர் சாதனம்.

யாழ்ப்பாணத்தில் கதர் அபிவிருத்தியின் பொருட்டுத் தமிழ் மக்கள் அதிக முயற்சி செய்தும், வித்தியா சாலைகளிலும் நூல் நூற்பதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகள் செய்தும் வருகிறார்கள். கௌரவ ஸர். பொ. இராமநாதன் அவர்களால் பெண்பிள்ளைகளுக்கென ஸ்தாபிக்கப்பட்ட "இராமநாதன் கல்லூரியில்" (Ramanathan College) நூல் நூற்பதற்கு வகுப்புகள் ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கின்றன. ஷை கல்லூரியில் கௌரவ ஸர். இராமநாதரின் பாரியார் (Lady Ramanathan) கதர் அபிவிருத்தியின் பொருட்டுச் செய்து வரும் பிரயத்தினம் கண்டு மெச்சத்தக்கது. மகாத்மா, யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்த தினத்தை வருடம் தோறும் ஞாபக விழாவாய்க் கதர் தரித்து நடத்திவருகிறார்கள். ஷை அம்மையார், கல்லூரியில் பணம் சேகரித்து வருடம் தோறும் கதர் நிதியின் பொருட்டுக் காந்தியடிகளுக்கு அனுப்பிவருகிறார்.

சுதந்திரதாகங் கொண்ட ஒவ்வொரு பெரியாரும், இந்தியாவிலும் சரி மற்றுமுள்ள தேசங்களிலும் சரி கைராட்டினத்தை ஈற்றில் கையேந்துவார்கள் என்பதே அடிகளின் பூரண நம்பிக்கை. காந்தியடிகளின் கதிர்கள் எங்கும் வீசுக!

மகாத்மா வாழ்க! வந்தேமாதரம்.



# தாயின் மணிக் கொடி.

திருவாளர் K. கணேசன் அவர்கள்.

ஒவ்வொரு தேசத்திற்கும் அதற்குகந்த கொடி இன்றியமையாததாகும். தற்காலம் உலகில் விளங்கும் ஒவ்வொரு தேசமும், தன்னுடைய உன்னதமான லட்சியத்தையோ, அல்லது தான் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தையோ குறிக்கும் அடையாளமாக ஒவ்வொரு அழகிய கொடியை உடையதாயிருக்கின்றது.

பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் கொடியாகிய 'யூனியன் ஜாக்" (Union jack) ஆனது இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆகிய மூன்று தேசங்களுடைய கொடிகளைச்சேர்த்து, அம்மூன்று தேசங்களும் சேர்ந்துவிளங்கும் "கிரேட் பிரிட்டனின்" ஒற்றுமையைக் குறிக்குமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கா ஐக்கியநாடுகளின் (United States of America) நக்ஷத்திரங்களும், கோடுகளும் (Stars and the Stripes) அமைந்த கொடியானது அந்த ஐக்கிய நாட்டில் எவ்வளவு சின்ன ராஜ்யங்கள் சேர்ந்திருக்கின்றனவோ, அவற்றைக்குறிக்கும். நம் மருகாமையிலுள்ள ஜப்பான்தேசத்தின் கொடியானது, பூவுலகிற்குக் கண்ணாய்விளங்கும் சூரியனைக் கொண்டு விளங்குகிறது. இதுகாரணத்தினாலேயே ஜப்பானுக்குச் சூர்யோதயதேசம் (Land of the Rising Sun) என்ற காரணப் பெயரும் உண்டு. இம்மாதிரியே ஒவ்வொரு தேசத்திலும் அதன் மாண்பைக் குறிக்கும் கொடி விளங்குகிறது.

தொன்றுதொட்டு இவ்வுலகிலேயே புராதனமான நாகரீகம் பெற்றுவாழ்ந்து, தற்காலம் சுதந்திரமிழந்து, பஞ்சத்தும், நோய்களிலும் கிடந்து தவிக்கும் நம் தாய்ப் பாரத தேசத்திற்கு-அன்னை

பாரததேவிக்குக் கொடியுண்டோவெனில்-ஆம், இருக்கிறது. அது தான், உலகத்தில் உத்தமரென விளங்கும் மஹாத்மா காந்தியடிகளால் நமக்குக் கொடுக்கப்பட்ட, மூன்று வர்ணம் தீட்டப்பட்டு மத்தியில் கைராட்டினத்தை அடையாளமாய்க் கொண்ட கத்தார்க் கொடியாகும். இக்கொடியின் தத்துவத்தைச் சற்றே ஆராய்வோம்.

மூன்று வர்ணங்களில், சிகப்புவர்ணம், ஹிந்துமதத்தைக் குறிக்கும். ஹிந்துமதமே ஜனத்தொகையை அதிகமாய்க்கொண்டபடியால், அது கொடியின் அடிப்படை வர்ணமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. எப்போதுமே பிறமதத்தாரிடம் அன்பும், ஆதரவும் கொண்ட மதமாதலால், ஜனத்தொகை மிகுந்திருந்தபோதிலும் மற்ற எல்லா மதங்களிடத்திலும் ஸமபாவனையோடிருந்து அவ்வம் மதங்கள் சீரோங்கி விளங்குவதற் காதாரமா யிருப்பதைக் குறிக்கவே இவ்வர்ணம் அடிப்படையாய்க் கொடியிலமைந்தது.

அதற்குமேல் தீட்டப்பட்டிருக்கும் பச்சைவர்ணம், ஜனநாயக தத்துவங்கள் நிரம்பியதும், ஸஹோதரத்துவத்தையே அடிப்படையாய்க் கொண்டதுமான இஸ்லாம் மார்க்கத்தைக்குறிக்கும். ஹிந்து மதத்தளவு ஜனத்தொகை பெற்றிராவிடினும் அதற்கடுத்தபடியான ஜனத்தொகைமிக்க மதமாதலின் அதைக் குறிக்கும் பசுமைநிறம் சிகப்பு நிறத்திற்குமேலமைக்கப்பட்டது.

ஹிந்து-முஹம்மதிய மதங்களைத்தவிர இந்நாட்டில் விளங்கும் பௌத்த, சீக்கிய, ஜயின, பாரஸீக, கிறிஸ்தவ மதங்களைத் தூய்மையான வெண்மைநிறம் குறிக்கின்றது. ஸர்வமதங்களும் கடைசியில் வெளியிடும் தத்துவம், சுத்த ஸத்வகுணமயமாகிய பரம்பொருளையே சுட்டுதலால் அச் சுத்தமான சத்வகுணத்தின் நிறமாகிய வெண்ணிறம் எல்லாவற்றிற்கும் மேலே விளங்குகிறது.

இம் மூன்று வர்ணங்களுக்கும் மத்தியில் அமைக்கப்பட்ட கைராட்டினத்தின் உருவமோ, நம் ஏழை மக்களின் துயரைத் துடைக்க வெளிவந்த கத்தரியக்கத்தைக் குறிக்கின்றது. கத்தரினால் பொரு



ளாதார ஸ்வதந்திரம் ஏற்படும். பொருளாதார ஸ்வதந்திரத்தின் மூலம் ஜனங்களிடை ஓர் ஊக்கமும், உணர்ச்சியும் ஏற்பட்டு ராஜீய ஸ்வதந்திரம் சித்திக்கும் என்பது மஹாத்மா அவர்களின் துணிபு. அதை அறிவிக்கவே கைராட்டினத்தின் திருவுருவத்தைக் கொடியிடை அமைத்தார்.

மற்றுமோர் விதமாகவும் நம் கொடியின் தத்துவத்தை விளக்கலாம். உலகத்திடை மனிதருக்கு மூன்றுவிதமான குணங்களுண்டு. அதாவது, தாமஸம், ராஜஸம், ஸாத்வீகம் என்பன. தாமஸகுணமாவது தான் தனது என்ற சுயநலக்குணமே மேலிட்டுக் கேவலம் மிருகத்தையொத்து, உலகம் எந்நிலையடையினும், தான் சௌக்கியமாய் வாழவேண்டுமென்ற கீழ்க்கடையான நோக்கத்தைக் கொண்டது. இப்படிப்பட்ட மனிதன் அதமனாவான். இக்குணத்தை விளக்குவது கொடியசிகப்புநிறம்.

அதற்கடுத்த மேலானகுணம் ராஜஸம். இக்குணம் மேலிட்டவன், தனக்குப் பணம், கீர்த்தி முதலியனபெற்று உலகம் தன்னைப் புகழவேண்டுமென்ற அவாவினால் ஸமூகஸேவைசெய்ய முயற்சிக்கின்றான். இவன் முயற்சியினால் உலகமும் கொஞ்சம் நலமடைகிறது. இவன் மத்திமன்; இக்குணத்தைக் குறிப்பது குளிர்ந்த பசுமைநிறம்.

எல்லாக் குணங்களுக்கும் மேலானது ஸத்வகுணம் இதுவே தூய ஸ்படிகம்போன்றது. இக்குணம்பெற்ற பெரியோர்கள், தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்களாய்ப் "பரோபகாரார்த்தம் ஹிதம் சரீரம்" என்றபடி உடல் பொருளாவி மூன்றையும் உலகத்தின் நன்மைக்காகத் தத்தம்செய்து, உலகம்போற்றும் உன்னத நிலையை அடைகிறார்கள். அந்நிலையை அவர்கள் விரும்புவதுமில்லை, அவ்வணக்கத்தால் அவர்கள் சித்தம் கலங்குவதுமில்லை. ஒருவனுடைய மேன்மையை அறிந்து வணங்குவது உலகின் இயல்பாகையால், மனிதவர்க்கம் அவனுக்குத் தலைசாய்ந்து வந்தனமளிக்கின்றது. இக்குணத்தைக் குறிக்குமாம் சுத்தமான வெண்மைநிறம்.

ஒவ்வொருவனும் கேவலம் தாமஸநிலையிலிருந்து படிப்படியாய் உன்னதமான ஸத்வநிலையை அடையவேண்டு மென்பதை அறிவிக்கவே, சிகப்பு, அதற்குமேல பச்சை, அதற்கும்மேல் வெள்ளை ஆகியவர்ணங்கள் முறையே முக்குணங்களையும் குறிப்பிடக்கூடியனவாய் நம் கொடியில் விளங்குகின்றன. இவ்வாறு ஒருவன் கீழான குணத்தைவிட்டு மேலான குணமடையவேண்டின் பணிசெய்து, தன்னைச் சுத்தனுக்கிக் கொள்வதுதான்வழி. உலகத் துக்குழைக்க ஆரம்பித்தால், சுயநலக் குணங்களெல்லாம் விலகி, மேலான பரோபகார சிந்தனைமேலிட்டு மனிதன் தெய்வத்தன்மையை யடைகிறான். தற்சமயம், நம்நாடு வறுமையிலாழ்ந்து தவிப்பதை எண்ணி, இதன் பசிப்பிணியை அகற்றமுயல்வதுதான் சரியானசேவை யென்பதை யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அப்பணி செய்வதற்கேற்ற முக்கியமான சாதனங்கள் பலவற்றுள் கைராட்டினமும் ஒன்று என்பதையும் மறுக்கமுடியாது. அந்த உத்தமமான சேவையைக் குறிக்கவே நம் கொடியின் மூன்று வர்ணங்களையும் ஆக்ரமித்து விளங்குகிறது காமதேனுவாகிய கைராட்டினம். இந்த உண்மையை வெளியிடத்தான் நம் கொடி கத்தர்த்துணியால் செய்யப்படுகிறது.

இவ்வளவு உண்மைகளையும் தன்னுள்ளடக்கி விளங்கும் தாயின் தர்மத் துவஜத்தைத் தலைசாய்த்து வணங்குவோமாக.

"தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்"—பாரதியார்.

வந்தேமாதரம்.



# திருவிதாங்கூர் கவர்ன்மெண்ட் சோதிடர்

## (காலஞ்சென்ற) திரு. S. தாணுபிள்ளை அவர்கள்.

திருவாளர் இராமையா பிள்ளை அவர்கள்.




திருவிதாங்கூர் கவர்ன்மெண்டு சோதிடரும், திருவிதாங்கூர் கவர்ன்மெண்ட் தலைமை மொழி பெயர்ப்பாளர் திரு. இராமலிங்கம் பிள்ளை, எம். ஏ, அவர்களின் அருமைத் தந்தையாருமான திரு. ஸ்ரீநிவாஸம் பிள்ளை தாணுபிள்ளை யவர்கள். நிகழும் சுக்ல ஆண்டு ஆவணித் திங்கள் 21-ம் நாள் (6...9...1929) வெள்ளிக் கிழமை இரவு 9 மணிக்குத் தமது 88-வது வயதில் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகெய்தினர். சைவ வேளாளர்களின் மாபெருந் தலைவரும், சமரச சமயத்துக்கே ஓர் நடுநாயகமாய் விளங்கியவரும், அதில் மிகுந்த பற்றுடையவரும், பிறமத வெறுப்பற்றவரும், செறிந்த கல்வி யறிவுடையவரும், நிறைந்த குணமுடையவரும், அன்புக் களஞ்சியமும், முற்கால நற்பழக்க வழக்கங்களை மட்டும் அணுவளவும் தவறவிடாமல் பின்பற்றி வந்தவரும், தூய்மை, வாய்மை, அமைதி, குரு பக்தி, தெய்வ பக்தி, தாய் மொழிப் பற்று முதலிய நற்குண நற்செயல்களுக்கோர் உறைவிடமாகத் திகழ்ந்தவரும், வயதில் முதிர்ந்தவருமான ஓர் உத்தமரை நாம இழந்தோம். இப் பெரியார் திருவிதா[illegible] சைவ [illegible]ளாளர்களுக்குள் ஓர் திலகம் போன்[illegible] நின்றனர். இப் பெரியாருக்கு இணையாக இனியா[illegible]

198523
சென்னை 600 0..

அகத்தூய்மையும் புறத்தூய்மையும் அன்னாரின் உருக்கொண்டிருந்தனவோ என்னும்படி அத்தகைய தூய வாழ்க்கையை அன்னார் கைக்கொண்டொழுகினார். 'தூய்மை' என்பதை அன்னார் கடவுளாகக் கருதிப் போற்றி வந்தாரென்று கூறுவது மிகையாகாது. கடவுட்டன்மை தூய்மையிற்றான் உளது என்று அன்னார் உறுதிகொண்டொழுகினாரெனக் கூறலாம். எத்தகைய தூய எளிய வாழ்க்கையை அன்னார் நடத்திவந்தார்! "சுத்தம் சோறிடும்" என்பதை அன்னார் அறவே கடைப்பிடித்து நடந்தார். சைவ சமயத்தை யொட்டி ஒருவர்க்கு விதிக்கப்பட்ட அன்றாடக் கடன்களைத் தினையளவும் வழுவாது ஆற்றி வந்தார். இத்தகைய ஒழுக்கக கட்டுப்பாடுடைய ஒரு முதியவரை இக்காலத்தில் அதுவும் இக் கலிகாலத்திற் காண்பது அரிதினுமரிதே! இப் பெருந்தகையாளரைக் கண்டாலே காண்போருள்ளங் களிப்பெய்தும், அகம் பூரிக்கும். இப் பெரியாரின் அரும் பெருங் குணங்களும் அன்னாரின் தூய எளிய வாழ்க்கை நலன்களும் மக்களுக்கோர் பற்றுக்கோடாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் என்பதை உன்னி, அன்னவரின் ஜீவிய சரிதையின் சுருக்கமொன்று அடியில் வரையப் பெற்றுளது.

திரு. ஸ்தாணுபிள்ளை யவர்கள் (1017-ம் ஆண்டு பங்குனிமீ 2உ) 1842-ம் ௵ மார்ச்சுமீ 13உ ஞாயிற்றுக் கிழமை யன்று, திருநெல்வேலிக்குத் தெற்கே நான்கு மைலுக்கப்பால் தாமிரபரணி நதிக்கரையிலுள்ள சுத்தவல்லி என்னும் கிராமத்தில் சைவ வேளாள மரபைச் சேர்ந்த ஓர் உயர் குலத்திற் பிறந்தார். அன்னார் ஞாயிறில் தோன்றி, சோதிடப் புலவர்களுக்குள் ஓர் ஞாயிறு போன்று ஒளிரா நின்றாரென்பது அன்னவரது பிந்திய ஜீவிய வாழ்க்கை வரலாற்றினின்றும் தெற்றென விளங்கும். அன்னார் பிறந்தது தநுஸ் லக்னத்தில். அப்போது சனியும் தநுவிலிருந்தார். சாதாரணமாக, இது கோதண்ட சனியும் கோதண்ட குருவுமென்று சொல்லப்படுகிறது. இது மிக விசேஷமென்று சோதிட நூல் வல்லுனர்கள் கூறிப்போந்தனர். மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளுமுள்ள குடும்பத்தில் அன்னார் நாலாவதாகத் தோன்றினார்.



அவர் பதின்மூன்று வயதுவரை தாம் பிறந்த கிராமத்திலேயே தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியைக் கற்ற பின்னர் தம் தமைக்கையின் கணவரான திரு. இராமலிங்கம் பிள்ளை யவர்கள், கொச்சி அரச குடும்பத்து வைசூரிப் பிள்ளையாக உத்தியோகம் பெற்றிருந்ததனால், அச் சமஸ்தானத்திற் சென்று, அங்கே வடமொழியையும் அந் நாட்டு மொழியாகிய மலையாள மொழியையும் கற்று, அவ் விருமொழிகளிலும் தேர்ச்சிபெற்றார்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க, அன்னார் தம் இளமைப் பருவமுதலே மிகுந்த புத்தி நுட்பமும் நல்ல ஞாபக சக்தியும் விடா முயற்சியும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தார். "இளமையிற் கல்" என்றபடி பாலிய முதலே கல்விப் பொருளைத் தேடிக்கொள்வதிற் பேரூக்கம் செலுத்தி வந்து, வடமொழி கற்று முடிந்ததும், சோதிட நூல் பயில எண்ணங்கொண்டு, கொச்சி சமஸ்தானத்தில் இரிஞ்ஞாலக்குடை என்னும் ஊரிலே பரம்பரைச் சோதிடக் குடும்பமாகிய தெற்கேவாரியத்தில் சோதிடப் புலவரெனப் பெரும் புகழ் பெற்று விளங்கிய திரு. சங்குவாரி யவர்களின் சீடராக அமர்ந்தார். சோதிட சாஸ்திர நிபுணரான அப் பெருந்தகையாளரிடத்தில் பன்னிரண்டு ஆண்டு குருகுல வாசமிருந்து, குருவுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு, சோதிட நூல்களைக் கசடறக் கற்றுணர்ந்தார். பொதுவாகத் தமிழர்களுக்கு வடமொழிச் சுலோகங்களைப் பிழையற மொழிவது அவ்வளவு எளிதன்றெனினும், திரு. பிள்ளையவர்களுக்கு அது இயல்பாகவே எளிதாக விருந்தது. ஆகவே, அவர்கள் அவற்றைப் பொன்னேபோற் போற்றிவந்தார். தவிரவும், வடமொழிச் சுலோகங்களைச் சரியானபடி எடுத்துச் சொல்லி வியாக்கியானிப்பதில் அன்னவருக்கு இணையாகத் தமிழரில் வேறு யாரேனும் இத் தென்னாட்டிலுள்ளரோ என்பது ஐயமே.

திரு. பிள்ளையவர்கள் தமது குரு எள்ளென்பதற்கு முன் எண்ணெயாய் நின்று விடுவார். அதிகாலையில் படுக்கை விட்டெழுந்து, தம் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, முதலில்

தாய் தந்தையர்களை அந்தரங்கமாக வணங்கிப் பின் குருவை வணங்கி அவரது ஆசீர்வாதம் பெற்றுக் கடைசியாகக் கடவுளைத் தொழுவார். ஒரு சீடன் தன் குருவினிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வாறே தம் குருவினிடத்தில் தம் கடனாற்றித் தமது குருவின் தலைமைச் சீடராக விளங்கினார். சிற்சில வேளைகளில் தமது குருவுக்குப் பதிலாகத் தாமே அனுப்பப்பெற்றுச் சோதிட சம்பந்தமான காரியங்களைப் பிறர் பொருட்டு நிறைவேற்றியும் வந்தார். குருவின் ஆசீர்வாதம் அன்னாருக்கு நிரம்பக் கிடைத்தது. ஆகையினாற்றான் அன்னாரது சோதிடக் கல்வியும் நன்றாகப் பிரகாசித்தது.

நிற்க, குருவின் ஆசீர்வாதம் யாவர்க்கும் எளிதில் கிடைப்பது அருமை. அதிலும் இக் காலத்திய குருவும் சீடனுமென்ற முறையில் அதைப் பெறுவது குதிரைக் கொம்பே. தற்காலத்தில் குருவும் சீடனும் என்ற முறையே கிடையாமற் போய்விட்டது. குருவுக்கு முந்தின சீடர்களும் சீடர்களுக்குப் பிந்தின குருமார்களுமே மலிந்து இருக்கின்றனர். பள்ளிக்கூடங்களில் சமயத்தையும் ஒழுக்கத்தையும் ஒட்டிய கல்வி முறைகள் இல்லை. ஒழுக்கத்தைப்பற்றி ஏதாகிலும் தெரிந்தாலன்றோ குருவினிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை மாணாக்கர்கள் அறிந்து அவ்வாறு நடப்பார்கள். அதற்கு இடனில்லை. சமய சம்பந்தமான கல்வியும் அப்படியே. அதனால் கடவுள் பக்தி, குரு பக்தி ஆகிய இவ்விரண்டும் மாணவர்களால் கையாளப்படவில்லை. இத்துடன் தாய் மொழியும் புறக்கணிக்கப் பெற்று வருகிறது. ஒருவன் தன்னைப் பெற்று வளர்த்த தாயைப் புறக்கணித்து உதறித் தள்ளுவானேயாயின், அவன் பிற்கால நிலை என்னாகுமென்று வாசகர்களே அறிந்து கொள்வார்களாக. அதேபோன்று தான் பிறந்து வளர்ந்த தாய் மொழியை முற்றிலும் புறக்கணித்து, மாற்றாந்தாயாகிய பிற நாட்டு மொழிக்கு இடங்கொடுத்து அதைப் பேணிவந்தால், அவன் கதி என்னாகுமென்பது கூறுமலே விளங்கும். ஆகையால் தாய் மொழியைச் சற்றும் புறக்கணிக்காது



காத்து, அத்துடன் பிற மொழியையும் ஆதரிக்கவேண்டும். ஆகவே, குரு பக்தி, கடவுள் பக்தி, தாய் மொழிப்பற்று முதலியன மாணவர்களுக்கு இன்றியமையாதனவாம்.

திரு. தாணுபிள்ளையவர்கள் தமது குருவின் ஆசீர்வாதத்தை முற்றிலும் பெற்றுத் தமது சோதிடக் கல்வி முற்றும் கற்றுணர்ந்து முடிந்ததும், லௌகிகத் துறையில் இறங்க எண்ணங்கொண்டு திருவனந்தபுரம் சென்றார். அங்கிருந்து நார்மல் ஸ்கூல் டெஸ்டென்னும் கல்வி இலாகா ஆசிரியப் பரீக்ஷைக்கும், ரெஜிஸ்ட்ரேஷன் ரெகுலேஷன் சம்பந்தமான பரீக்ஷைக்கும் படித்து, 1047-ம் ஆண்டில் அவ்விரண்டு பரீக்ஷைகளிலும் வெற்றி பெற்றார். பிறகு, காலஞ்சென்ற திருவிதாங்கூர் திவான் திரு. சங்கரசுப்பய்யர் நாட்டு மொழிப் பள்ளிக்கூடங்களின் டைரெக்டராயிருந்த காலத்தில் திரு. பிள்ளையவர்கள் கோட்டாற்றிலுள்ள சர்க்கார் மலையாளம் பள்ளிக்கூடத்தில் ஓர் ஆசிரியாக அமர்ந்தனர். திருவாளர்கள் பென்ஷன் பெற்ற திருவிதாங்கூர் ஹைகோர்ட் ஜட்ஜ் டி. பல்பு பிள்ளை, பென்ஷன பெற்ற நிலவரி வருமானவரிக் கமிஷனர் கே. அநந்த நாராயணய்யர், காலஞ்சென்ற திவான் பேஷ்கார் வி. எஸ். கேசவய்யர், பென்ஷன் பெற்ற கவர்ன்மெண்ட்டு அஸிஸ்டெண்டு செக்ரெட்டரி ஆர். இராமலிங்கய்யர் முதலானவர்கள் திரு. பிள்ளையவர்களின் மாணவர்களாயிருந்தார்கள்.

திரு. பிள்ளையவர்கள் இதுகாறும் தமது மணத்தைக் குறித்துச் சிந்தைகொள்ளாமலிருக்கவில்லை. ஒரு பெண்ணை மணம் புரிந்துகொள்வது எளிது. ஆனால் ஒருவன் மணம் புரிந்துகொண்டபின் தானும் தன் மனையாளும் கூடி இல்லறத்தை நடாத்துவது எளிதன்று. ஆகவே, இல்லறம் நடாத்துவதற்கேற்ற பொருள் வருவாயைத் தேடிக்கொண்ட பிறகே மணம் புரிந்துகொள்ளத் தலைப்படவேண்டுமென்ற நன்னோக்குடன் திரு. பிள்ளையவர்கள், தாம் உபாத்திமைத் தொழிலில் அமர்ந்தபின், தமது 33-வது வயதில், அதாவது 1875-ம் வருஷத்தில் வள்ளியூரிலுள்ள வட்டக்குளத்துப் பிள்ளை வீடு என்று சொல்லப்படும் ஓர்

உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்த திரு. பெரியநாயகம பிள்ளையவர்களின் மூத்த புதல்வியான ராமலக்ஷ்மி என்ற ஓர் உத்தமியைக் கடிமணம் செய்துகொண்டு இல்லறத்தை இனிது நடத்திவந்தனர்.

திரு. பிள்ளையவர்கள் உபாத்திமைத் தொழிலிலிருந்துகொண்டே, வக்கீல் பரீக்ஷைக்குப் படித்து, 1050-ம் ஆண்டில் திருவிதாங் கோட்டு வக்கீல் பரீக்ஷையிலும் 1053-ம் ஆண்டில் ஸதர்க் கோர்ட் (ஹைகோர்ட் அல்லது உயர்தர நீதிமன்றம்) வக்கீல் பரீக்ஷையிலும் தேர்ச்சி பெற்றார். அன்னாரின் நண்பர்களில் பலர் அவர்களை நியாயவாதத் தொழில் புரியுமபடி பன்முறை வற்புறுத்தியும், வாய்மை நெறி கடைப்பிடித் தொழுகவேண்டுமென்ற நன்னோக்கங்கொண்டு, அதற்கு அன்னார் இசைந்திலர். 1053-ம் ஆண்டில் திருவிதாங்கூர் கவர்ன்மெண்ட் சோதிடர் திரு. அய்யப்பன்பிள்ளை காலஞ்சென்று விட்டவே, அந்த ஸ்தானத்தில் திரு. தாணுபிள்ளையவர்கள் கவர்ன்மெண்ட் சோதிடராக நியமனம் பெற்றார். பிள்ளையவர்கள் சோதிடம் கணிப்பதில் மிக்க திறமை வாய்ந்தவரா யிருந்தார். இவ் வுத்தியோகத்தி லிருந்தபடியே வான சாஸ்திரமும் கற்றுணர்ந்து தேர்ச்சிபெற்றார்.

திரு. பிள்ளையவர்கள் சோதிட சாஸ்திர விஷயமாயும் வான சாஸ்திர விஷயமாயும் மிக உழைத்து, இந்திய வான சாஸ்திர ஆராய்ச்சிகள் பல நடத்தினார்கள். எழுது கருவிகள் யாதொன்றுமின்றி, சில சோகி (பலகறை)களை மட்டும் தரையில் பரப்பி அவற்றின் உதவியால் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், சதுரப் பெருக்கம், கனப் பெருக்கம் முதலிய எத்தகைய கணக்குகளையும் சொற்ப நேரத்துக்குள் செய்து முடிக்கும் அன்னாரது திறமையைக் குறித்து இந்தியரும் ஐரோப்பிய நமுட்பட அநேக கணித பேராசிரியர்களும் ஏனையோர்களும் அதிசயிக்கலாயினர். இந்திய வான சாஸ்திர முறைப்படி கிரஹணங்களை, அதாவும் சூரிய கிரஹணங்களைக் கணக்காக்கிக் கண்டுபிடிப்பது எளிய காரியமன்று. இவை சம்பந்தமாய் அன்னார் பெரிதும் உழைத்து வெற்றி பெற்றிருக்கின்றனர். வலைய கிரஹணம் (Annular



eclipse) அநேக ஆண்டுகளுக்கு ஒரு தடவை மட்டுமே நிகழும். கொல்லம் 1032-ம ஆண்டுக்குப் பின் 1077-ம் ஆண்டு ஐப்பசிமீ 26வ அதாவது 1901-ம் வருஷம் நவம்பர்மீ 11வ அத்தகைய ஒரு கிரஹணம் மேற்குக் கரையில் தென்பட்டது. திரு. தாணுபிள்ளையவர்கள் அந்தக் கிரஹணத்தை யொட்டி நடத்திய ஆராய்ச்சியும் கணிதமும் முற்றிலும் சரியாகவிருந்தன. 1077-ம் ஆண்டின் திருவிதாங்கூர் சர்க்கார்ப் பஞ்சாங்கத்தில் அவர்கள் தயாரித்துள்ள மேற்படி கிரஹணத்தின் படம் ஒன்று அடங்கியுள்ளது.

சோதிடர் தாணுபிள்ளையவர்கள் நடத்திய சோதிட ஆராய்ச்சிகளின் சில முடிவுகளை, கவர்ன்மெண்ட் லெக்ச்சர கமிட்டியின் ஆதினத்தில் அன்னார் நிகழ்த்திய சொறபொழிவுகளிற் காணலாம். அன்னவர் சொற்பொழி வாற்றிய விஷயங்களாவன:— (1) பூமியின் தினசரிப் போக்கு, (2) பூமியின் வருடாந்தரச் சுற்று, (3) கால கணிதம், (4) சூரிய கிரஹணம், (5) சந்திர கிரஹணம, (6) அயன சலனம், (7) ஆரியபட்டாச்சாரியாரும் அன்னாரியற்றிய வான சாஸ்திர நூல்களும், (8) தற்காலத்திய கடும் பிரச்னை ஆகிய இவையாம். இவையனைத்தும் முற்காலத்திய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அன்னவரால் இவற்றிற்கென்று பிரதியேகமாய்த் தயாரிக்கப் பெற்ற படங்களையும் குளோபுகளையும உதாரணமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டன. வான சாஸ்திர சம்பந்தமான அறிவை மக்களிடையில் பரவச்செய்யும பொருட்டு, அன்னார் தம் சொந்தச் செலவில், வட திருவிதாங்கூர், கொச்சி, திருநெல்வேலி, மதுரை முதலான இடங்களுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றினார். கால கணிதத்தைக் குறித்துள்ள சொறபொழிவு சர்க்கார் செலவில் மலையாள மொழியில் அச்சியற்றி வெளியிடப்பட்டுளது. ஆரிய பட்டாச்சாரியாரைப் பற்றிய பிரசங்கத்தை திரு. பிள்ளையவர்களின் மகன் திரு. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, 1905-ம் வருஷ சென்னை இந்தியன் ரிவ்யூ (Indian Review) என்ற

மாதச் சஞ்சிகையில் பிரசுரித்திருக்கின்றனர். இதைத் தானே மெஸ்ஸெர்ஸ் ஜி. ஏ. நடேசன் கம்பெனியார் மீண்டும் அச்சியற்றிப் புத்தக ரூபமாக வெளியிட்டுள்ளார்கள். ஏனைய கட்டுரைகள் அச்சியற்றுவதற்கு ஏற்றவையாயிருந்தும் தற்பொழுது கையெழுத்துப் பிரதிகளாகவே இருக்கின்றன. காலஞ்சென்ற மாட்சிமை பொருந்திய கேரளவர்ம வலிய கோயில் தம்பிரான், காலேஜ் பிரின்ஸிபல் மிஸ்டர் ரூஸ், எம். ஏ., டாக்டர் ஹார்வி, மிஸ்டர் ரீட், டாக்டர் மிச்சல், பேராசிரியர் எம். ஏ. சுந்தரம்பிள்ளை யவர்கள் முதலிய கல்வி அறிஞர்களும் புலவர்களும் திரு. தாணுபிள்ளை யவர்கள் நிகழ்த்திய மேற்கூறிய சொற்பொழிவுகளைப் பெரிதும் புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள்.

திரு. பிள்ளை யவர்கள் ஜாதகம் கணிப்பதில் மிக்க கீர்த்திவாய்ந்தவர்களா யிருந்தார்கள். யாராவது தன் குழந்தையின் ஜாதகம் கணித்துத் தரும்படி கேட்டால், முதலில் அந்தக் குழந்தையின் ஆயுள் இவ்வளவென்று கண்டுபிடித்த பிறகே அதன் ஜாதகத்தைக் கணிக்கப் புகுவார். அந்தக் குழந்தை பிறந்த சொற்ப காலத்துக்குள் அதாவது ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்துக்குள் தவறிவிடுமென்று கண்டால், அது விவரத்தை வெளிப்படுத்தாமல் அந்தக் கால அளவுக்குப் பிறகு ஜாதகம் கணித்துத் தருகிறேனென்று சொல்லி, வந்தவரை அனுப்பிவிடுவார். ஜாதகங் கண்டு பிற்கால நிகழ்ச்சிகளை உள்ளதை உள்ளவாறே கூறுவது அன்னாரது வழக்கம். சோதிட சம்பந்தமாய் எவர் வந்து என்ன சந்தேகம் கேட்பினும், அதை உடனுக்குடனே நிவர்த்தி செய்து கொடுத்துவந்தார். ஜாதகம் கணிப்பதற்காயினும் ஜாதகங் கண்டு அதன் பலாபலன்களைக் கூறுவதற்காயினும் ஒருவரிடமும் கைம்மாறு கருதாமலே தம் கடனாற்றி வந்தார். இந்தக் காரணங்களால் மக்கள் ஏராளமாக அன்னாரிடம் சென்று சோதிட சம்பந்தமான தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டனர். அஷ்டமங்கலியப் பிரச்னம் வைத்து, பிள்ளையவர்கள் விதித்த பரிஹாரங்களைச் செய்து, மக்கட் பேறில்லாமலும் தீரா நோயாலும் வருந்தினவர்கள் தங்கள் குறைகள் நீங்கி இன்புற்றவர்களாய்ப் பலருளர். இக் காலத்திற் போன்று பத்திரிகைகளில் சோதிட விளம்பரங்கள் பிரசித்தம் செய்து மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் தொழிலை பிள்ளையவர்கள் கனவிலும் கருதியிலர். அத்தகைய வழக்கத்தை அன்னார் கண்டித்தும் வந்தார்கள். திரு. பிள்ளையவர்கள் தமது முதிய பருவத்திலும் தம்மை நாடி வருவோரை அன்புடன் வரவேற்று அவர்கள் சோதிட சம்பந்தமாய் விரும்பிக் கேட்பவைகளை நிறைவேற்றிக் கொடுத்து வந்தார். அவர் அநேக மாணவர்களுக்கு யாதொரு பிரதிபலனுமின்றிச் சோதிடம் பயிற்றுவித்துள்ளார்.



திரு. பிள்ளையவர்கள் 29 வருஷ காலம் கவர்ன்மெண்ட் சோதிடராக வேலை பார்த்துவந்தார். வான சாஸ்திரத்திலும் சோதிட சாஸ்திரத்திலும் அன்னாருக்குள்ள ஒப்பற்ற அறிவு வன்மையைக் கருதி, அன்னவருக்கு 10 வருஷம் உத்தியோக காலம் நீட்டிக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு தம்முடைய பிரியம்போல் பின்னும் உத்தியோகம் பார்க்கவாகிலும் அல்லது உத்தியோகத்தினின்றும் பிரியவாகிலும் அனுமதி அளிக்கப்பட்டது. ஆகவே, தமது 66-வது வயதில் 1083-ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் தாமாகவே உத்தியோகத்தினின்றும் விலகிக் கொண்டார்கள். பென்ஷனாய் இரண்டு ஆண்டுகள் சென்ற பின், 1085-ம் ஆண்டிறுதியில் 1086-ம ஆண்டின் சர்க்கார் மலையாள பஞ்சாங்கத்தைக் கணித்துத் தரும்படி கவர்ன்மெண்டாரால் கேட்டுக்கொள்ளப் பட்டார். அவ்வாறே இரண்டரை மாதங்களுக்குள் அவ் வேலையை முடித்துக் கொடுத்தார்.

திரு. பிள்ளையவர்கள் உத்தியோகத்தினின்றும் நீங்கிப் பென்ஷன் பெற்ற பின் தமது எஞ்சிய வாழ்நாளை இகத்துக்கும் பரத்துக்கும் பயன்படத் தக்க வழியில் செலுத்தி வந்தார்கள். வான சாஸ்திர சம்பந்தமாயும் சோதிட சாஸ்திர சம்பந்தமாயும் ஆராய்ச்சிகள் நடத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த போதிலும், சதா சர்வ காலமும் கடவுள் பக்தியிலீடுபட்டு வந்தார்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்ற தமிழ் மறைப்படி ஒருவன் எவ்வளவு நிறைந்த கல்வியறிவுடையவனாயிருந்தாலும் எத்தகைய கலா விருதுகள் பெற்றிருந்தாலும், எல்லாம் அறிந்த பரமபொருளின் இணையடிகளைப் போற்றி வணங்கானாயின் அவன் வாழ்க்கை இம்மை மறுமை இரண்டிலும் பயன் பெறாது. ஆகையால், திரு. பிள்ளையவர்கள் எக்காலத்தும் எவ் வேளையிலும் கடவுளை மறவாது அவரடி போற்றி அவரது அன்புக்கு ஆளாகினார்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்றார் நம் பொய்யா மொழிப் புலவர். ஆகையால், திரு. பிள்ளையவர்கள் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் காத்து வந்தனர். உடல் நலம் பேணுவதில் யாரும் அன்னாருக்கு இணையாகார். "நோய்க் கிடங்கொடேல்" என்ற முதுமொழியை அன்னார் பொன்னேபோற் போற்றி வந்தார். தூய்மைக் கடவுள் அன்னவர் முன்னிலையில் எப்பொழுதும் தாண்டவமாடிக்கொண்டிருந்தது. தினந்தோறும் தூய்மை ஸ்நானம் செய்து தூய்மைக் கடவுளைப் பூஜித்துப் போற்றித் துதித்த பிறகே உணவு கொள்வார். உணவு கொள்வதில் அன்னார் மிக்க கவனம் செலுத்தி வந்தனர். தமது உடல் நிலை அறிந்து அதற்கேற்ற உணவையே உட்கொள்வர்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்"
"மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு"

என்ற திருவள்ளுவரின் பொன்மொழிக்கிணங்க, ஒருவன் தான் உண்டது ஜீரணமான பின்னர் மீண்டும் உணவு கொண்டு வந்தால் அவன் யாக்கைக்கு மருந்தென்பதே வேண்டியதில்லை. நோயென்பது அவனை அணுகவே மாட்டாது. அதுபோலவே, உடலுக்குற்ற உணவைச் சற்றுக் குறைவாக உண்டு வந்தால், அவன் உடம்புக்கு எத்தகைய ஊனமும் நேரிடாது. திரு. பிள்ளையவர்கள் இவையிரண்டையும் கடைப்பிடித்து அவ்வாறே நடந்து வந்



தார்கள். ஆகையால், அன்னார் நோயற்ற வாழ்வெய்தி தீர்க்காயுளுடையவராயினர். அன்னார் நல்ல உடல் வன்மையும் மனோதிடனும் உடையவராயிருந்தமையால், அவரது முதிய பருவத்திலும் அன்னாரது பேச்சு சற்றேனும் தடுமாற்றமடையவாயினும் பார்வை குன்றவாயினும் கையெழுத்தேனும் நிலைதளரவாயினுமில்லை. அன்னார் அத்தகைய நெறிபிறழாத் தூய எளிய வாழ்க்கையை நடாத்தி வந்ததால், அவர்களது உடற்கட்டு விடுபடாமலிருந்தது. இப் பெரியார் இத்தனை வயதாகியும் காப்பி, தேயிலை, தாம்பூலம், புகையிலை, பொடி முதலியவற்றை ஒரு பொழுதும் எக் காரணம் பற்றியும் உபயோகித்தது கிடையாது. உடல் நலனைக் கருதி, மருந்தாக ஊனையேனும், ஊன் சத்தையேனும், மதுவையேனும் உட்கொண்டிருப்பதில்லை. இவையனைத்தும் உடலைக் கெடுப்பனவன்றி வளர்ப்பனவன்று என்பதை அன்னார் திடமாக நம்பினார். பலருக்கும் அவற்றின் தீமைகளை எடுத்துரைத்து வந்தார். இத்தகைய அரும்பெருங் குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தார்.

திரு. பிள்ளை யவர்களுக்கு 84-வது வயதில், சதாபிஷேக சாந்தியென்னும் அரிய சடங்கு நடைபெற்றது. அவ் விசேஷத்தையொட்டித் திருவிதாங்கூர் மஹாராணி ரீஜண்ட்டம்மையார் ஒரு மதிப்பான பெருந் தொகை நன்கொடை அளித்தார்கள்.

திரு. பிள்ளையவர்கள் அரசர் பால் மிகுந்த பற்றுடையவராயிருந்தார். அடிக்கடி அரச குடும்பத்தினரைச் சென்று பார்த்து, அவர்களது கருணைக்குப் பாத்திரரானார். திருவிதாங்கூர் மஹாராஜா மூலம்திருநாள் நாடு கடந்த செய்தியைக் கேட்டு திரு. பிள்ளையவர்கள் அதுகாலை வாய்விட்டழுது விட்டனர்.

திரு. பிள்ளையவர்கள் தமது அந்திய காலம் வரை எவ் விஷயத்தைக் குறித்தும் ஆர்வமுடன் உரையாடுவதில் விருப்பமுடையவரா யிருந்தார். பிரத்தியேகமாய் வான சாஸ்திர ஆராய்ச்சி, முற்கால நூலாசிரியர்களின் கால நிர்ணயம், ஆகிய இவ் விஷயங்களைப் பற்றி வாதப் பிரதிவாதம் செய்வதே அன்னாரது சிறந்த நோக்கமாயிருந்து வந்தது. அவருக்கு இத்தனை வயதாகியும் நல்ல உணர்ச்சி வன்மை உண்டாயிருந்தது. செவிப்புலன் மட்டும்

சற்று மந்தமாயிருந்த தெனினும், கட்புலன் முதலிய ஏனைய புலன்கள் இறுதிவரை நன்னிலையிலிருந்தன. அவர்களது வியக்கத் தக்க புத்தி நுட்பமும் நிறைந்த ஞானமும் அன்னாருடன் உரையாடவந்த பலரையும் அதிசயிக்கச் செய்தன.

திரு. பிள்ளையவர்கள் நாற்பத்து மூன்று ஆண்டுகளாக, கவர்ன்மெண்ட் அங்கீகாரமும் கிராண்டும் பெற்ற ஆரம்ப நாட்டு மொழிப் பாடசாலை யொன்று தமது சொந்தமாக நடத்தி வந்தார். அதில் ஆண் பெண் இரு பாலார்க்கும் கல்வி போதிக்கப்பட்டது. ஆகவே, அன்னார் ஆரம்பக் கல்வியைப் பரவச் செய்வதிலும் பெண் கல்வியை ஆதரிப்பதிலும் அக்கறை செலுத்தி வந்தனர் என்பது நன்கு விளங்கும்.

இவ்வாறு, இப் பெரியார் "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற தமிழ் மறைக்கிணங்க, பூத உடம்பை நீத்துப் புகழுடம் பெய்தினர். திரு. பிள்ளையவர்கள் 'நோய்வாய்ப் படாமலும், பாயிற் கிடந்து அல்லற்படாமலும் யாதொரு யம பயமுமில்லாமலும், இரண்டே நாள் படுக்கையிற் கிடந்து, தமக்குப் பின் 75 வயதான தமது இல்லக்கிழத்தியாரையும், ஒரு புதல்வரையும் ஒரு புதல்வியையும் மற்ற உறவினர்களையும் விடுத்து வெகு அமைதியாய் இறைவனது இணையடி நீழலைச் சார்ந்தார். அவரது இறுதி மொழியாவது, "ஷண்முகநாதா! என்னை அதிகமாகக் கஷ்டப்படுத்தாமல் அழைத்துக்கொள்ள வேண்டும்" என்பதாம். இத்தகைய பக்தனின் விண்ணப்பத்திற்கு இரங்காத கடவுளருமுண்டோ? அன்னாரின் ஈமக் கடன்கள் அன்னவரது ஒரே மகனான திரு. இராமலிங்கம் பிள்ளையவர்களால் வெகு சிறப்பாக நடத்தப்பட்டன. அன்னாரின் ஈமக் கடன்களை நிறைவேற்றுவதை யொட்டித் திருவிதாங்கூர் மஹாராணி ரீஜென்டம்மையாரால் ஒரு மதிப்பான தொகை பிரத்தியேகமாகக் கற்பித்து அளிக்கப்பட்டது.

திரு. பிள்ளை யவர்களைப் போன்று இத்தகைய வயோதிக பருவத்தில் இத்தகைய அமைதியுற்ற மரணம் கிடைப்பது அரிதினுமரிதே. அன்னாரின் ஆன்மா நித்திய சாந்தி எய்துமாறு எப்பெருமானை இறைஞ்சுவோமாக!

---



# தேவாலயச் சீர்திருத்தங்கள்

திருவாளர் என். வேங்கடரமணன் அவர்கள்.

உலகில் ஆஸ்திக விருக்ஷத்தின் கிளைகளாகத் தோன்றியுள்ள சமயங்களுள் ஒவ்வொரு சமயத்தாரும் தத்தம் சமயக்கோட்பாட்டின்படி ஒவ்வொருவகையில் தேவாலயங்களை நிருமித்துக்கொண்டு, அவற்றில் தத்தம் கடவுள் வழிபாடுகளைச் செய்து வருகின்றனர். கிறிஸ்தவர்கள் சர்ச்சுக்குச் சென்று கடவுளை நோக்கி ஜெபம் செய்வதும், மகம்மதியர்கள் மசூதிக்குச் சென்று கடவுளைத் தொழுவதும், இந்துக்கள் தம் சமயக் கோயில்களுக்குச் சென்று கடவுளை ஆராதனை செய்துவருவதும் யாவருமுணர்ந்ததே. மற்ற மதஸ்தரின் கோயில்களைவிட்டு நம் மிந்துக்களின் தேவாலயங்களைப் பற்றி மாத்திரம் இங்கு விசாரிப்போம்

இந்தியர் அல்லது பாரதமக்கள் என்னும் ஒரு பெயரால் நாம் அழைக்கப்படலாமாயினும், உண்மையில் நாம் அனைவரும் ஒரே மதஸ்தர்களாக இருக்கவில்லை. கல்லையும், காற்றையும், மலையையும், மரத்தையும், நீரையும், நெருப்பையும், பாம்பையும், பசுவையும் கடவுளாகப் பூசிக்கும் தாழ்ந்த மதஸ்தர்கள் முதல் மும்மூர்த்திகளையும் அதற்குமேலாக ஒரே பரப் பிரஹ்மத்தையும் மதித்து உபாசிக்கும் உயர்ந்த வேதாந்த மதஸ்தர்கள் வரையில் எண்ணற்ற மதங்களைக் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். இந்நிலையில் ஒவ்வொரு மதஸ்தர்களும் தத்தம் கடவுள்களுக்குத் தம் புத்திக்கெட்டிய வகையில் ஆலயங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஒருவன் ஒரு மரத்தடியை ஆலயமாகக்கொண்டு, அங்கு "முனியன்" என்ற பெயரால் ஒரு செங்கல்லை நட்டுப் பூசிப்பான். இவ்வாறு மரத்தடி-

களிலும், மலையடிகளிலும், குளக்கரைகளிலும், ஆற்றோரங்களிலும், ஊரோரங்களிலும் முனியப்பன், செல்லாண்டவன், காத்தவராயன், கருப்பன், கடகடப்பான், சோணங்கிராயன், மதுரைவீரன் போன்ற பல ஆண் தெய்வங்களும் செல்லம்மன், நல்லம்மன், நாக்கம்மன், மூக்கம்மன், ஊர் மாரியம்மன், அங்காளம்மன், காட்டேரி, பிடாரி முதலிய பல பெண்தெய்வங்களும் இந்து மதத்தின் பெயராலேயே கோயில் கொண்டு குடியிருந்து வருகின்றன. எனினும் நாகரீகம் படைத்த இந்திய உயர்குல நன் மக்கள் இத் தெய்வங்களையும், இக் கோயில்களையும் வழிபடுவதில்லை. எனவே வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் என்ற பிரசித்தமான அறிவுப் பொக்கிஷங்களை ஆதாரமாகக் கொண்ட இரண்டொரு மதங்களே இந்தியரின் முக்கிய சமயங்களாகச் சொல்லப்படுகின்றன. அவற்றுள் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்துவைதம் என்ற மூன்று சமயங்கள் முதன்மையானவை. இவற்றுள்ளும் நம் நாட்டில் சைவ, வைணவங்களே பிரதானமாகப் பாராட்டப் படுவனவாம். இவை இரண்டினுள்ளும் ஒரு சிலர் துவைத பரமாகவும், ஒரு சிலர் விசிஷ்டாத்வைத பரமாகவும், மற்றுஞ்சிலர் அத்வைத பரமாகவும் சமய ஆசாரங்களை அனுஷ்டிக்கின்றனர். நாட்டில் பிரசித்தி யடைந்துள்ள பெரிய கோயில்களைப் படைத்த ஸ்தலங்கள் பலவும் வைஷ்ணவ ஸ்தலங்களாகவோ, அல்லது சைவ ஸ்தலங்களாகவோ இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை:- வைஷ்ணவ ஸ்தலங்கள் 108 திருப்பதிகளென்னவும், சைவ ஸ்தலங்கள் 1008 சிவாலயங்களென்னவும் கூறப்படுகின்றன. வைஷ்ணவ ஸ்தலங்களுள் வைணவ சமயாசாரியர்களால் மங்களா சாசனம் பெற்றவைகளும், சைவ ஸ்தலங்களுள் சைவ சமயாசாரியர்களால் பாடல் பெற்றவைகளுமே உயர்ந்தவைகளாக அவ்வம் மதஸ்தர்களால் பாராட்டப் படுகின்றன. வைணவ சமயாசாரியரில் முக்கியஸ்தர்கள் அச் சமய தத்துவ உண்மைகளை ஆராய்ந்து விரிவுரைகள் செய்திருக்கின்றனர். அப்படியே சைவ சமயிகளும் செய்திருக்கின்றனர். ஆயினும் இவ்விரு சமயத்தாரிடையில் தீர்ந்துள்ளாதப் போர்களும், சமூகக் கலகங்களும் எண்ணற்றன. தற்போது பிரசித்தி பெற்ற வைஷ்ணவக் கோயில்



கள் சிலவற்றைச் சைவக் கோயில்களெனச் சைவரும், அப்படியே பிரசித்தி பெற்ற சைவக் குமரக் கடவுளின் கோயில்கள் சிலவற்றை வைணவக் கோயில்களென வைணவரும் கூறிவருகின்றனர். முற்காலத்தில்-இந்திய அரசர்கள் காலத்தில், ஒரு அரசன் வைணவனாயின் அவனுடைய ஆட்சியின் காலத்தில் அவனுடைய நாட்டிலிருந்த சில சைவக் கோயில்கள் வைணவக் கோயில்களாக மாற்றப் பட்டதும், அப்படியே ஒரு அரசன் சைவனாயின் அவனுடைய நாட்டி லிருந்த சில வைணவக் கோயில்கள் சைவக் கோயில்களாக மாற்றப் பட்டதும் உண்மையாக விருப்பது சகஜமே. ஆயினும் அதிர்ஷ்ட வசத்தாற் போலும் நம் சமயத்தில் தலையிட மாட்டோமென்று உறுதி கூறிய பிரிட்டிஷ் துரைத்தனம் நம் நாட்டில் ஏற்பட்டபடியால் இது காலை ஒரு சமயக் கோயிலை மற்றொரு சமயக் கோயிலாக மாற்றும் கொடுமைகள் நேர இடமில்லாமற் போயிற்று. மேலும் வர வர நாட்டில் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியும், கல்வியறிவும், சமரச உணர்ச்சியும் வளர்ந்து வருவதற் கேற்ப இன்று சைவ வைணவக் கோயில்களுக் கிடையில் பெருஞ் சண்டைகள் அனைத்தும் ஒடுங்கி வருகின்றன. ஆயினும் வைணவரிடையில் தென்கலை, வடகலைச் சண்டையும் சைவரிடையில் சாதாரணசைவ வீரசைவ வழக்குகளும் இன்னும் ஒழிந்த பாடில்லை. எனினும் ஒவ்வொரு சமயத்திலும் மேலான அறிவு படைத்த சமரச வாதிகள் பலர் இன்று வெளி வருவதொன்றே நற் குறியாகும். எனவே இது காலை நாட்டில் அறிவும், ஒழுக்கமும், ஆசாரமும், நீதியும், ஒற்றுமையும், சமரச ஞானமும் ஏற்படாமல் தடை செய்யும் காரணங்களா யிருப்பவற்றை நாட்டின் நலத்தில் நாட்ட முடையார் ஒவ்வொருவரும் ஒழிக்க முயல வேண்டும்.

சமயத்தின் பெயராலும், கோயில்களின் பெயராலும் நடைபெறும் நீதிக்கு முரணான செயல்களை நீக்கிச் சீர்திருத்தம் செய்து எங்கும் தூய்மையை யுண்டாக்க வேண்டும். நம்மிடத்தி லுள்ள உண்மையான ஊழல்களை மூடிவைத்துக் கொண்டு, மிஸ் மேயோ

போன்ற அமெரிக்கமாது நம்மையும் நம் கோயில்களையும் இப்படித் தூஷித்தாள், அப்படித் தூஷித்தாள் என்று குறை கூறிக் கொண்டிருப்பதாலும், சிலர் நம் கோயில்களையும், கடவுள்களையும் தூஷித்து நாட்டில் நாஸ்திகப் பிரச்சாரம் செய்கிறார்களென்று அவர்களை வைதுகொண்டிருப்பதாலும் ஒரு பயனுமில்லை. ஆஸ்திகப் பிரச்சாரம் என்ற பெயரால் நம் கோயில்களிலும், நம் சமயானுஷ்டானங்களிலும் உள்ள உண்மையான குறைகளுக்கும் தத்துவார்த்தங்கள் கூறி, அவற்றை மேலானவையென வானமளாவப் புகழ்ந்து வாய்ப் பந்தல் போடுவதாலும் பயனில்லை. ஆகவே உள்ள குறைகளை உள்ளவாறு உணர்ந்து, அவற்றை நீக்க முயலுவதே அறிவுடைமையாகும். நம்மால் போற்றிக் கொண்டாடப் படும் பெரும் தேவாலயங்கள் பலவற்றுள்ளும் நடை பெற்று வந்துள்ள-வரும் குறை பாடுகளைப் பற்றிப் பண்டு முதற் பல பெரியோர்கள் எடுத்துக் கூறியே வந்திருக்கின்றனர்.

பரிசுத்தமான தூய எண்ணங்களை உண்டு பண்ண வேண்டிய இடங்களாகிய தேவாலயங்களில், மக்கள் மனத்தில் விபசார எண்ணங்களையும், தீய சிந்தனைகளையும், திருட்டுக் குணங்களையும் உண்டாக்கும் காக்ஷிகளை வைத்திருத்தல் எவ்வளவு முரணான தென்பதைக் கவனியுங்கள். முற்காலத்தில் நமது பெரியோர்கள் எவ்வளவு நல்ல கருத்துடன் ஒரு காரியத்தை ஏற்படுத்தியிருப்பினும் இன்று அதனால் நன்மையை விடத் தீமையே அதிகமிருக்கிறதாகத் தெரிய வந்தால், அதை உடனே ஒழிப்பதற்கு அறிவாளிகள் பின்னடைதல் கூடாது. நமது ஜன சமூகம் இருக்கும் நிலையில் எந்த நல்ல சீர் திருத்தத்தையாயினும் நமது சமயத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் ஏற்பட்டுள்ள ஆசாரங்களில் வாய் வார்த்தையாலோ அன்றி எல்லா மக்களுக்கும் சுருதி, யுக்தி, அனுபவங்களைக் காட்டிப் பிரச்சாரம் செய்தோ சாதித்துவிட முடியாது. உடன் கட்டையேறும் வழக்கம், நரபலி கொடுக்கும் வழக்கம் முதலியன சட்டத்தாலன்றி வெறும் வார்த்தைகளால் ஒழிக்கப் படவில்லை. எனவே வைதீகர்களின் வீண் கூச்சலை நிராகரித்து



நாட்டிற் கவசியமான சமய-சமூகச் சீர் திருத்தங்களைச் சட்டத்தின் மூலமாகவே ஏற்படுத்த வேண்டும்.

முதற் கண் கோயில்களில் ஆடு, கோழி முதலிய பிராணிகளைப் பலியிடும் வழக்கத்தை நிறுத்த வேண்டும். சைவ வைணவ திருக் கோயில்களின் இரதோற்சவ காலங்களில் தெருக்களின் மூலைகளிலும், மற்றும் பல இடங்களிலும் நாகரீகம் வாய்ந்த உயர் சமயக் கொள்கைகளைக் கொண்ட மக்களே பலியிடும் வழக்கத்தை முன்னின்று நடத்துகின்றனர். இவ் வறியாமை நீங்க வேண்டும்.

நமது தேவாலயங்களின் கோபுரங்களிலும், சுவர்களிலும், கற்றூண்களிலும், ரதங்களிலும் செதுக்கப் பட்டுள்ள சிற்ப நிர்மாணங்களின் திறமையும், உயர்வும் ஒரு புறமிருப்பினும் அவற்றில் முக்கியமாகப் பல ஆபாசமான சித்திரங்கள் வரையப் பட்டுள்ளதை யாரே மறுக்க முடியும்? நாணமும், கவுரவமும் படைத்த இரு ஆடவர்கள் ஒன்று கூடிக் கண்ணுற் காண முடியாத அவ்வளவு இழிவான சித்திரங்களைப் பரிசுத்தமான தேவாலயங்களில் ஸ்திரீ புருஷர்கள் பலருங் கூடிக் காணக் கூடிய பகிரங்கமான இடங்களில் அமைத்திருக்கும் நம் முன்னோர்களின் அறிவை வைதீக பண்டிதர்கள் தான் புகழ வேண்டும்! ஜகன்னாத க்ஷேத்திரத்தின் கோயில்களில் எண்ணற்ற ஆபாசமான சித்திரங்கள் இருக்கின்றனவாம். அவற்றின் இழிவைக்கருதி அச் சித்திரங்களை யாரும் புகைப் படம் (Photo) எடுக்கக் கூடாதெனத் துரைத்தனத்தார் சட்டம் விதித்திருக்கிறார்களெனத் தெரிகிறது. என்னே நம் சிற்பங்களின் நிலை! அவை அக்காலத்தில் எக்கருத்தைக் கொண்டு ஏற்படுத்தப் பட்டிருப்பினும் இன்று அச்சித்திரங்கள் அழிக்கப் பட வேண்டியவையல்லவா? சின்னாட்களுக்கு முன்னர்த் திருநெல்வேலியில் நடை பெற்ற சைவப் பெரியார் மகா நாட்டில் தலைமை வகித்த அறிஞர், திருவாளர். S. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L T. அவர்களோடு யாம் ஒரு சிலர், சில ஆண்டுகளுக்கு முன் கரூருக்கு அருகேயுள்ள ஒரு தேவாலயத்திற்குச் சென்ற போது அங்கே சித்தரித்திருந்த ஆபாசமான சித்திரங்களைக் கண்ணுற்ற

நாங்கள் வருந்திப் பேசிய சம்பவம் இன்னும் எமது அகக்கண் முன் நிற்கிறது. ஆயினும் மேதக்க அறிவு படைத்த சைவப் பெரியார்கள் பலர் கூடி, திருப்பாதிரிப்புலியூரின் கண்ணே திரு. மறை மலையடிகளின் தலைமையின் கீழ் நடத்திய மகா சபையில், இத்தகைய இழிவான சித்திரங்களை ஆலயங்களினின்றும் நீக்க வேண்டுமெனப் பொருள் படும் தீர்மான மொன்று செய்தார்களன்றி அத்தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வர அவர்கள் இதுவரையில் என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டுள்ளார்களென்பதை அறிய முடியவில்லை. எனினும் எதிர் காலத்திலாயினும் வைணவ, சைவ சமயக் கூட்டத்தார்கள் வெறுந் தீர்மானங்களோடு நில்லாமற் காரியத்தில் இக் குறைகளை நீக்க முயலல் வேண்டும்

தேவாலயங்களில் பெண்களுக்குப் பொட்டுக் கட்டி விட்டு அவர்களைப் பகிரங்க விபசாரிகளாக வாழ நம் சமயத்தின் பெயரால் அனுமதிப்பது எவ்வளவு ஆபாசமென்பதைக் கவனியுங்கள். தெய்வ பக்தியின் மேலீட்டால் குடும்ப விவகாரங்களை விட்டொழித்துக் கோயில்களை யடைந்து, கோயிற் றிருப்பணிகளை யாற்றிக் கொண்டு, தூய வாழ்க்கையைக் கைப்பற்றிக், கடவுள் வழிபாடு செய்து கொண்டு, காலத்தைக் கடத்துவதற்கு முற்காலத்தில் ஆடவரும், பெண்டிரும் அநேகர் முன் வந்தனர். அப்படிப் பட்ட ஆடவர்களுக்குத் தாசர்களென்றும், பெண்களுக்குத் தாசிகளென்றும் பெயர்கள் ஏற்பட்டன. அந்தத் தாசர்களும், தாசிகளும் பொது மக்களைவிட அறிவிலும், ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும் சிறந்து விளங்கினர். அஃது நாளடைவில் மாறி இன்று தாசிகளென்றால் பகிரங்க விபசாரிகள் என்ற நிலைக்கு வந்து விட்டது! இந்த விபசாரிகள் கோயில்களுக்கு அவசியமென்று வலியுறுத்தும் சில ஸ்தல புராணங்களும் தோன்றி விட்டன!! எப்படியாயினும் ஆகுக. இன்று கடவுள் பெயரால் தேவாலயங்களில் விபசாரிகளை வைத்திருக்கும் வழக்கத்தை யொழித்தே யாக வேண்டும். இது பற்றிச் சமீபத்தில் சென்னைச் சட்டசபையில் ஸ்ரீமதி. டாக்டர் முத்துலக்ஷிமியம்மாள் அவர்கள் கொண்டு வந்து நிறை வேற்றிய சட்டத்தால் தாசிகள் சமூகமே



அற்றுப் போய்விடுமென்று சிலர் கூச்சலிடுகின்றனர். அக் கூச்சலுக்குச் சில பத்திரிகைகளும் உற்சாக மூட்டி வருகின்றன. அது தவறு. கோயில்களில் தாசிகளின் திருப்பணி தேவையில்லையென்பது தான் அச்சட்டத்தின் நோக்கமேயொழிய, கோயில்களின் பெயரால் விபசார வாழ்க்கை நடத்துவதை விடுத்து, அக் கூட்டத்தினர் பிற சமூகத்தாரைப் போல் தக்க கணவரை விவாகம் செய்து கொண்டு வாழ்வதையும் தடுத்து, அவர்களை உலகத்தி லில்லாமல் அழித்துவிட அச்சட்டம் விரும்பவில்லையென்பதைக் கவனிக்கவேண்டும். மேலும் கோயில்களிலேயே யன்றி, வேறு பொதுக் கூட்டங்களிலும், விவாக காலங்களிலும், காலக்ஷேபத்திற்கென்றும், கலை (சங்கீதம்-நாட்டியம்) ஞான வளர்ச்சிக்கென்றும் ஒழுக்கந் தவறிய-விபசாரிகளாகிய பெண்களைக் கொண்டு ஆடல் பாடல்களைச் செய்து களிப்புறும் தீய வழக்கம் நமது நாட்டை விட்டகல வேண்டுவது அவசியம்.

தேவாலயங்களில் ஆபாசமான கதைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு பல திருவிழாக்கள் நடத்தப் படுகின்றன. திருவரங்கத்தில் கடவுள் தம் மனைவிக்குத் தெரியாமல் நாச்சியார் என்னும் அன்னிய மாதினிடத்தில் விபசாரம் செய்துவிட்டுத் திரும்பித் தம திருப்பிடம் வருவதும், அது காலை தம் மனைவியார் கதவடைத்து ஊடல் புரிவதும், மனைவியாரின் கோபத்தைப் போக்கப் பெருமாள் பல பொய்களைக் கூறுவதும் ஆகிய சம்பவங்களை நடித்துக் காட்டும் திருவிழா வொன்று வருடந்தோறும் நடை பெறுகிறது. இது போன்ற மற்றும் பல ஊழலான விழாக்கள் பல கோயில்களில் நடை பெறுகின்றன. இவ் விழாக்கள் மக்களுக்கு என்ன நீதியைப் புகட்டுகின்றனவோ? என்ன கடவுள் பக்தியை யூட்டுகின்றனவோ? யாம் அறிய முடியவில்லை. வைதீக பண்டிதர்கள் தான் இவற்றிற்குத் தத்துவார்த்தங் கூறவேண்டும்! எனவே இவ்வித இழிவான விழாக்களை யொழிக்க முயலாமல் இதை எடுத்துக்கூறும் பிறரைத் தூஷிப்பதால் என்ன பயன் ?

சமீபத்தில் எமது நண்ப ரொருவருடன் திருப்பாதிரிப்புலியூரின்கண் ணுள்ள பாடலீசுவர சன்னிதானத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு ஒவ்வொரு இரவும் ஓர் அறையில் கட்டில்

வைத்துப் பள்ளியறையாக அலங்கரித்து, அங்கே அம்மன் விக்கிரகத்தையும், ஈசுவரன் விக்கிரகத்தையும் கொணர்ந்து படுக்க வைக்கும் காக்ஷியைக் கண்டு எம்மனம் வருந்தியது. இவ்வழக்கம் மற்றும் பல கோயில்களி லுண்டு. இதுவுமா சமயம்? சமய வாழ்க்கைக்கு-தேவ பூசைக்கு இச் சடங்குமா அவசியம்? ஒரு பக்தருக்கு ஈசுவரன் பணியாளனாகவந்து தாசி வீட்டுக்குத் தூது போன கதையும் பிரசித்தமான ஒரு கோயிலில் திருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது! இது போன்ற பல திருவிழாக்களைக் கூறலாம். இத் திருவிழாக்களை யொழித்துச் சீர்திருத்தம் செய்தால் நமது சமயமும், கோயில்களும் போய்விடுமா? உண்மை யன்பர்களே! யோசியுங்கள்.

நமது இந்து சமயக் கோயில்களில், நம் மிந்து சமயத்தைச் சேர்ந்த நம்முடன்பிறப்பா ராகிய தீண்டப்படாதா ரென்பவர்களை உட்புகுந்து கடவுளைத் தரிசிக்கவும் விடாமல் தடுத்திருக்கின்றோம். தீண்டப் படாதா ரென்பவர்களைவிட ஒழுக்கத்திலும், தூய்மையிலும், பக்தியிலும் தாழ்ந்த பலபேர் உயர்ந்த சாதியிற் பிறந்தா ரென்ற காரணத்தால் அவர்களைக் கோயில்களுக்குள் வர அனுமதிக்கின்றோம். தீண்டப் படாதார் உள்ளே வந்து விட்டால் கடவுளுக்கே தீட்டு வந்துவிடு மென்றும், கடவுளுக்கு உயிர்க்களை போய்விடு மென்றும், ஆகவே மீண்டும் கும்பாபிஷேகம் செய்து, கடவுளைத் தூய்மைப் படுத்த வேண்டு மென்றும் கூறுகிறவர்களின் அறியாமையைக் கவனியுங்கள். சாத்தான் என்பவன் அசல் ஆதித்திராவிடனா யிருக்கையில் நமது தெருக்களிலும், நமது கோயில்களுக் கருகாமையிலும் விடாதிருந்த நாம் நாளைக்கு அவனே கிறிஸ்து மதத்திலோ, மகம்மதிய மதத்திலோ சேர்ந்து, சாமுவேல் என்றோ ஒரு சாய்பு என்றோ பெயரைவைத்துக் கொண்டு வந்துவிட்டால் பேசாமல் தாராளமாக நம் தெருக்களில் நடக்கவும், நம் கோயில்களில் சில மண்டபங்கள் வரையில் வரவும் அனுமதிக்கின்றோம். இதைவிட அறியாமை வேறில்லை. ஆகவே, தீண்டப் படாதா ரெனப்படுபவருக்கு தூய்மையுடன் எல்லோரையும்போல் கோயில்களுக்கு வந்து கடவுளை வணங்கிச் செல்ல உரிமை யளிக்க வேண்டும்.



தேவாலயங்களில் பலபேர் ஏக காலத்தில் உள்ளே சென்று கடவுளை வணங்குவதற் கில்லாதபடி கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம் முதலியவற்றைக் குறுகலாகக் கட்டி யிருப்பதை மாற்றி விசால மாக்கிப் போக்கு வரவுக் கேற்ற நல்ல வழிகளையும் அமைக்க வேண்டும். தற்காலத்தில் வௌவால் நாற்றமும், எண்ணெய்ச் சிக்கும், அழுக்கும், குப்பை கூளங்களும், இருட்டும், ஈரமும் நம் கோயில்களில் மலிந்துள்ள சரக்குகளாகும். இக் குறைகளையும் போக்கி, கோயிற் கட்டிடங்களையும் சுகாதார வசதிக்கேற்ப அமைக்க வேண்டும். கோயில்களில் விக்கிரகங்களின் மீது, வெண்ணெய், நெய், பழம், பால் முதலியவற்றைப் பூசி, அப்படியே அவற்றை அழுகிப் புழுத்து நாறும் நிலையில் விட்டு வைக்கின்றனர். கோயில்களை யடுத்துள்ள திருக்குளங்கள் முதலியன சுத்தப் படுத்துவாரின்றி அசுத்தமடைந் திருக்கின்றன. புண்ணியந் தேட வந்த யாத்திரீகர்கள் அவ் வசுத்த ஜலத்தைக் குடித்தும், அதில் முழுகியும் பல வியாதிகளுக் காளாகின்றனர். ஆயிரக் கணக்கான பணங்கள் இவ்வேழை நாட்டில் ஒவ்வொரு உற்சவத்திலும் தெய்வத்தின் பெயரால் அதிகப்படியான பொங்கல் முதலிய உணவுகளுக்கும், அயல் நாட்டுப் பாணம், மத்தாப்பு முதலிய வேடிக்கைகளுக்கும், துணி மணிகளுக்கும், நகை நட்டுகளுக்கும், வேடிக்கை வாகனங்களுக்கும் செலவாகின்றன வென்பதைக் கவனிக்குமிடத்து அவைகளுக்குத் தக்க சீர் திருத்தங்கள் செய்ய வேண்டு மெனத் தோன்ற வில்லையா? இவ்வாறு எழுதியதைக் கொண்டு எம்மை நாஸ்திக னென்றோ வேறெக்கட்சியைச் சேர்ந்தவ னென்றோ எண்ணிவிட மாட்டீர்க ளெனக் கருதுகிறோம்.

மதாபிமானிகளே! ஆஸ்திகச் செல்வர்களே!! மேலே கூறியது போன்ற குறைகளைக் காலத்திற் கேற்பச் சீர்திருத்துவதற்கு முயலாமல், பிறர் தூஷிக்கிறார்களே யென்று குறை கூறிக் கொண் டிருப்பதாற் பயனில்லை. ஆகவே எழுங்கள்! வேலை செய்யுங்கள்!!

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. —திருக்குறள்.

# எமது அபிப்பிராயம்.

ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மையார்.

செந்தமிழ் ராஜதானியாகச் சிறந்து, சிவமணங் கமழ்ந்து, தடாதகைப் பிராட்டியா ராகிய பெண், அரசு புரிந்து, சங்கம் வளர்ந்து, பொங்கிய புகழ் பூத்த, மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து வெளிவரும் "பாரதி" யென்னும் மாத வெளியீட்டினைக் கண்ணுற்றோம். இதன் ஆசிரியர் ஸ்ரீமாந். ரா. நாராயணசுவாமி அவர்கள் என்பதே அதன் பெருமையைக் குறிப்ப தாகும். ஏற்கெனவே "தேவாங்க மித்திரன்", "ஏல விவசாயி" என்னும் மாத வெளியீடுகளை நடத்தியவரும் இவரே. நாட்டின் நலம் பல கருதிப் பத்திரிகை வாயிலாக உண்மையாய் உழைக்கும் ஊக்கமுடைய இளைஞர் மிகச் சிலரே யாகும். அத்தகைய பிரசுரங்கள் சிலவற்றைக்கூட ஆர்வத்துடன் வரவேற்று ஆசிரியர் முயற்சிக்கு ஊக்கமளிப்போர் மிக மிகச் சிலரேயாவர். இந் நிலைமையில் நம் தமிழ் நாட்டில் எத்துணை முதிர்ந்த தேசாபி மானிகளும் ஊக்கங் குன்றிச் சோர்வுறுதல் இயற்கை. நமது "பாரதி" ஆசிரியரும் இவ் வகையினருள் ஒருவராய் நிற்க வேண்டியவரே யாயினும் சோர்வற்ற மனமும், குறையாத் தேசப்பற்றும், தான் அறிந்துள்ள கீழ் நாட்டு மேல் நாட்டுச் சாஸ்திர ஆராய்ச்சியும் ஒன்றுபட்டுப் "பாரதி" வடிவமாகத் தோன்றி நிலவுகின்ற தென்பதே எம் கருத்து.

தாய் மொழியிலும் தாய் நாட்டிலும் மிக்க அன்புடைய ஒவ்வொருவரும் "பாரதி" யை வரவேற்று ஆசிரியர் முயற்சிக்குத் துணைநிற்க வேண்டியது தலைக்கடமையாகும். "பாரதி" இன்னும் பல பக்கங்களுடன் வெளிவரச் செய்யும் எண்ணம் ஆசிரியருக் குண்டென்பதை நாம் அறிவோம். சுருங்கக் கூறுமிடத்து தன் வாழ்வின் நோக்கமே பத்திரிகை வாயிலாகத் தொண்டாற்றுவ தென்னும் உறுதி யுடையவர் "பாரதி" ஆசிரிய ராதலின் அவர் முயற்சி செழித்தோங்க எல்லாம் வல்ல இறைவி இன்னருள் முன்னிற்ப தாகுக.

---



# ஸர். போஸின் அரிய அற்புத ஆராய்ச்சி.

## (மரணத்தை வெல்லும் மூலிகை)

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி"

### இயற்கை

இயற்கையை அறியுங்கள், இயற்கையின் வழி நடவுங்கள் என்ற சப்தம் அனாதி கால முதல் இன்றும் ஒலித்துக்கொண் டிருக்கிறது. நாளைக்கும் நாளை மறுநாளைக்கும் அந்த ஒலி அப்படியே தான். உலக சிருஷ்டியின் இரகசியத்தைக் கண்டறிவதே இயற்கையைக் கண்டறிவதாகும். உலகப் படைப்பைத் தெரிந்து அனுபவிப்பதே பிரகிருதியைக் கண்டறிந்து அனுபவிப்பதாகும். இயற்கையின் ஆற்றல்களையும் அழகுகளையும் அற்புதங்களையும் கேவலம் எழுத்துக்களால் எவ்வாறு வருணிப்பது? நமது முன்னோர்கள் இயற்கையைத் தேவதை என்றே அழைத்துப் புகழ்ந்து போற்றினார்கள். மண்ணையும் தண்ணீரையும் காற்றையும் நெருப்பையும் ஆகாயத்தையும் வணங்கி இயற்கையைப் பல வழிகளிற் பண்டை இந்தியர்கள் போற்றியிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

அகண்ட ஆழ்ந்த சமுத்திரங்களின் கம்பீரமும் அவைகளின் நீல நிறக் காட்சியும் அவைகளில் அடங்கி யிருக்கும் ஐஸ்வர்யங்களும் பிராணிகளும், மலைகளின் உன்னதத் தோற்றமும் அவைகளில் அடங்கியவைகளின் ஆச்சரியத் தோற்றங்களும் அங்கு காணப்படும் குன்று குழிகளும் சிங்காரப் பள்ளத் தாக்குகளும் அடர்ந்த கானகங்களும்

அங்கு உற்பத்தியாயிருக்கும் மரஞ் செடி கொடிகளின் அழகுகளும் அங்கிருந்து அநேக சிற்றருவிகளாய்ப் புறப்பட்டுப் பல காணாறுகளாகிக் கடைசியிற் சில சிற்றாறுகளாகி முடிவிற் பேராறுகளாய் விளங்கி ஓடும் காட்சிகளும் இன்னும் அநேக அற்புதங்களும் மனதை அள்ளிக் கவரத் தக்கன. நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கும் பூமியையும் இதிற் காணும் அதிசயங்களைப் பற்றியும் சுருக்கமாக எப்படி இங்கே இயம்புவது? ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாலோ பகலில் சூரியனுடைய காந்தியையும் சக்தியையும் அதனால் ஏற்படக் கூடிய செயல்களையும் இரவில் சந்திரனுடைய அழகையும் அமைப்பையும் இன்னும் வான மண்டலத்தில் நட்சத்திரங்களும் கிரகங்களும் விளங்கும் காட்சிகளையும் எவரே கண்டு களிக்காதவர்? சுருங்கக் கூறினால் இயற்கை அன்னையின் அபார அருஞ் சக்திகளும் விநோதங்களும் எல்லையற்றவைகள். இயற்கை நியதியின்படியே உலகம் இருக்கிறது, நடக்கிறது, என்று கூறல் வேண்டும். தற்கால நவ நாகரீகத்தில் உழன்றதின் பயனாக உயர் வைத்தியர்களே பெயர்கள் தெரியாது, என்ன செய்வதென்றறியாது திகைத்து நிற்கும்படியான கொடிய வியாதிகள் உண்டாகிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் "இயற்கைக்குத் திரும்புங்கள், இயற்கைக்குத் திரும்புங்கள்" என்று அறிஞர்களும் இயற்கைச் சாஸ்திரிகளும் கூறிக்கொண் டிருக்கிறார்கள். இயற்கை வழி வாழ்ந்தால் மானிடர்களுக்கு நோயேது? துன்பங்களேது?

## பச்சிலைகள்

பிரகிருதியைப் பற்றி எழுதிக்கொண்டே யிருந்தால் எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பற்றி எப்பொழுது கவனிப்பது? உலகத்தையும் அதில் அடங்கிய அனைத்தையும் கடவுள் மக்களுக்கு அனுகூலமாகவே படைத்திருக்கிறார். "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்பது ஆன்றோரது அமிர்த வாக்கு. உலகத்தில் எல்லாம் இருக்கின்றன. அவைகளைக் கண்டறிந்து அனுபவிக்க வேண்டியது மனிதரது கடமையே யாகும்.



இயற்கை விதிகளை மீறியதால் தண்டனையாக எத்தனையோ கஷ்ட ரோகங்களும் துன்பங்களும் துக்கங்களும் மானிடர்களுக்கு உண்டாகிக்கொண்டிருக்கின்றன. அவ்வாறு வரும் வியாதிகளுக்கெல்லாம் மாற்றுக்களையும் பல வகைகளில் உண்டாக்கி நம்மைக் காத்துவரும் ஆண்டவனுடைய பெருமைகளை நினைத்தால் பேச முடியாது-ஊமையன் கனாக்கண்டு பேசமுடியாது இருப்பதைப் போன்று மானிடர் திகைத்து நிற்க வேண்டியிருக்கிறது.

காற்று, வெளிச்சம் முதலிய இயற்கை விஷயங்களை விட்டு விட்டுத் தாவர உலகில் பிரவேசிப்போமாக. தாவர வர்க்கத்தில் எத்தனையோ உயர் மூலிகைகள்-இயற்கை மருந்துகள் இருக்கின்றன. மனிதர்கள் பச்சிலைகளைப் பற்றி அதிகமாய் அறியாம லிருப்பது உலகத்திற்கே துர் அதிர்ஷ்டமே யாகும். அறியாமையால் மனிதர்கள் மூலிகைகளின் மர்மங்களைத் தெரியாது வெறுத்துத் தள்ளுகிறார்கள். மூலிகைகளே பிரகிருதா தேவியால் நமக்கு அளிக்கப்பட்ட மருந்துகள். பழ வர்க்கங்கள் எப்படி மனிதர்களுக்கு உணவாகின்றனவோ அப்படியே பச்சிலைகளும் மனிதர்களுக்கு மருந்தாகின்றன. எல்லா மூலிகைகளிலும் வியாதிகளைக் குணப்படுத்தும் சிற்சில சக்திகள் மனித சமூகத்தின் உபயோகத்திற்காக இருக்கின்றன. ஒரு மூலிகையின் வேரிலும் இன்னொரு மூலிகையின் பட்டையிலும் வேறொன்றின் இலைகளிலும் மற்றொன்றின் புஷ்பங்களிலும் பிறிதொன்றின் விதைகளிலும் இனியொன்றின் சமூலத்திலும் இச் சக்திகள் காணப்படுகின்றன. "புற்களை ஆடு மாடுகளுக்குப் படைத்திருப்பது போலவே மனித உபயோகத்திற்காகப் பச்சிலைகளை ஆண்டவன் உண்டாக்கி யிருக்கிறார்" என்று பைபிள் கூறுகின்றது.

அநேக வியாதிகளுக்குப் பச்சிலைகள் இருக்கின்றன என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. காய கற்பம் (காயம் = உடல்; கற்பம் = கோடி யுகம் = உடலைக் கற்ப காலம் வரைக்கும் வைத்திருக்கும் மருந்து) பச்சிலைகள் மூலம் நமது சித்தர்கள் செய்துகொண்டதாகச் சாஸ்திரங்களிலிருந்து அறிகிறோம். மனித தேகத்தை வச்சிர தேகம் போன்று மூலிகைகள் செய்யுமானால் அவைகளின் பெருமை

களை விவரிக்கத் தேவையில்லை. தாழ்ந்த லோகங்களிலிருந்து மூலிகைகளின் மூலம் தங்கம் செய்யலாமென்றும் ஆகாயத்தில் பறந்து செல்ல உபயோகமாகும்படியான ககன குளிகை, ரசமணி முதலியவைகளும் செய்யலாமென்றும் இன்றும் சித்தர் நூற்கள் இரசவாத முறைகளைப் பற்றிக் கூறுகின்றன. பாம்பு முதலிய விஷ ஜந்துக்களின் விஷங்களுக்கும் இன்றும் நமது தேசத்தில் பல விடங்களில் மூலிகைகளை மாற்று மருந்தாக உபயோகிக்கிறார்கள். கொடிய மிருகங்களும் விஷ ஜந்துக்களும்கூட அடங்கி நடக்கும்படி செய்யவல்ல மூலிகைகளும் இருக்கின்றதாகச் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். உதாரணத்திற்காக ஒன்று இங்கே கூறுகிறோம். பாம்பாட்டிகள் பாம்புகளை ஒரு செடியின் வேரைக்கொண்டே அடக்குவதை எல்லோரும் பார்த்திருக்கலாம்.

## இதைப்பற்றிச் சில செய்திகள்

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் சில விசேஷ மூலிகைகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஒரு இடத்தில் ஒரு விறகு வெட்டியான் தனது கோடரியால் தவறித் தன் காலில் வெட்டிவிடவே, இரத்தம் பெருகுவதைக் கண்டு அங்கு முளைத்திருக்கும் காட்டுச் செடிகளின் இலைகளைப் பிடுங்கி இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு வீட்டுக்கு வரவே காயம் ஒட்டிக்கொண்டு குணப்பட்டு விட்டதாகக் கேள்வி. இம்மாதிரியான சம்பவங்கள் இன்னும் பல கேள்விப்படுகிறோம். தெற்கே பொதிகை மலைக்குச் சமீபத்தில் பேத்தேத்தா என்ற ஒரு ஜாதி மரமிருக்கிறதாம். அதன் அடியில் பல வகை வண்டுகளும் பாம்பு முதலிய விஷப் பூச்சிகளும் செத்துக் கிடக்கிறதாக நேரில் கண்டவர்கள் சொல்லுகிறார்கள். சில இடங்களில் மட்டும் சில பச்சிலைகள் இருப்பதாகச் சாஸ்திரங்கள் அறிவிக்கின்றன. கருநொச்சி, கருநெல்லி, அழுகண்ணி, தொழுகண்ணி, செங்கொடிவேலிவேர், கல்தாமரை, ஜோதிவிருட்சம், ஜோதிப்புல் முதலியவைகள் அடைதற்கரிய மூலிகைகளாம். ஒரு முள் தைத்தவுடன் எருக்கிலையின் பாலைத் தைத்தவிடத்தில் அடித்துச் சுமார் ½ மணி நேரம் கழித்து அந்த இடத்தின் இரு பக்கங்களையும் அழுத்தினால் முள் மேலே வந்து விடுவதைக் கிராமவாசிகள் அனு



வரும் அனுபவ பூர்வமாக அறிவார்கள். வனங்களில் வசிக்கும் காட்டு ஜாதியார்களுக்கு நம்மைக் காட்டிலும் மூலிகையின் மர்மங்கள் நன்றாய்த் தெரியும். தேன் எடுக்கப்போகும் காட்டு ஜாதியார்கள் தேனீக்கள் கொட்டிவிடாதபடி ஒரு பச்சிலையின் பொடியை உபயோகப்படுத்துகிறார்கள் என்று தெரிவிக்கிறோம். ஒரு வியாதியஸ்தன் ஒரு மலையில் தன் கண்ணுக்குத் தென்பட்ட இலைகளையெல்லாம் பிடுங்கி அவித்துச் சாப்பிட்டதால் தனது வியாதி போய்விட்டதாக அறிவிக்கிறான்.

நமது தமிழ்நாட்டு 18 சித்தர்கள், மூலிகைகளைப் பற்றிப் பற்பல நூற்களை இயற்றி நமக்கு அருந் தனமாக வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்! சாதாரணமாய் மூலிகைகளைப் பற்றி அவர்களுடைய நூலிலிருந்து இரண்டொரு கவிகள் இங்கு கூறுவது அவசியமாயிருக்கிறது:—

போமேதான் பேய்ப்புடலால் பித்தந்தானும்
புகழ்வட்டத் திருப்பியென்றால் பேதிகட்டுஞ்
சோமேதான் குமிளுக்குச் சன்னிபோகுங்
கொடியபெருங் குமிளுக்குச் சுரங்கள்போகுந்
தேமேதான் தேவதாருஞ் சிலேஷ்மத்தையறுக்குஞ்
செப்பரிய வெள்ளையென்றால் வாதம்போகும்
ஆமேதான் பரணிக்கு அத்திசுரம்போகும்
அருங்கண்டங் கத்திரிக்குச் சுவாசம் போமே.

சுவாசமொடு காசம்போஞ் சிறுவழுதலைக்கு
செப்பரிய வழுதலைக்குச் சிலேஷ்மம்போகும்
நிவாசமாம் நெரிஞ்சிலுக்கு மூத்திரக் கிரிச்சம்
நேரான வில்வமது சத்திபோகும்
மூவாசமா முன்னைக்கு மேகம்போகு
மூர்க்கமாங் கழற்கொடிக்கு விரைவாதம்போம்
வாசம் வெண்கழற்கொடிக்குக் குன்மம்போகும்
வயற் கொட்டைக்கார்த்தைக்கு வாக்குண்டாமே.

(போகர் கருக்கடை நிகண்டு-500)

ஆயுள் வேதத்திற் பிரசித்தி பெற்ற அஸ்வினி தேவர்களும் மூலிகைகளைப் பற்றி அதிகமாகக் கூறியிருக்கிறார்கள். வேண்டுமானால் அஷ்டாங்க ஹிருதயம் என்ற ஆயுர்வேத வைத்தியப் புஸ்தகத்தைப் பாருங்கள். யூனானி முறையிலும் அப்படியே. சுமார் 2,500 வருடங்களுக்கு முன்னாலேயே பச்சிலைகளின் மகத்துவங்களை அறிந்து அக் காலத்தவர் உபயோகித்ததாகப் பைபிளில் சங்கீதம் (Psalms) என்ற புஸ்தகமும் எண்ணாகமம் (Book of Numbers) என்ற புஸ்தகமும் கூறுகின்றன. கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு 460 வருடங்களுக்கு முன்னமே முன்னிருந்தவர்கள் பச்சிலைகளை அதிகமாய் உபயோகப்படுத்தியதாயும் சுமார் 300 ஆண்டுகளாக பச்சிலைகளை உபயோகப்படுத்திவரும் குடும்பத்தைத் தான் சேர்ந்தவன் என்றும் (Hippocrates) ஹிப்போகிரேட்ஸ் அறிவிக்கிறார். மித்ரிடேடஸ் (Mithridates), பிளினி (Pliny) முதலியவர்களாலும் பச்சிலைகளின் உபயோகங்களைப் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ரோமர்களும் கிரேக்கர்களும் சில பச்சிலைகளின் உபயோகங்களை அறிந்து உபயோகப் படுத்தியதாகக் குறிப்புகள் இருக்கின்றன.

நாம் அனாதிகால முதற்கொண்டு மூலிகைகளைப் பற்றி அறிந்திருந்தபோதிலும், தக்க கவனிப்பின்மையால் மூலிகைகளின் மர்மங்களும் உபயோகங்களும் மங்கி மறைந்திருக்கின்றன. போதாக்குறைக்கு மேல்நாட்டு நவ நாகரீகம் நமது வைத்திய முறைகளை அழித்துக் கொண்டிருக்கிறது. கிராமங்களில் மட்டும் சுதேச வைத்தியமும் மூலிகை உபயோகங்களும் எப்படியோ ஒரு வழியில் எஞ்சி நின்று இப்பொழுது குற்றுயிராய்க் கிடக்கின்றன. சிசுக்களுக்கு மூலிகைகளை உபயோகப்படுத்தாத தாய்மார்கள் கிராமங்களில் இருக்கிறார்களா என்று நாம் கேட்கிறோம்! வியாதிகளுக்குப் பச்சிலைகளை உபயோகப் படுத்தியறியாத ஆண்களோ பெண்களோ கிராமங்களில் உண்டாவென்று நாம் வினவுகிறோம். கிராமத்திலே பிறந்து கிராமத்திலே வளர்ந்து கிராமத்திலேயே வசித்துக்கொண்டு வரும் நாம், இந்திய மூலிகைகளைப் பற்றி எழுத எவ்வளவோ எண்ணினாலும் இங்கு இடம் அனுமதிக்கவில்லை.



## இமயமலை

இமயமலையில் அநேக அபூர்வ மூலிகைகள் இருப்பதாக அறியப்படுகின்றது. ஹிமாலயம் ஹிந்துக்களுக்குப் புனிதமானது. அங்கு அநேக தபசிகளும் முனிவர்களும் சித்தர்களும் இன்றும் இருப்பதாகக் கேள்வி. ஹிமயமலையின் மகத்துவத்தைப் பற்றி அறியாத இந்தியரே கிடையாதெனலாம். ஏகை காவா கூச்சி என்ற, வைத்தியம் தெரியாத ஜப்பானிய சாமியார் ஒருவர் திபேத்துக்குச் சென்ற பொழுது பிணியாளர்கள் அவரிடம் வந்து கட்டாயமாய் ஔஷதம் கேட்ட சமயத்தில் கைக்குக் கிடைத்த மூலிகைகளையெல்லாம் பிடுங்கிக் கொடுத்துப் பலவித வியாதிகளைத் தீர்த்ததாக அவரது யாத்திரைப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். பச்சிலைகளின் குணங்களை அறியாது கொடுத்தும் அவைகள் எல்லாவற்றையும் இல்லாவிட்டாலும் பல வியாதிகளைக் கண்டித்தது மூலிகைகளின் சிறப்பைக் காட்டுகிறது. ருஷிய சக்கரவர்த்தியின் குமாரருக்குப் பல பிரபல்ய டாக்டர்கள் எல்லாம் குணப்படுத்த முடியாத வியாதியை ரஷ்புடீன் என்னும் கபட நாடக துஷ்டச் சாமியார் ஒருவன் சௌக்கியப் படுத்தினானென்றும் அவ்வாறு அவன் உபயோகப்படுத்தியது ஒரு சீன தேசத்து வைத்தியனிடம் வாங்கிய திபேத்து மூலிகை யென்றும் அவனுடைய சரித்திரக்காரர்கள் அறிவிக்கிறார்கள்.

## லீ-சிங்-யுன் என்னும் சீனாது நீண்ட வயது

அறிஞர் ஸர். ஜகதீச சந்திர போஸ் அவர்களது ஆராய்ச்சியைப் பற்றி இங்கு எழுதுவதற்கு முன்பு "சன்டே டைம்ஸ்" (Sunday Times) என்ற பத்திரிகை கூறும், மூலிகையால் யௌவனமாயிருக்கும் லீ-சிங்-யுன் என்பவரைப் பற்றி இங்குக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. லீ-சிங்-யுன் என்ற அறிஞருக்கு இப்பொழுது வயது 252. இப்பொழுது அவரே உலகில் வயது சென்றவர். சைனா மாஞ்சி இராஜ பரம்பரையில் 2-வது சக்கரவர்த்தியான காங்ஹிசி ஆண்டு கொண்டிருக்கும் பொழுது, அறிஞர் லீ-சிங்-யுன் 1677-ம் வருஷத்தில் பிறந்தவர் என்பதை அரசாங்க தஸ்தாவேஜுகள் காட்டுகின்றன.

அவர் யௌவனமாயிருந்த பொழுது ஒரு மருந்து வியாபாரியா யிருந்தார். அவர் யுன்னுன் மலைகளில் (சீன தேசத்து மலைகள்) மூலிகை மருந்துகள் தேடி அலைந்து திரிந்து கொண்டிருக்கும் பொழுது, என்றுமே வாலிபம் உண்டாக்கக்கூடிய ஒரு மூலிகையைக் கண்டு பிடித்தார்.

அவருக்கு 100 வயதாகும் பொழுது அவரது மாகாண அதிகாரிகள் அவரது வயதைக் குறித்துக் கௌரவம் அளிக்கப்பட வேண்டுமென்று மத்திய கவர்ன்மெண்டாருக்கு மனுச் செய்து கொண்டது அரசாங்க அறிக்கைகளில் காணப்படுகின்றது. 200 வயது அவருக்கு ஆகும்பொழுது மாகாணச் சர்க்கார் மீண்டும் அவர் வயதிற்காக மரியாதை அளித்துக்கொண்டாட வேண்டுமென பீகிங் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்ட பொழுது சைனா மத்திய கவர்ன்மெண்டார் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்களாம்.

விருத்தியான மார்க்கண்டேயனைப் போன்று கண்ணியம் வாய்ந்த இப் புத்ரரத்னத்தின் மூலம் உலகிற்கு மரணத்தை வெல்லும் மூலிகையின் ஆற்றலை அறிவிக்கும் சைனா தேசத்தின் பெருமையே பெருமை. பழுத்த பல கிழவர்கள் கண்ணுறும்படியாக அவர் அநேக விஷயங்களைச் சொல்லுகிறார். இதுவரைக்கும் அவருக்கு 23 மனைவிகள் இருந்து இறந்து விடவே இப்பொழுது ஒரு இளமானைத் தனது 24-வது மனைவியாக விவாகம் செய்திருக்கிறார். அவருடைய கண்கள் பிரகாசமாய் இருக்கின்றன. அவரது தொனி மணியோசை மாதிரியிருக்கின்றது. அவருக்குப் பசி அதிகமாயிருக்கிறதாம். நெப்போலியன் எல்பாவிலிருந்தபொழுதுதான் அவரது தாடி வெளுக்க ஆரம்பித்ததாம். 100 வருடங்களுக்கு முன் சென்றதைக்கூட அறிஞர் லீ மிக இலகுவாகச் சரியான ஞாபகத்துடன் கூறுவதாக லீ-சிங்-யுன்னை முதலிற் கண்டுபிடித்தவரான மின்கியோ சர்வ கலாசாலை உப அத்தியக்ஷகர் புரொபஸர் ஊ-சங்-சீப் அறிவிக்கிறார். இம்மாதிரியான உதாரணங்களால் மூப்பை வெல்லும் மூலிகை உலகிற்கு வெளியாக வேண்டியதிருக்கிறது. காய சித்தி மருந்து கிடையாதென்று சொல்லுகிறவர்களும் மனிதனுக்கு வயது 100 தான் என்று சொல்லுகிறவர்களும்



அறிஞர் லீ-சிங்-யுன் யௌவனத்தைப் பற்றி என்ன சொல்லப்போகிறார்களோ என்ன எண்ணப்போகிறார்களோ என்று எமக்குத் தெரியவில்லை.

## அறிஞர் ஸர். போஸ்

மகாத்மா காந்தி, கவிச்சக்கிரவர்த்தி தாகூர், பேரறிஞர் ஸர் ராமன், டாக்டர் ஸர். ராய், பேராசிரியர் ராதா கிருஷ்ணன் முதலியவர்களால் பாரத மாதா, உலக கௌரவத்தை அடைந்து கொண்டிருக்கிறாள். அதுபோன்று, மரஞ் செடி கொடி புல் பூண்டு முதலிய தாவர வர்க்கங்களுக்கும் மனிதர் போன்றே உணர்ச்சிகள் உண்டு என்பதைத் தனது தாவரவர்க்க உடற் கூற்று ஆராய்ச்சியின் மூலம் நிரூபித்துக் காட்டி உலகத்தையே பிரமிக்கச் செய்து உலகப் புகழை அடைந்து கொண்டிருக்கும் ஸர். போஸ் மூலம் மாதா பாரதி, உன்னத பெருமை அடைந்து தனது அருமைக் குமாரனை வாழ்த்திக்கொண் டிருப்பதை அறியாதார் யார்?

## ஸர். போஸின் அபூர்வ அபார அதிசய ஆராய்ச்சி

விஞ்ஞான சாஸ்திரத்தால் உலகில் திடீர் திடீர் என்று பல விஷயங்கள் கண்டறியப் படுகின்றன. பண்டித மணி ஸர். போஸ் தாவரங்கள் வளர்வதை அளக்கும் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்த நுட்பமான கருவி தாவர வர்க்கங்களின் உள் அசைவுகளையும் காட்டுகின்றது. தாவர வர்க்கங்களும் பிராணி வர்க்கங்களும் ஒரே ரீதியில் வாழ்கின்றன என்பதை, ஆராய்ச்சிகளின் மூலம் நிதர்சனமாய் போஸ் ஆராய்ச்சிச் சாலையின் ஆண்டு விழாவில் சமீபத்தில் காட்டப்பட்டது. இந்த நவீன ஆராய்ச்சியின் மூலம் சாஸ்திரீய விவசாய உலகில் ஒரு பெரும் மாற்றம் ஏற்படுமென்று எண்ணவேண்டி யிருக்கிறது.

## மரணத்தை வெல்லும் மூலிகை

மனிதருக்கு இரத்தக் குழாய்கள் இருப்பது போலவே தாவர வர்க்கங்களுக்கும் இருக்கின்றனவென்றும் மனிதருக்குப் போன்

றே தாவர வர்க்கங்களுக்கும் இருதயங்களும் இருக்கின்றனவென்றும் ஸர். போஸால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. முதலில் செடிகளுக்குள் விஷத்தை ஊசியின் மூலம் குத்தி யேற்றி (Inject) அவைகள் பாதிக்கப் பட்டவுடன் இமய மலையிலிருந்து கொண்டு வரப்பட்ட ஓர் செடியினின்றும் எடுக்கப்பட்ட சத்தை ஷை பாதிக்கப்பட்ட செடிகளுக்கு ஊசியின் மூலம் ஏற்றப் பட்டபொழுது, இரண்டு நிமிஷங்களுக்குள் வாட்டம் ஒழிந்து அச் செடிகள் செழிப்பாய்க் காணப்பட்டன. இந்த ஆராய்ச்சியைக் கண்ணுற்றுக் கண்டு களித்தோர் பலர். பரீட்சைக்காக ஒரு தவளைக்கு நஞ்சு ஊட்டப்பட்டது. அதன் ஹிருதயத் துடிப்பு நின்று விட்டது. அது மாண்டுவிட்டதென்றே சொல்லவேண்டிய அச் சமயத்தில் புதிய பச்சிலையின் சத்தில சில துளிகள் ஊசியின் மூலம் குத்தி யேற்றப்பட்டது. அத் தவளைக்கு இருதயத் துடிப்பு பழையபடி உண்டாகி விட்டது. இதனால் அந்தத் தவளை கொஞ்சங்கூடக் கெடுதி யடையவில்லை. ஆனால் அது முன்னையினும் வன்மை யுடையதாகக் காணப்பட்டது.

இது மாதிரியாகப் பலவித பச்சிலைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. எந்த எந்த வியாதிக்கு எந்த எந்த பச்சிலைகள் என்றும் எவ்வளவு எவ்வளவு சாப்பிட வேண்டுமென்றும் இனியும் ஆராயவேண்டிய திருக்கிறது.

## இதைப்பற்றி இன்னும் சில விரைங்கள்

உயிர்ப் பிராணிகளில் தாழ்ந்த ஜந்துக்களிலிருந்து உயர்ந்த உயிரினங்கள் வரையில் சோதனைகள் செய்யப் பட்டன. இந்தப் பச்சிலைகள் மனித உடம்பிற்குக் கெடுதி செய்யாதது என்று முதலில் ஸ்தாபிக்கப் பட்டது. இரத்த அணுக்கள் பாதிக்கப்படும் உதிரத்து நோய்களால் தாக்கப்பட்டு இருதய ஓட்டம் நின்று மரணமடையக் கூடிய ஸ்திதியில் வைத்திய சாலையிற் கிடந்த பிணியாளருக்கு இருதய ஓட்டம் உண்டாகுமாறு இந்த மருந்து வெற்றிப் பெற்றது. சில உத்திபன மருந்துகளே வேலை செய்யாது பய



னற்றுப் போகும் படியாய் இருதய ஓட்டமே நின்றிருக்கும் தருவாயில் இந்தப் புதிய மருந்து இருதயத் துடிப்பை உண்டாக்கிப் புத்துயிர் அளிப்பதுதான் இம்மருந்தின் விசேஷ சக்தி. இந்த அரிய மூலிகை ஆராய்ச்சியின் மூலம் வைத்திய உலகில் ஒரு நூதன சகாப்தம் வெகு சீக்கிரத்தில் உண்டாகப் போகிறதென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அறிஞர் போஸ் ஐரோப்பாவில் பல விடங்களில் பிரயாணம் செய்து பல ஆராய்ச்சிச் சங்கங்களில் தனது நூதன பச்சிலையின் ஆராய்ச்சிகளைக் காட்டினாரென்றும் வியன்னா வைத்திய சங்கத்தார் இவைகளைப்பற்றி அதிகக் கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்றும் அவரது மூலிகை ஆராய்ச்சியை நேரிற் கண்டபிறகே இட்டாலிய ஆராய்ச்சிக் கழகத்தார் பிராணிகளிலிருந்து நிணநீர் (Serum) தயாரிப்பதற்குப் பதிலாக இப்பொழுது தாவரங்களிலிருந்து நிணநீர் (Serum) தயாரிக்கும் பொருட்டு முயற்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் பிராணிகளிலிருந்து தயாரிக்கும் நிணநீரால் (Serum) சில தருணங்களில் தீங்குகள் ஏற்படுகின்றன என்றும் தாவர நிணநீரால் அவ்விதத் தீங்கு ஏற்படாதென்று அவர்கள் கருதுவதாயும், பத்திரிகைகள் கூறுகின்றன.

## பச்சிலைகளைப் பற்றிப் போதிக்க வேண்டும்

பணச் செலவில்லாது கஷ்டமில்லாது கடவுளால் அளிக்கப் பட்ட மூலிகைகளை உபயோகிக்காது வீண் மருந்துகளைச் சாப்பிட்டு நோய் கொண்டு இறந்தவர்களோ கணக்கற்றவர்கள். "மருந்து பயனற்றது என்று அறிகிற வைத்தியரே சாமர்த்தியமும் உண்மையும் உள்ள வைத்தியர் என்று சொல்ல வேண்டும்" என்று பேர் போன டாக்டர் வில்லியம் ஆஸ்லர் கூறுகின்றார். "பஞ்சம், கொள்ளை, போர் இவைகளெல்லாம் கொல்லும் மொத்த ஜனங்களைக் காட்டிலும் மருந்தே அதிகமானவர்களைக் கொல்லுகிறது" என்று டாக்டர் குட் (Good) சொல்லுகிறார். "நமது வைத்தியக் கல்லூரிகளில் சாதாரண மூலிகை மருந்துகள்கூடப் போதிக்கப்

படவில்லையே யென்று மதியூகி மகாமந்திரி கிளாட்ஸ்டன் வருந்தப் பட்டார் என்று கேள்வி. தமிழ் நாட்டுச் சகோதரர்கள் **பதார்த்த குண சிந்தாமணி**யையும் மூலிகைகளைப் பற்றிப் பல பெரியோர்களால் எழுதப்பெற்ற நூற்களையும் கவனிக்க வேண்டுகிறோம்.

மூலிகைகளை இனமாகக் கொடுக்கவே ராவ் சாகிப் ஆபிரகாம் பண்டிதரால் தஞ்சாவூரில் ஒரு மூலிகைத் தோட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மதுரையில் சௌராஷ்ட்ர கனவான் ஒருவர் மூலிகைகளை வளர்த்து வேண்டுவோருக்குக் கொடுத்துதவ வேண்டுமென்று தனது சொத்தில் ஒரு பாகத்தை இதற்காகவே ஒதுக்கி வைத்து சாசனம் முடித்துச் சென்றிருக்கிறார்.

அறிஞர் போஸ் ஒரு பெரிய மூலிகைத் தோட்டம் உண்டாக்கப் போகிறார். அப்படியாகும்பொழுது அவரது ஆராய்ச்சிச் சாலையும் தோட்டமும் இந்திய திவ்ய யாத்திரை க்ஷேத்திரமாகவும் தேவாமிருத சாலையாகவும் சுகபுரமாகவும் சத்வைத்திய சாலையாகவும் விளங்குமென்று நாம் நம்புகிறோம்.

போஸ் போன்ற பேரறிஞர்களால்தான் இந்திய நாடு அயல் நாட்டவர்களால் மதிக்கப்படுவதும் தவிர்த்து இந்தியா விடுதலையும் அடையவேண்டிய திருக்கிறது. இவரது அரிய ஆராய்ச்சிகள் மனித சமூகத்திற்கே அபார உதவியா யிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. இந்தியாவின் பண்டைக் கலைகளையும் சாஸ்திரங்களையும் இம் மாதிரியான மகா மேதாவிகளால்தான் உலகத்திற்குக் காட்ட முடியும்.

உலகத்திற்கு இன்னும் எத்தனையோ வழிகளில் அநேக அரிய காரியங்கள் செய்யும்பொருட்டுப் பேரறிஞர் ஸர். ஜகதீச சந்திர போஸ் அவர்களுக்கு நோயற்ற உடம்பையும் குன்றாத உற்சாகத்தையும் ஆராய்ச்சிகளில் வெற்றியையும் நீண்ட ஆயுளையும் ஆண்டவன் கொடுத்தருளுமாறு உலகமே பிரார்த்தித்து நிற்கிறது.



# ஆராய்ச்சி மேடை

## சுதந்திர வீரன் "ராணா பிரதாப சிம்மன்"

திருவாளர். நாராயணஸ்வாமி தினகரன் என்பவரால் இயற்றிய இந் நூலானது "ராணா பிரதாப சிம்மனு"டைய சரித்திரத்தை மாத்திரம் கூறுவதோ டமையாது, வாசிப்போருள்ளத்திற் சுதந்திர உணர்ச்சியையும், வீரா வேசத்தையும், தேச பக்தியையும் உதிக்கச்செய்யத் தக்கதா யிருக்கின்றது. இதுகாலை விடுதலைப் போராட்டத்தி லீடுபட்டுழைக்கும் இந்தியர் பலர்க்கும் இந் நூல், பெரும் பயனளிக்கவல்லதா யிருக்கின்றது. இந் நூலாசிரியர் மனத்தி லமைந்துள்ள தேச பக்தியும் சுதந்திர தாகமும் பிறவும் இந் நூலை வாசிப்பவருள்ளத்தைக் கவரத் தக்கவா யிருக்கின்றன. அன்றியும் ஆசிரியர் இனிய எளிய தமிழ் நடையில் இந்நூலை அமைத்துள்ள தன்மையால், சாதாரணமான தமிழறிவு பெற்றுள்ள பலர்க்குங்கூடப் பெரும் உபயோகமிக்கதாய் யிருக்கின்றமை பெரிதும் பாராட்டத்தக்கதே.

ஆகவே இந்நூலானது கற்றார்க்கும் மற்றார்க்கும் பயன் மிகப் பெற்றதாயிருக்கின்றது. தேசீய உணர்ச்சி உள்ளா ரெவரும் இந்நூலைப் பெரிதும் விரும்புவார்களென்பது திண்ணம்.

பிரதி 1-க்கு 8 அணா விதம் ரெங்கூன் 242, 36-வது வீதியிலிருக்கும் லோகமான்ய புத்தகசாலை மானேஜரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பண்டிதை-அம்மாள்.

## வியாபார தந்திரம்.

நூலாசிரியர்:-திருவாளர். M. A. செல்லையப்ப முதலியார், வெளியிட்டவர்:-அமிர்தம் அண்டு கோ., சென்னை.

நூலின்விபரம்:- கிரவுன் அளவில் சுமார் 255 பக்கங்களைக் கொண்டது. விலை ரூ 1—8—0

"சுதேசமித்திரன்" "டெய்லி எக்ஸ்பிரஸ்" முதலிய பத்திரிகை யாபீசுகளில் மானேஜரா யிருந்தவரும், "ததாரத்னாகரம்" என்ற மாதப் பத்திரிகையின் அதிபரானவரும், வியாபாரத்தொழிலிற் போதிய அனுபவம் பெற்றவருமாகிய இவ்வாசிரியரால் எழுதப்பெற்ற மூன்று பாகங்கள் கொண்ட இப் புத்தகத்தின் இரண்டாவது பதிப்பின் பிரதியொன்றை நமது அபிப்பிராயத்திற்கு வரப்பெற்றோம். "நாடறிந்தபார்ப்பானுக்குப் பூணூலேதுக்கு" என்றபடி தமிழகத்தில் முதற்பதிப்பின் பிரதிகளனைத்தும் செலவாகிப்போய் இரண்டாவது பதிப்பு வெளியாகியிருக்கும் இந்நூலைப்பற்றி நாம் அதிகங் கூறத் தேவையில்லை. வியாபார சம்பந்தமான தனி நூல்கள் பல, ஐரோப்பிய மொழிகளில் வெளியாகியிருப்பதைப்போல் தமிழில் வெளிவராமை நம் நாட்டிற்கும், மொழிக்கும் ஒரு பெருங் குறையே யென்னலாம். எனவே அக்குறையைத் தீர்க்க நமது நண்பர் (ஆசிரியர்) இந் நூலின்வழியே முயன்றிருப்பது பாராட்டற்பாலதாம். பல விஷயங்கள் பல தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருக்கின்றன. திலகர், மகாத்மாஜி, விவேகானந்தர் போன்ற அறிஞர் பலரது உருவப்படங்களும், ஷையார்களின் அறிவுரைகளும் பல இந்நூலிற் கொடுத்திருப்பது, மனதைக் கவருவனவாம். ஆங்கிலப் புலவர்கள் பலரது நீதிமொழிகளும் ஆங்காங்கே ஆங்கிலத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அச்சுப் பிழைகள்போலும் காணப்படும் இரண்டொரு குறைகளை அடுத்த பதிப்பிலேனும் நீக்குவது நலம். ஏற்கனவே "வர்த்தகயுக்தி" என்ற அரிய புத்தகமொன்றினையும் தமிழகத்திற் களித்துள்ள இவ்வாசிரியர் இத்துறைபற்றி மற்றும் பல நல்ல நூல்களை எழுதி நாட்டிற்கு உதவுவாரென் றெதிர்பார்க்கின்றோம்.

N. V.



# ஆசிரியர் குறிப்புகள்

## சந்தா நேயர்களுக்கு

1929-ம் வருஷத்தில் தாங்கள் "பாரதி"யை ஆதரித்து வந்தது போலவே 1930-ம் வருஷத்திலும் "பாரதி"யை அபிமானிக்குமாறு வேண்டுகிறோம். 1930-ம் வருஷ ஜனவரி மீ பத்திரிகையும் இந்த ஜனவரிக்குள்ளாகவே வெளியிடத் தீவிரமாக வேலை செய்துகொண்டிருப்பதால், 12-வது மணி கிடைத்தவுடன் தங்களுடைய சந்தாக்களைத் தயவு செய்து உடனே அனுப்ப வேண்டுகிறோம். இப்படிச் செய்வதால் வி. பி. க்காக வீணாகச் செலவு ஏற்படாது. சந்தா நண்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சந்தாக்களை விரைவில் தயவுசெய்து அனுப்பி "பாரதி" க்குப் பெருந்துணை செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். அப்படி அனுப்பாதவர்களுக்கெல்லாம் "பாரதி"யின் 2-வது மாலையின் முதல்மணி வி. பி. யில் அனுப்பப்படும். அனுப்பப்பெற்ற வி. பி. யைத் தயவுசெய்து பிரியத்துடன் அங்கீகரிப்பீர்களென்று மிகவும் நம்பிக் கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் முதலிய மற்ற மகாநாடுகளைப் பற்றிக் குறிப்புகளும் இன்னும் பல குறிப்புகளும் ஜனவரி "பாரதி"யில் வெளிவரும்.

## இந்தியத் தலைவர்களும் இராஜப் பிரதிநிதியும்.

மேன்மை தங்கிய இராஜப் பிரதிநிதி வெளியிட்ட அறிக்கையின் மூலம் சிறிது சந்தோஷமுற்ற எல்லாக் கட்சி இந்தியர்களும், தலைவர்கள் மே. த. இராஜப் பிரதிநிதியிடம் கலந்து பேசும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். தலைவர்கள் சந்திக்கும் காலம் 23-12-29 என்று அறிவிக்கப்பட்டது. 23-12-1929 மாலையில் டெல்லி அரசாங்க மாளிகையில் மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, கனம் படேல், ஸர். தேஜ்பஹதூர் சாப்ரு, ஜனாப் மகம்மதலி, ஜின்னா ஆகிய

தலைவர்களுடன் லார்டு இர்வின், லண்டனில் கூடும் சர்வகட்சி மகாநாட்டைப்பற்றிச் சம்பாஷித்தார். சர்வகட்சி மகாநாட்டிற்குச் செல்லும் பிரதிநிதிகள் அங்கு தங்களுக்குப் பிடித்தமான எந்தவித திட்டத்தையும்பற்றி விவரித்துப் பேசலாமென்றும் அம் மகாநாட்டில் ஏகமனதாய்ச் செய்யப்படும் முடிவைப் பிரிட்டிஷார் கௌரவித்துப் பின்பற்றுவார்களென்றும் லார்டு இர்வின் அறிவித்தார். குடியேற்ற நாட்டு அந்தஸ்தைத் தயாரிப்பதே சர்வகட்சி மகாநாட்டின் நோக்கமாயிருக்க வேண்டுமென்றும் அதை ஆதரிப்பதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் முன்னரே வாக்குறுதி கூறவேண்டுமென்றும் இவ்விதம் உறுதி கொடுக்காவிடில் மேற்சொல்லிய மகாநாட்டிற் காங்கிரஸ் கலந்துகொள்ளாதென்றும் காங்கிரஸ் சார்பாகப் பதிற் கூறப்பட்டது. முடிவான திட்டங்களைத் தயாரிக்கும் விஷயத்தில் முடிவான அபிப்பிராயத்தை அறிவதற்காகவே சர்வகட்சி மகாநாடு கூட்டப் படுகிறதென்றும், தாமோ, பிரிட்டிஷ் சர்க்காரோ சர்வகட்சி மகாநாட்டின் வேலையைப்பற்றி முன்னரே தெரிவிக்கவோ, அபிப்பிராயத்தை அறிவிக்கவோ பார்லிமெண்டின் உரிமையை அடக்கவோ இயலாதென்றும் விஷயங்களை விபத்தமாக இராஜப்பிரதிநிதி அறிவித்தார்.

**31-12-1929**-க்குள் இந்தியாவிற்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து கொடுக்காவிடில் சுயேச்சையை வற்புறுத்த வேண்டுமெனத் தேசத்தாருக்குத் தலைவர்கள் தெரிவித்துவிட்டார்கள். நல்லதொரு சந்தர்ப்பம் இப்பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கிடைத்தும் அதை இழந்துவிட்டதிற்காக மிக வருந்துகிறோம். பிரிட்டிஷாரும் இந்தியரும் சமமாய் நேசமாய் வாழவேண்டுமென நாம் விரும்புகிறோம்.

198523
Chennai-600 003

...ஆயுட்காலம் முற்றிலும் வைத்திய ஆராய்ச்சியிலேயே ...க்கொண்டு வருபவரும் தமிழ் சித்த வைத்திய கான்ப...களில் தனது மேலான மருந்துகளுக்காகத் தங்க மெடல் ... வைத்தியபதிப் பட்டமும் பெற்றவரும் அநேக பிரபுக்க...த்தில் பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றவரும் உத்தம...ளையம் தர்ம சித்த வைத்தியசாலை ஸ்தாபகருமான அர்ஜுனன் செட்டியார் அவர்களால் சித்தர் முறைப்படி தயாரிக்கப் பெற்ற

**தங்க ரச பஸ்பம்.**

காலனைப் போன்று வந்த எந்த வியாதியையும் இந்த பஸ்பம் காணாது ஓட்டிக் குணப்படுத்தக் கூடிய அவ்வளவு அபார சக்தி வாய்ந்தது. பிற வைத்தியங்களினால் தீராத ரோகங்கள் என்று கை விடப்பட்ட ரோகஸ்தர் உடனே இதை உட்கொண்டால் 15 நாட்களில் குணம் தெரியும்.

குஷ்டமோ, திமிரோ, பக்கவாதமோ, மேகரோகங்களோ, க்ஷய ரோகமோ, துன்மார்க்க வியாதிகளோ எதுவானாலும் சரியே, நம்பிக்கையுடன் வாங்கி உபயோகித்தால் வியாதிகள் பறக்கும்.

40 நாட்களின் மருந்து விலை ரூ 10—0—0.

ஷை மருந்துடன் சாப்பிட கடுக்காய் அல்லது இஞ்சிலேகிய அனுப்பானம் விலை ... ... ரூ 2—0—0.

**மதனசஞ்சீவி லேகியம். தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.**

இழந்துபோன ஆண்மையை உண்டாக்கும் உயர்ந்த ஔஷதம். இரத்தப் பெருக்கையும் வீர்ய விருத்தியையும் உண்டாக்கி எத்தனையோ நம்பிக்கை யற்றவர்களை தேவாமிருதத்தைப் போன்று காப்பாற்றி யிருக்கிறது.

40 நாள் மருந்து விலை ரூ 5—0—0.

**நீர்வேட்டித் தைலப் பால்சோப்**

நீர்வேட்டித் தைலப் பாலிலிருந்தும், மற்றும் பல மூலிகைகளையும் சேர்த்து தயார் செய்தது. சகல மேகரோகங்களையும் சொஸ்தப் படுத்தக் கூடியது.

சோப் 1-க்கு விலை ரூ 1—0—0.

இன்னும் இங்கு அநேக அரிய மருந்துகளும் கிடைக்கும். ஏழைகளுக்கு இனமாக வைத்தியம் செய்யப்படும்.

**வைத்தியபதி அர்ஜுனன் செட்டியார்,**

தர்ம சித்த வைத்தியசாலை, உத்தமபாளையம், S. இந்தியா.

எதிர்பாருங்கள்!

எதிர்பாருங்கள்!! எதிர்பாருங்கள்!!!

# "பாரதி"

ஆசிரியரால் எழுதப்பெற்ற

பற்பல சுவைகளோடு கூடிய

# வியாசத் தோட்டம்

என்ற

அருமையான புத்தகம் வெளி

வரப்போகிறதை

## எதிர்பாருங்கள்.